26வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com






நதி 26 பாலம் 17 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் SEPTEMBER 01, 2016

# ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்ற இடைத்தேர்தல்!

2016 ஓகஸ்ட் 3இல் ஒன்ராரியோ முதல்வர் Kathleen Wynne ஸ்காபரோ றூஜ் றிவர் தொகுதிக்கான இடைத்தேர்தல் 2016 செப்ரெம்பர் 1இல் நடைபெறும் என அறிவித்தார்.




2014 யூன் 12 இல் நடைபெற்ற ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்காபரோ றூஜ் றிவர் தொகுதியில் இருந்து லிபரல் கட்சியின் சார்பில் Bas Balkisson தெரிவு செய்யப்பட்டார். இவர் இத்தொகுதியின் மாகாண நாடாளுமன்ற உறுப்பினராக லிபரல் கட்சியின் சார்பில் 2005 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இருந்துள்ளார். 64வயது Bas Balkisson எந்தவித காரணங்களையும் கூறாது திடீரென 2016 மார்ச் 22இல் தனது மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகுவதாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து கடந்த நான்கு மாதங்களாக இத்தொகுதி மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் இல்லாது வெற்றிடமாக இருந்து வருகிறது.

ஸ்காபரோ றூஜ் றிவர் தொகுதி தனது வடக்கு எல்லையாக Steeles Avenue East ஐக் கொண்டுள்ளது. தெற்கு எல்லையாக 401 பெருந்தெருவையும், கிழக்கு எல்லையாக Meadowale வீதியையும் Pickering பட்டணசபை எல்லையையும், மேற்கு எல்லையாக Midland Avenue யையும், Brimley வீதியையும் கொண்டுள்ளது. இத்தொகுதியில் 2014 இல் நடைபெற்ற கணக்கெடுப்பின்படி 88,592 வாக்காளர் உள்ளனர். இவர்களில் 47.5% (42,062) ஆனவர்களே 2014 யூன் 12 இல் நடைபெற்ற தேர்தலில் வாக்களித்தனர்.

CBC செய்தி நிறுவனத்தின் தகவலின்படி இத்தொகுதியில் உள்ள வீடுகளில் கிட்டத்தட்ட 45% ஆன வீடுகளில் தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்கள் வாழ்கிறார்கள். அதேநேரம் குடிசனக் கணக்கீட்டின்படி இத்தொகுதியில் 13.6% ஆனவர்கள் இந்துக்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது கனடாவில் அதிகூடிய அளவு இந்துக்கள் வாழும் தொகுதியாக ஸ்காபரோ றூஜ் றிவர் தொகுதி காணப்படுகிறது.

2014 யூன் 12இல் நடைபெற்ற ஒன்ராரியோ மாகாணநாடாளுமன்றத் தேர்தலில் இத்தொகுதியில் லிபரல் கட்சியைச் சேர்ந்த Bas Balkisson 39% (16,095) வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். அத்தொகுதியில் புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட நீதன் சண் 31% (13,019) வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்திற்கு வந்தார். பழமைவாதக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட Raymond Cho 28% (11,500) வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்திற்கு வந்தார்.

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...



















# HOUSE FOR SALE

## 7 Summer Ford Dr




**Bowmanville**
5 Bedrooms,
4 Washrooms,
2900Sqft

## 22 Havery Jones




**Bowmanville**
5 Bedrooms,
4 Washrooms,
3300Sqft

## 21 Berger Ave




**Markham**
4Bedrooms,
4 Washrooms,

1st , 2nd Mortgage for Home/ Business
We buy old houses for highest price
Home Renovation
Home renovation Loan

**CANADA WEALTH MANAGEMENT INC.**
6055 Steels Ave E. Unit C102, Scarborough, ON. M1X 0A7
RANGAN Tel: 647.702.2159

வீடு வாங்க விற்க,

வீடுகளுக்கும், வியாபார ஸ்தாபனங்களுக்கும் 1st,2nd மோட்கேஜ்,

பழைய வீடுகள் பெறுமதி மிக்க விலையில் வாங்கப்படும்.

Home Renovation செய்து கொடுக்கப்படும்.




**கனடாவின் தொழிற்சங்கங்களுக்கு**
இது தொழிலாளர்கள் மீதான அன்பு

கனடாவின் தொழிற்சங்கங்கள் செய்யும் மாற்றங்களை அறிய!
FAIRNESSWORKS.CA

Canadian Labour Congress

**Friends MATRIMONY**

திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...



சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்

- 5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
- மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
- அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்

info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m

| Sri Lanka | Canada |
|---|---|
| Ph: 94-112-363663 | info: 647-709-1536 |
| No-11- 2/1, 33rd lane, | GTA Square |
| Wellawatta, | 5215 Finch Ave. E. Unit 257 |

# ஒன்ராரியோ...

## 01ஆம் பக்கத்தொடர்ச்சி

01ஆம் பக்கத்தொடர்ச்சி

2016 செப்ரெம்பர் 1இல் நடைபெறப்போகும் இந்த இடைத் தேர்தலில் 11 வேட்பாளர்கள் போட்டியிடு கின்றனர். இவர்களது பெயர்கள் ஆங்கில அகரவரிசைப்படியே வாக்களிக்கும் தாளில் எழுதப்பட்டிருக்கும். அவை பின்வருமாறு:

Raymond Cho - பழமைவாதக்கட்சி
Priyan De Silva - பசுமைக்கட்சி
Ania Krosinska - ரில்லியம் கட்சி
Dwight McLean - மக்கள் அரசியல் கட்சி
Neethan Shan - புதிய ஜனநாயகக்கட்சி
Wayne Simmons - சுதந்திரக்கட்சி
Allen Small - விடுதலைக்கட்சி
Piragal Thiru - லிபரல் கட்சி
John Turmel - பிச்சைக்காரன் கட்சி
Queenie Yu - சுயேட்சை வேட்பாளர்
Above Znoneofthe - மேற்கூறிய ஒன்றும் இல்லைக் கட்சி

இங்கு போட்டியிடும் 11 வேட்பாளர்களில் கனடாவில் நாடுதழுவிய பெரிய கட்சிகளாக இருக்கும் நான்கு கட்சிகளான பழமைவாதக்கட்சி, லிபரல்கட்சி, புதிய ஜனநாயகக்கட்சி மற்றும் பசுமைக்கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களில் மூவர் இலங்கையில் பிறந்து கனடாவிற்கு குடிவந்தவர்களாவர்.

இத்தொகுதியில் இவ் இடைத்தேர்தலில் போட்டியிடும் முக்கிய நான்கு கட்சிகளின் வேட்பாளர்கள்:

### பழமைவாதக் கட்சி

இக்கட்சியின் சார்பில் இவ் இடைத் தேர்தலில் போட்டியிட இக்கட்சியின் ஒன்ராரியோ மாகாணத் தலைவர் Patrick Brown ஆல் நியமிக்கப்பட்டவர் 79வயது Raymond Cho ஆவார். இவர் 25 வருடங்களுக்குமேலாக ரொறொன்ரோ மாநகரசபை உறுப்பினராக இருக்கிறார். கடந்த முறையும் இத்தொகுதியில் போட்டியிட்டு மூன்றாவதாக வந்தவர். இவரது தேர்தல் வேலைகளை முன்னின்று கவனிக்கும் முகாமையாளராக Doug Ford இருக்கிறார். Raymond Cho 1967 இல் கொரியாவில் இருந்து கனடாவிற்கு குடிவந்தார். இவர் கொரியா (Hankuk) பல்கலைக்கழகத்தில் இளங்கலைமானி பட்டத்தை பெற்றவர். பின்னர் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் இரண்டு முதுகலை மானிப்பட்டங்களைப் பொதுச்சேவை மற்றும் கல்வித்துறையில் பெற்றார். அதைத் தொடர்ந்து ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் கலாநிதிப்பட்டமும் பெற்றார். இவர் 1991 இல் இருந்து மாநகரசபை உறுப்பினராக பதவி வகிக்கிறார். இவரின் மனைவி Soon Ok உம் இவருடன் சேர்ந்து அரசியல் வேலைகளில் ஈடுபடுகிறார். இவர்களுக்கு மூன்று மகன்கள் உண்டு.

### லிபரல் கட்சி

இக்கட்சியின் சார்பில் நடைபெற்ற வேட்பாளர் தெரிவில் போட்டியிட்ட ஆறு பேரில் வெற்றி பெற்று லிபரல்கட்சி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டவர் 37வயது பிரகல் திரு. இவர் 11வயதில் தனது தாயாருடன் அகதியாக இலங்கையில் இருந்து கனடாவிற்கு குடிவந்தார். பிரகல் திரு யோர்க் பல்கலைக்கழகத்தில் பொதுக்கொள்கை (Public Policy) இல் முதுகலை மானிப்பட்டம் பெற்றவர். அதன் பின்னர் போக்குவரத்துத் திட்டமிடல் துறையில் பணியாற்றி வருகிறார். இவருக்கு ஒன்ராரியோ தொண்டர் சேவை விருதாக வைரவிழா பதக்கம் கிடைத்தது. இவர் கனேடிய தமிழர் பேரவையின் உறுப்பினர். பிரகல் 14வயதில் இருந்தே லிபரல் கட்சியின் உறுப்பினராக உள்ளார்.

### புதிய ஜனநாயகக் கட்சி

இக்கட்சியின் சார்பில் இவ் இடைத் தேர்தலில் போட்டியிடுபவர் 37வயது நீதன் சண். இவர் 16 வயதில் அகதியாக இலங்கையில் இருந்து கனடாவிற்கு குடிவந்தார். இவர் 2012 இல் ஒன்ராரியோ புதிய ஜனநாயகக்கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். ரொறொன்ரோ மாவட்ட பாடசலைகள் சபையின் உறுப்பினராக (Trustee) 2016 ஜனவரியில் இருந்து அங்கம் வகிக்கிறார். இவர் 2006 இல் யோர்க் பிராந்திய மாவட்ட பாடசாலை சபையின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர்.

நீதன் ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களைப் பெற்றவர். கடந்த முறை இத்தொகுதியில் புதிய ஜனநாயகக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு இரண்டாவதாக வந்தவர். நீதன் நீண்ட காலமாகப் பொதுசேவையில் ஈடுபட்டு வருபவர். இவர் இளையோரின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறையுடன் ஈடுபட்டு வருகிறார்.

2003 இல் இருந்து இம்முறையுடன் எட்டாவது முறையாக தேர்தல் ஒன்றில் நிற்கும் நீதன் சண் 2006 இலும் 2016 இலும் பாடசாலை சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர் என ரொறொன்ரோ ஸ்ரார் நீதனை பற்றி கூறியுள்ளது. அது மேலும் தெரிவிக்கையில் 'எனது விசுவாசம் (Loyality) எப்போதும் கல்வி சார்ந்ததாகவே இருக்கும்' என நீதன் ரொறொன்ரோ ஸ்ராரிற்கு செவ்வி அளிக்கும்போது கூறினார் என்கிறது. நீதன் அவருடைய மனைவி தாட்ஷா மற்றும் இரண்டு மகன்களுடன் நீண்டகாலமாக இதே தொகுதியில் வாழ்ந்து வருகிறார்.

### பசுமைக்கட்சி

இலங்கையில் பிறந்து சிறுவயதிலேயே கனடாவந்த Priyan Lakshantha De Silva பசுமைக்கட்சியின் சார்பில் இவ் இடைத் தேர்தலில் போட்டியிடுகிறார். இவர் ரொறொன்ரோ மாவட்ட பாடசாலை சபையில் ஓர் அலுவலக நிர்வாகியாகப் பணி புரிந்தவர். இவர் மனைவி Victoriaவுடன் இத்தொகுதியில் வாழ்கிறார். பசுமைக்கட்சியின் ஒன்ராரியோ மாகாணத் தலைவராக Mike Schreiner இருக்கிறார்.






Store hours: Mon to Fri 11:00 - 8:00 // Sat 11:00 to 7:00// Sun 12:00 to 6:00 Flyers valid up to September 30th, 2016
TECH LINK COMPUTERS
TLC
SALES SERVICE & REPAIR
www.techlinkcomputers.com
9833 Markham Road, Unit 1A- (905)-554-5400
மாபெரும் திறப்பு விழா!!
உங்களுக்குத் தேவையான
computers, laptops மற்றும் Electronics சாதனங்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும்
அவற்றை மலிவு விலையில் திருத்திக்கொள்ளவும் எம்மை நாடுங்கள்.
WE FIX COMPUTERS
BLOWOUT
DELL Monitor
USB 2.0 Ports
Fully adjustable stand
Starting From
$39.99
OFF LEASE
Universal A/C Adapter
Includes 8 Pcs Tips Compatible With Most Notebooks
$19.99
REG: $29.99
BRAND NEW
Mini Projector UC28+
Perfect for DVDs, Pictures, and More!
$89.99
REG: $139.99
BRAND NEW
DELL Latitude Business Series
BLOWOUT
Intel Core i5
Starting From
$189.99
OFF LEASE
GS800L CAR DVR
HD Recording 2.7" TFT HDMI
Motion Detection 4x Zoom Built-in Mic.
BRAND NEW
$29.99
REG: $49.99
Mini DisplayPort to HDMI
BRAND NEW
$9.99
REG: $19.99
Bluetooth Stereo Headphone
Hands-free Calling, Soft & Comfortable Ear Muffs
BRAND NEW
$19.99
REG: $29.99
Selfie stick
235 Degree Rotation
BRAND NEW
$5.99
REG: $9.99
iPhone 5 to HDMI
1.8 Meter
$24.99
REG: $39.99
BRAND NEW
Logitech Wireless Keyboard & Mouse MK270
$24.99
REG: $39.99
OPEN BOX
Bluetooth Music Player
Simple And Easy To Operate
Speaker Phone Function
$19.99
BRAND NEW
REG: $29.99
Power Bank
Charge Your Phone/Tablet On The Go
2A & 1A Outputs 10,400 MAH
$19.99
REG: $29.99
BRAND NEW
Lenovo Desktop
BLOWOUT
Lenovo Desktop With DDR3 4GB/160GB/DVD
Starting From
$89.99
OFF LEASE
HP Elite
Core i5 4GBRAM 250HDD
BLOWOUT
Starting From
$199.99
OFF LEASE
14.4" Laptop Sleeve
Compatible With All Types Of 14.4" Notebooks
$3.99
REG: $9.99
BRAND NEW
Wireless-N Wifi Repeater
More Range For Every WLAN Network
$19.99
REG: $29.99
BRAND NEW
MP4 Multimedia Player
$19.99
REG: $29.99
BRAND NEW
Bluetooth Wireless Keyboard
$19.99
REG: $29.99
BRAND NEW
Tempered Glass Protector
Anti-Shock and Anti-Fingerprint Effect
$4.99
REG: $8.99
BRAND NEW
Mini Clear Speaker
Can be used with USB, SD Card, & AUX Cable
Includes FM Radio.
$19.99
REG: $29.99
BRAND NEW
Multi Card Reader
MacBook Series Beautifully Concise Style
$4.99
REG: $9.99
BRAND NEW
Wireless Mouse
$7.99
REG: $14.99
BRAND NEW
Digital Spy Camera Clock
Remote control & Motion detection video
$34.99
REG: $49.99
BRAND NEW
7" Bluetooth Tablet
8GB Memory Includes Case And Keyboard
$49.99
REG: $69.99
OPEN BOX
10 Port USB Hub
480 Mbps
High Speed USB 2.0
$9.99
REG: $14.99
BRAND NEW
Jackly JK 6066-B
33 in 1 Screwdriver Set with Tweezer & 100mm bar
$6.99
REG: $12.99
BRAND NEW
Aluminium Mini Cooler Pad
Slim & Smart Design. Comfortable & Convenient.
$6.99
REG: $12.99
BRAND NEW
Universal All in 1 Adapter
World Travel Adapter covers more than 150 countries
$6.99
BRAND NEW
REG: $9.99
Mini Helicopter
$29.99
REG: $49.99
BRAND NEW
Galaxy MHL to HDMI Adapter 2M
Turns your phone's USB-port into a HDMI-port
$9.99
REG: $16.99
BRAND NEW
Flat TV Mount 14" to 42"
Compatible With most 14" to 42" LED/LCD TVs
$9.99
REG: $19.99
BRAND NEW
HDMI to HDMI 3M Cable
$3.99
REG: $9.99
BRAND NEW
PRODUCTS ARE AVAILABLE IN LIMITED QUANTITIES. PRODUCTS ARE LIMIT 1 PER CUSTOMER. PRODUCTS MAY NOT BE EXACTLY AS SHOWN. PRICES AND AVAILABILITY ARE SUBJECT TO CHANGE WITHOUT NOTICE. TECH LINK COMPUTERS IS NOT RESPONSIBLE FOR ANY MISPRINTS OR ERROR. ALL TRADEMARKS BELONG TO THEIR RESPECTIVE OWNERS. ALL PRODUCTS ARE 3% CASH DISCOUNTED. IF NOT PAYING BY CASH OR DEBIT, 3% WILL BE ADDED TO THE TOTAL AMOUNT.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

Brokerage Office : 8121–1396, Don Mills Rd, Toronto, ON, M3CB 0A7 Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

நல்ல ரேட்ல மோட்கேஜ் செய்ய வேணும்?

பவர் ஒப் சேல் பிரச்சினை ?

பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் செய்ய வேணும்?

லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேணும் ?

எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க மாத்த வேணும்?

அவசர தேவைக்கு வீட்ட வைச்சு காசு எடுக்க வேணும் ?

வீடு கட்ட மோட்கேஜ் எடுக்க வேணும்?

ரீபைனான்ஸ் செய்ய வேணும்?

2வது, 3வது மோட்கேஜ் எடுக்கவேணும்?



# என் கேள்விக்கு என்ன பதில்?



"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு பதில் கொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

## வோக் இன் - திங்கள் - சனி 9.00 - 5.00 மணிவரை



ஜெ(Jey)இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

# பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தாக்குதல் திட்டமிடப்பட்ட ஒன்றா?

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமிழ் - சிங்கள மாணவர் குழுக்களிடையே இடம் பெற்ற மோதல் சம்பவம் கடந்த யூலை மாதம் இடம்பெற்று, அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக் கும் நிலையில், மற்றுமொரு மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அடுத்த ஒகஸ்ற் மாதத்தில், அதாவது கடந்த 22ம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் மீது சிங்கள மாணவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவம் இன்று தமிழ் மாணவர்கள் மத்தியிலும் அவர்களது பெற்றோர் மத்தியிலும் மட்டு மல்லாமல் நல்லிணக்க செயற்பாட்டாளர் களிடமும் ஓர் அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து, தென் பகுதிகளிலுள்ள பல்கலைக்கழகங்களிலும் உடனடியாக அது பரவி விடுமோ என்கிற அச்சம் அவ்வேளையில் ஏற்பட்டிருந்த போதும், அவ்வாறு எதுவும் நடைபெற வில்லை என்பதால் சற்று நிம்மதி நிலை ஏற்பட்டது. ஆனால், சுமார் ஒரு மாதத்தின் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றுள்ள இந்த மோதல் சம்பவம் யாழ். பல்கலைக்கழக சம்பவத்திற்குப் பழி வாங்கும் வகையில் திட்டமிடப்பட்ட ஒன்றா? தருணம் பார்த்து இது நடத்தப்பட்டதா? என்கிற சந்தேகமும் இப்போது ஏற்பட்டுள் ளது. இது இனவாத தன்மையுடன் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல் அல்லவெனெ இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸாரும், பேராதனை பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் தெரிவிக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சம்பவம் ஒரு வாக்குவாதத்தின் பின்னர் கைகலப்பாக மாறியது என்பது அனைவருக் கும் தெரியும். கடந்த யூலை மாதம் 16ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வின் போது, தமிழ் பண்பாட்டு முறையில் நாதஸ்வரத்து டன் அவர்கள் வரவேற்கப்பட வேண்டும் எனத் தமிழ் மாணவர்களும், கண்டிய நடனத்துடன் வரவேற்க வேண்டும் என சிங்கள மாணவர்களும் விவாதிக்க, இதனால், விஞ்ஞான பீடத்தின் தமிழ் சிங்கள மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் பின் முரண்பாடாக மாறி கைகலப்பு வரை சென்றது. ஆனால் அது ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்றல்ல. குறித்த சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகமும், பொலிஸ் தரப்பும் விசாரணைகளை மேற் கொண்டுள்ளதுடன் இது தொடர்பில் வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைகளும் நடைபெற்று வருகின்றன.



இச்சம்பவத்தில் தாக்குதலுக்குள்ளான சிங்கள மாணவர் ஒருவர் மாணவர் ஒன்றியத் தலைவர் தம்மைத் தாக்கியதாக முறைப்பாடு செய்தார். கோப்பாய் பொலிஸார் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவரான சசிதரனை கைதுசெய்ய முயன்ற வேளை, அவர் நீதிமன்றில் சரணடைந்தார். தற்போது அவர் உட்பட மேலும் மூன்று மாணவர்களும் நீதிமன்றத்தால் பிணையில் விடுதலை செய்யப்பட்டு வழக்கு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இவ்வேளையிலேயே, பேரா தனை பல்கலைக்கழகத்தில் இவ்வாறு ஒரு தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர் கள் மீது கண்மூடித்தனமாகவும் மூர்க்கத்தன மாகவும் தாக்குதல் மேற்கொண்டுள்ளதை தமிழ் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள காயங் களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது. இத்தாக்குதல் சம்பவத்தில் 12 தமிழ், முஸ்லிம் மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

பேராதனை இணைந்த சுகாதார விஞ்ஞான பீட முதலாம் வருட தமிழ் மாணவர்களான இவர்கள் குறிஞ்சிக் குமரன் ஆலயத்திலும், முஸ்லிம் மாணவர்கள் தங்கள் பள்ளி வாசலிலும் வழிபாடுகளை முடித்துக் கொண்டு தமது விடுதிக்கு திரும்பிச் செல்லும் பாதையில் வைத்து அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு 2ஆம் வருட சிங்கள மாணவர்களால் பொல்லுகள் மற்றும் தலைக் கவசங்களினால் தாக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் காயமடைந்த மற்றும் பாதிப்புக் குள்ளான மாணவர்கள் உடனடியாக அன்றைய தினம் 22ம் திகதி, திங்கட்கிழமை மாலை 7 மணியளவில் சக மாணவர்களின் உதவியுடன் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 12 மாணவர்களில் 2 மாணவர்களுக்கு பலத்த இரத்தக் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் உறுதிப்படுத்தி யிருந்தன. தங்களை கைககளை உயர்த்து மாறு பணித்துவிட்டு, தலைக் கவசங்களாலும் தடிகளாலும், தமிழ் மாணவிகள் முன்பாக சிங்கள மாணவர்கள் கொடூரமாகத் தாக்கினர் என்று தாக்குதலில் காயமடைந்த மாணவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மாலை 6 மணியளவில், திடீரென மோட்டார் சைக்கிள்களில் 20 பேரளவிலான சிங்கள மாணவர்கள் வந்திறங்கினர் என்றும், அவர் கள் இரண்டாம் வருட இணைந்த சுகாதார விஞ்ஞானபீடத்தின் மாணவர்கள் என்றும், தங்களை கைகளை உயர்த்திக் கொண்டு நிற்குமாறு கூறிவிட்டு, பின்னர் தாங்கள் அணிந்திருந்த தலைக் கவசங் களால் தங்களைத் திடீரென தாக்கத் தொடங்கினர் என்றும், தடிகளாலும் அடித்தனர் என்றும், தங்களுக்கு மொழி பெயர்ப்புச் செய்யும் மாணவனைத் தனியாக அழைத்துச் சென்று கடுமையாகத் தாக்கினர் என்றும் காயம-டைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மற்றுமொரு மாணவன் தெரிவி த்துள்ளார். இவற்றை வைத்துப் பார்க்கும் போதுதான் இது திட்டமிடப்பட்ட தாக்குதல் என்றோ, அல்லது யாழ். பல்கலைக்கழக சம்பவத்திற்கான எதிர் நடவடிக்கையாக இருக்கலாமா என்றோ சந்தேகம் கொள்ள வைக்கின்றது. இது பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயிலும் ஏனைய தமிழ் மாணவர் களையும் அவர்களது பெற்றோரையும் அச்சமடைய செய்துள்ளது. இச்சம்பவத்தின் பின்னர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதில் அச்சமான நிலைமை காணப்படுவதாக தமிழ் மாணவர்களே தெரிவிக்கின்றனர். இத்தாக்கு தல் சம்பவம் தொடர்பில் பேராதனைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் உபுல் திஸாநாயக்க தலைமையில் அவசரமாக சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட தமிழ் முஸ்லிம் மாணவர்கள், இணைந்த சுகாதார விஞ்ஞான பீட விரிவுரையாளர்கள், பல் கலைக்கழகப் பாதுகாப்பிற்கு பொறுப்பானவர் கள் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் ஆகியோரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

தமிழ் - முஸ்லிம் மாணவர்கள் மீதான தாக்குதல் தொடர்பில் தீர்மானமொன்றை எடுக்கவுள்ளதாகவும், மாணவர்களின் பாது காப்பிற்கு தான் பொறுப்பு என்றும் துணை வேந்தர் இந்தச் சந்திப்பின் போது கூறினார். இந்தப் பிரச்சினை தொடர்பில் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் துணைவேந்தர் உறுதியளித் தார். வழமை யான கல்வி நடவடிக்கைகளைத் தொடரு மாறும் மாணவர்களிடம் கோரிக்கை விடுத் துள்ளார். எனினும், சிங்கள மாணவர்களின் திட்டமிட்ட கொடூர தாக்குதலினால் பல்கலை க்கழகத்தில் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதில் தொடர்ந் தும் அச்சமான நிலைமை உள்ளதாக தமிழ், முஸ்லிம் மாணவர்கள் துணைவேந்தரிடம் சுட்டிக் காட்டினர். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள னர். இது தொடர்பில் குறித்த மாணவர்களின்



**- விகிர்தன் -**


வாக்குமூலத்தைப் பதிவு செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். அத்துடன், அண்மையில் இடம்பெற்ற கூட்டமொன்றிற்கு மாணவர்கள் குழுவொன்று சமூகமளிக்காமை காரணமாக இந்த மோதல் ஏற்பட்டுள்ளது என்று ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது எனவும், இந்த மோதலில் இனவாதம் இருப்பதாகக் கூறப்படுவதில் உண்மை இல்லை எனவும் பொலிஸார் கூறுகின்றனர்

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இதே பீடத்தின் இரண்டாம் வருட தமிழ் மாணவர்களுக்கும், சிங்கள மாணவர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றிருந்தது. இதில் இரண்டு தமிழ் மாணவர்கள் காயமடைந்திருந்தனர். இது தொடர்பில் பேராதனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டது. இதன் பின்னர், இரு தரப்பு மாணவர்களுக்கு இடையேயும் பேச்சு நடைபெற்று இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்று சிங்கள மாணவர்களால் உறுதிமொழி வழங்கப்பட்ட பின்னர், சிங்கள மாணவர் களுக்கு எதிராக தமிழ் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு மீளப்பெறப் பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT

" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb

Commercial

. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm

Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தற்போதைய நிலவரம்

2016 பெப்ரவரி 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை வேட்பாளரைக் கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜுலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து ஜனவரி 20, 2017 வரை)

எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். 2016 ஏப்பிரல் 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப் பார்த்து வருகிறோம். இரண்டு கட்சிகளின தும் தேசிய மாநாடுகள் முடிவடைந்து ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதி வேட்பா ளர்கள் தெரிவும் முடிவடைந்தவுடன் அமெ ரிக்க ஜனாதிபதி தேர்தலின் முதல் இரண்டு பிரிவுகளும் முடிவடைந்து விட்டன. தற்போது மூன்றாவது பிரிவான தேர்தல் பிரசாரமும் பொதுத்தேர்தலும் ஆரம்பமாகி விட்டது. இம்மூன்றாவது பிரிவு எதிர்வரும் நொவம்பர் 08, 2016இல் நடைபெற இருக் கும் பொதுத் தேர்தல் வரை தொடரும்.

### முக்கிய நான்கு ஜனாதிபதி வேட்பாளர்களும் பின்வருமாறு

ஜனநாயகக்கட்சி - Hillary Clinton
குடியரசுக்கட்சி - Donald Trump
Libertarian கட்சி - Gary Johnson
பசுமைக்கட்சி - Jill Stein

CBC ஒகஸ்ட் 27 ஆம் திகதியின் கருத்துக் கணிப்பின் படி அமெரிக்க மக்களில் வாக்களிக்கத் தகுதி உள்ளவர்களில்
46.3% ஆனவர்கள் Hillary Clinton ஐ ஆதரிக்கிறார்கள்
41.4% ஆனவர்கள் Donald Trump ஐ ஆதரிக்கிறார்கள்
12.4% ஆனவர்கள் ஏனைய கட்சி வேட்பாளர்களை ஆதரிக்கிறார்கள்



கடந்த விளம்பரம் இதழ் வெளிவரும்போது நாடுதழுவிய வாக்குகளில் 6.4% அதிகப்படி யான வாக்குகளைப் பெற்றிருந்த Hillary தற்போது 4.9% அதிகப்படியான வாக்கு களையே பெற்றுள்ளார்.

இன்னும் 70 நாட்கள் தேர்தலுக்கு இருக்கும் இவ்வேளையில் Hillary இன் இந்த 4.9% அதிகப்படியான வாக்குகளை முறியடித்து ஜனாதிபதியாக Donald வரக் கூடிய சாத்தியக்கூறுகள் இன்னமும் உள்ளதாக அரசியல்வாதிகள் அமெரிக்க சரித்திரத்தை உதாரணம் காட்டி விளக்குகிறார்கள்.

1988 இல் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனநாயகக்கட்சி வேட்பாளர் Michael Dukakis தனக்கு எதிராகப் போட்டியிட்ட குடியரசுக்கட்சி வேட்பாளரான George H.W.Bush ஐ விட 17% அதிகப்படியான வாக்குகளை அவ்வருட யூலை மாதத்தில் பெற்றிருந் தார். பின்னர் ஒகஸ்ட் மாதத்தில் அந்த மேலதிக வாக்குகளின் எண்ணிக்கை 7% அதிகப்படியானதாகக் குறைந்திருந்தது. இறுதியில் நொவம்பரில் நடைபெற்ற தேர்தலில் அவர் George H.W.Bush இடம் தோல்வியைத் தழுவினார்.

இதனால் தேர்தலுக்கு இன்னமும் 70 நாட்கள் இருக்கையில் தற்போது வெளி யாகும் கருத்துக்கணிப்புக்களின் வாக்கு வீதத்தைக் கொண்டு தேர்தல் முடிவை எதிர்வு கூறமுடியாது என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

எதிர்வரும் 2016 செப்ரெம்பர் 26 இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையேயான விவாதம் Hempstead, நியூயோர்க் இல் உள்ள Hoststya பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது.

### Donald Trump


Donald Trump இன் கொள்கைகளில் அவரது சட்டவிரோத குடிவரவாளர்களுக்கு எதிராகத் தீவிர நடவடிக்கைகள் எடுப்பது என்று கூறுவதும் தற்போது அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ள பல்வேறு சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை இரத்துச்செய்வது என்று கூறுவதும் கூலித் தொழிலாளர் களிடையேயும் மேற்படிப்பு படித்துப் பட்டம் பெறாதவர்களிடமும் செல்வாக்குப் பெற்றுக் காணப்படுகிறது. ஆனால் அவரது கொள்கைகளான மெக்சிகோவில் இருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குள் வருபவர்களைத் தடுக்க அமெரிக்க மெக்சிகோ எல்லையில் மெக்சிக்கோவின் செலவில் பெரிய மதில் கட்டுவது என்பது அரசியல்வாதிகளால் ஏற்றுக்கொள்ளப்படா விட்டாலும் மக்களிடையே அதற்கு ஆதரவும் எதிர்ப்பும் கலந்த நிலை காணப்படுகிறது.

இதுபோலவே அவரது குடிவரவாளர் களுக்கு எதிரான கொள்கை, சட்டவிரோத குடிவரவாளர்களை நாடு கடத்துவது, பயங்கரவாதத்திற்கு ஆதரவு அளிக்கும் முஸ்லீம் நாடுகளில் இருந்துவரும் முஸ்லீம் மக்களைத் தடைசெய்வது போன்ற கொள்கைகள் அரசியல்வாதி களால் ஏற்றுக்கொள்ளப்படாமலும் அவரை ஓர் இனவாதி போலக் காட்டுவதாகத் தெரிந்தாலும் மக்களிடையே இதற்கு ஆதரவும் எதிர்ப்பும் கலந்த நிலை காணப்படுகிறது.

### Hillary Clinton


Hillary Clinton இன் கொள்கைகளில் மக்களிடம் மிகவும் செல்வாக்குப் பெற்றவையாக, அமெரிக்க மக்களிடையே உள்ள வருமான சமத்துவமின்மையைக் குறைக்க முயலுதல், நாடுதழுவிய மழலையர் (Endorsed universal pre-kindergarten) வகுப்பிற்கான ஆதரவு, சம்பளத்துடன் கூடிய குடும்பவிடுமுறைக் காலம், பெண்களுக்கான சம ஊதியம், வசதி குறைந்த மாணவர்களுக்கு மேற்படிப்புப் படிக்க வசதி செய்து கொடுத்தல், மற்றும் வியாபாரத்தில் வரும் இலாபத்தை ஊழியருடன் பங்கிடும் நிறுவனங்களை ஊக்குவித்தல் போன்றவை காணப்படுகின்றன.

முஸ்லீம் மக்கள் அமெரிக்கா இல் குடியேறுவதைத் தடைசெய்ய வேண்டும்



என்ற Donald Trump இன் கொள்கையை Hillary எதிர்த்தாலும் அவர் Israel விவகாரங்களில் அமெரிக்கா நடுநிலையைக் கடைப்பிடிக்காது என்று கூறியுள்ளார். Israel இன் பாதுகாப்பு விடயத்தில் அமெரிக்கா தொடர்ந்தும் Israel இற்கு ஆதரவை அளிக்கும் என உறுதியளித்துள்ளார்.

சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca








- ஆதித்தன் -

# தமிழர் பிரதேசத்தில் தொழில் வாய்ப்பின்மை இன்று முக்கிய பிரச்சினை!

தமிழ் பிரதேசங்களில் வாழும் மக்கள் இன்று எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினைகளில் ஒன்று தொழில்வாய்ப்பின்மை ஆகும். இதனால் ஏற்படும் வறுமை நிலை பல்வேறு சீரழிவுகளுக்கும் இட்டுச் செல்கின்றது. போரின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்த சரியான திட்டமிடல்கள் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

வடக்கில் நடைபெற்ற, கடுமையான இறுதிக் கட்டப் போரின் பின்னர் அவர்களின் மீள்வாழ்விற்கான நடவடிக்கைகளில் அவர்களுக்கான தொழில் வாய்ப்பு என்பது இன்றியமையாததாகும். முன்னைய மஹிந்த அரசாங்கம் அது தொடர்பில் அக்கறை காட்டவில்லை. தற்போதைய அரசாங்கமும் இதற்கு சரியானதொரு தீர்வினை இதுவரை வழங்கவில்லை. எம்மவர்களும் இதில் கவனம் செலுத்துபவர்களாக இல்லை.

மஹிந்த அரசாங்கம் வடக்கில் அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி யருந்தாலும் அதன் பயன்கள் தமிழ் மக்களுக்குக் கிட்டவில்லை என அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் தெரிவித்திருக்கின்றார். அவரது கருத்து முற்றிலும் உண்மையானதே. வடக்கின் அபிவிருத்தி என்ற வகையில், பிரதான நெடுஞ்சாலையை செப்பனிட்டமை, ரயில் பாதையை அமைத்து ரயில் போக்குவரத்தை ஏற்படுத்தியமை இரண்டும் மஹிந்த ராஜபக்ஸ அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்திப் பணிகளாகும். இவற்றின் மூலம் நிறையப் பலன்களை பெற்றவர்கள் அவரது ஆட்களே என்பதும் உண்மை. தொழில் ஒப்பந்தங்கள் மற்றும் கொமிஷன்கள் என இதில் பல விடயங்கள் அடங்கும். இதனால் வடக்கின் மக்களுக்கு பாரிய பயன்கள் எவையும் கிட்டவில்லை.



வடக்கில் ஏற்கனவே இருந்த தொழிற்சாலைகளான காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, ஆனையிறவு உப்பளத் தொழிற்சாலை போன்றவற்றை மீளமைத்தாலேயே ஆயிரக்கணக்கான தொழில்வாய்ப்புக்களை வடக்கு மக்களுக்கு வழங்க முடியும். அதைவிடவும், வடக்கின் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள வளங்களைக் கொண்டும், புதிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். ஏற்கனவே வன்னியில் நெற்செய்கை, தோட்டச் செய்கை என்பன நல்ல நிலையிலேயே இருந்தன. இன்று நூற்றுக்கணக்கான நெல்வயல்கள் கைவிடப்பட்டுள்ளன. இதற்கான காரணம் என்னவென்பதை கண்டறிந்து தீர்வு காணப்பட வேண்டும்.

மிளகாய் செய்கையில் ஒரு காலத்தில் கிளிநொச்சி மாவட்டம் முன்னிலை வகித்தது. மரக்கறி செய்கையும் அவ்வாறே இருந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு கிராமங்கள் வெங்காயச் செய்கையில் சாதனை படைத்தன. இன்று அந்த நிலை இல்லை. கிளிநொச்சி உள்ளிட்ட வன்னிப் பிரதேசங்களில் விளையும் நெல் அப்பிரதேசத்தின் அரிசித் தேவையினை பூர்த்தி செய்ததுடன் யாழ். குடாநாட்டின் அரிசித் தேவையினையும் பூர்த்தி செய்யப் போதுமானதாக இருந்தது. இன்று வடக்கின் அனைத்துப் பிரதேசங்களிலும் தென்னிலங்கையிலிருந்து வரும், இறக்குமதி செய்யப்பட்ட அரிசியினையே மக்கள் கொள்வனவு செய்து பயன்படுத்துகின்றனர்.

மரக்கறிகளும் இன்று தம்புள்ளையிலிருந்தே வன்னிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் வருகின்றது. இந்தியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட செத்தல் மிளகாயே வடக்கின் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. இந்த நிலையை மாற்றி, பழைய நிலைக்கு வடக்கின் உற்பத்தியையும் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்புவதற்கு எவ்விதமான பொறிமுறையும் ஏற்படுத்தப்படவில்லை. போர் முடிவுற்று ஏழு வருடங்கள் கடந்து விட்ட போதிலும், இன்னமும் அது குறித்த சிந்தனை கூடத் தோன்றியிருப்பதாகக் கூற முடியவில்லை. இவற்றையெல்லாம் இன்று மேற்கொள்ள வேண்டிய கடமை வட மாகாணசபைக்கு உண்டு. ஆனால், அதன் செயற்பாடுகள் இன்று தமிழ் மக்களுக்கு ஏமாற்றமளிப்பதாகவே இருக்கின்றன. போரின் பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய தொழில்வாய்ப்புகள் குறித்த ஆய்வினையும் திட்டமிடல்களையும் மேற்கொண்டு அதற்கான கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் பணி வட மாகாண சபைக்கே உரியது.

காணிகள் விடுவிப்பு, காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சினை ஆகிய இரண்டும் இன்று மக்களின் பிரதானமான, தீர்வு காண வேண்டிய பிரச்சினைகளே ஆனாலும், ஒரு நீண்ட கால நோக்கில், இளம் சந்ததியினருக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான கட்டமைப்புகள் குறித்தும் ஆராய வேண்டியது இன்றுள்ள பிரதான பணிகளில் ஒன்றே.

அரசாங்கம் செய்கின்ற காரியங்களை விடவும் இன்று வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பலர் தங்கள் தொழில் நடவடிக்கைகளை இலங்கையில் மேற்கொள்ள ஆர்வம் கொண்டுள்ளனர். இதில் வடக்கு கிழக்கிலுள்ள வளங்களைக் கொண்டு எவ்வாறான தொழில்களை மேற்கொள்ள முடியும் என்பதற்கு ஒரு வழிகாட்டியாக செயற்பட வேண்டியது அந்தந்த மாகாணங்களின் நிர்வாகத்தை நடத்தும் அமைப்பினரே. இலகுவானதே.

சில தினங்களுக்கு முன்னர் மாற்றுத் திறனாளிகளான சிலரை சந்தித்தேன். அவர்களில் சிலர் கணினியில் தேர்ந்தவர்களாக இருப்பதை அவதானிக்க முடிந்தது. சிலர் கைத்தொலைபேசிகளைத் திருத்துகின்ற பயிற்சியை பெற்றுள்ளனர். தங்களின் சொந்த முயற்சியினால் இதற்கான பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டதாக அவர்கள் தெரிவித்தனர். இவ்வாறான பயிற்சிகளை அனைத்து மாற்றுத்திறனாளிகளும் பெற முடியாமல் உள்ளனர். அதற்கான பொருளாதார வசதிகள் அவர்களிடம் இல்லை. அவர்களுக்கு இவ்வாறான தொழில்களுக்குரிய பயிற்சிகளை வழங்கி அவர்களுக்கான தொழில் கூடங்களை அமைத்துக் கொடுத்தாலேயே அவர்களின் வாழ்வாதார பிரச்சினைக்கு தீர்வை வழங்கலாம். எழுந்து நடமாட முடியாமல் சக்கரக் கதிரையில் இருப்பவர்களுக்கு கூட இவ்விதமான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க முடியும்.



இப்போது, புலம்பெயர்ந்து வாழும் தமிழர் பலர் தமிழ் பிரதேசங்களில் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராக வுள்ளனர். தற்போதைய சுமுகநிலையில் தாயகம் வந்துசெல்பவர்கள் இது குறித்து ஆராய்வதை அவதானிக்க முடிகின்றது. அவ்வாறு அவர்கள் ஆர்வம் கொள்கின்ற விடயங்கள் குறித்து அவர்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலமும் தொழில் நிறுவனங்களை தமிழ் பிரதேசங்களில் அமைக்க முடியும்.

தங்கள் உறவினர்களுக்கு அவ்வப்போது பண உதவிகளை மட்டும் செய்யும் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒரு கூட்டுச் செயற்பாடாக வடக்கு கிழக்கில் தொழிற்சாலைகளை அமைத்தால் ஆயிரக் கணக்கானோருக்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் தாங்களும் அதன் மூலம் வருமானத்தைப் பெறமுடியும். இதற்கான திட்டங்களையும் வழிமுறைகளையும் தாயகத்திலுள்ளவர்கள்தாம் புலம்பெயர் உறவுகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

போரின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களில் அங்கவீனமானோர், கணவனை இழந்தோர் இன்று சமூகத்தில் அதிகரித்துள்ளனர். இவர்களுக்கான தொழில்வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதென்பது தனியானதோர் தேவையாகவும் உள்ளது. சிந்தித்து, ஆய்வுகளை மேற்கொண்டு முயற்சித்தால் இதற்கான வழிமுறை என்பதும் மிக

குடும்பத்தின் தலைமையை சுமக்கும் பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்களை மேற்கொள்வதும் நினைத்தால் முடியுமான காரியமே. வன்னியில் போரின் காரணமான கணவன்மாரை இழந்த பெண்கள் அதிகமுள்ளனர். அவர்களுக்கான தொழில் முறைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் ஆய்வு செய்து திட்டமிட வேண்டும். இன்று வன்னியில் இராணுவத்தினரால் பண்ணைகள், பயிர்ச் செய்கைகள் நடத்தப்படுகின்றன. அவற்றில் நூற்றுக் கணக்கானோர் வேலை செய்கின்றனர். அவர்களில் பாதிக்கப்பட்ட பெண்கள் அதிகமாக வேலை செய்கின்றனர். படையினரால் தமிழ் பிரதேசங்களில் இவற்றை மேற்கொள்ள முடியுமானால் இந்தப் பிரதேசத்தில் நிர்வாகத்தை நடத்தும் நம்மவர்களால் ஏன் செய்ய முடியாமலுள்ளது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வடக்கின் பிரதான வளமாக கடல் வளம் உள்ளது. கடலில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களும் தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. அவற்றைப் பதப்படுத்துகின்ற தொழில்களை தெற்கிலுள்ளவர்களே மேற்கொள்கின்றனர். இந்தப் பதனிடும் தொழிற்சாலைகளை வடக்கிலேயே அமைக்கலாம்.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன், தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.




4 Bedrooms, 4 W Room
Upgraded Kitchen Cabinets, Backsplash, Granite Counter Top & Centre Island




4 Bedrooms, 3 W Room
Master Bdrm Has An Amazing 4Pc Ensuite & Walk-In Closet




4+1 Bedrooms, 4 W Room
Professionally Finished Basement With Huge Bedroom




3 Bedrooms, 3 W Room
California Shutters, Oak Staircase, Fire Place




3 Bedrooms, 3 W Room
Dining & Family Room With Gas Fireplace




4+2 Bedrooms, 4 W Room
Large Dining Rm W/ Decorative Columns For Entertaining




4 Bedrooms, 3 W Room
Large Detached Fully Bricked Double Car Garage




3 Bedrooms, 3 W Room
Upgraded Oak Staircase With Iron Picket Rails




3+1 Bedrooms, 2 W Room
Professionally Landscaped Including Stamped Concrete




3 Bedrooms, 3 W Room
Bright And Sun-Filled Home Open Concept Kitchen




3+2 Bedrooms, 2 W Room
Potential Basement Apartment Lots Of Parking




3 Bedrooms, 3 W Room
Open Concept Main Flr & Fam Rm W/ W/O To Yard




3 Bedrooms, 3 W Room
Large Master Bedroom With Sumptuous Ensuite Bath





3 Bedrooms, 4 W Room
Beautiful Hardwood On Main Floor Walk-Out To Balcony




3 Bedrooms, 2 W Room
2 Year New " Sierra" Built Royal Wynd Home

KZG 647-200-5833



Sell your home
**faster**
and more
**money**

RE/MAX Platinum Club Award

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**
Sales Representative
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# மதுபோதையில்...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரபல்யமான கிரிமினல் வக்கீல் திரு. பிலிவ் ஹம்பல் என்பவர் (Mr. Philp Campbell) பொலிசார் ஒருவரைக் கைது செய்யும் போது அவருக்கு உள்ள உரிமைகள், சலுகைகளை பின்வருமாறு தெளிவு பண்ணுகிறார்.



• பொலிசார் கைது செய்யும்போது எதற்காகக் கைது செய்கின்றேன் என்ற காரணம் தெரியப்படுத்த வேண்டும்.

• விசாரணையில் ஒருவர் அவரின் அடையாளத்தினை தெளிவாகக் காட்டிக்கொள்ள வேண்டும். ஆனால் விசாரணையில் மௌனமாக இருக்கும் உரிமை ஒருவருக்கு உண்டு. அவரது வக்கீலுடன் ஆலோசித்து விட்டே பதில் சொல்லுவேன் எனக் குறிப்பிடும் உரிமை உண்டு. ஏனெனில் அவர்கள் குறிப்பிடும் வார்த்தைகளைத் அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் பொலீசார் பயன்படுத்தலாம்.

• தனியாக, இரகசியமாக அவரின் வக்கீலுடனோ அல்லது எவருடனோ கலந்து ஆலோசிப்பதற்கு ஒருவர் கேட்டால் கைதில் வைத்திருக்கும் பொலிசாரே தொலைபேசி ஒழுங்கு செய்து தரவேண்டும்.

• ஒருவர் தனது வக்கீலுடன் கலந்து ஆலோசித்துவிட்டு விசாரணையில் பதில் வழங்கும் உரிமை அவருக்கு உண்டு என்பது கைதின் போது பொலிசார் அவருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

வக்கீலின் சேவை கிடைக்காவிட்டால் இலவச வக்கீலின் சேவைகள் கனடாவில் உண்டு என்பதனை அவர்கள் தெரியப் படுத்தி அந்த உதவிகளை செய்து தர வேண்டும். அந்த உதவிகளும் சேவைகளும் கண்ணியமாகவும் பண்பாகவும் இருக்க வேண்டும்.

இத்தகைய மனித உரிமைகள் மதுபோதையில் வாகனம் செலுத்திப் பிடிபட்டவர்களின் கைதின்போது மீறப்படும்போதே அங்கு அந்தச் சட்டத்தின் பிரிவுகளை உபயோகித்து மேலே குறிப்பிட்ட செய்திகளின் சம்பவங்கள் மாதிரி தப்பி வரும் வாய்ப்புகள் கிடைக்கும்.

# பேராதனை...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

இனியும் இவ்வாறான சம்பவங்கள் நாட்டிலுள்ள எந்தவொரு பல்கலைக் கழகத்திலும் இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இதில் அரசாங்கத்தின் பொறுப்பே அதிகமானது. இது தொடர்பான விசாரணைகளில் எவ்விதமான மூடி மறைத்தலும் இடம்பெறக் கூடாது. இவ்வாறான மோதல் சம்பவங்களில் ஈடுபடுபவர்களின் பின்னால் உள்ள சக்திகள் குறித்து ஆழமான விசாரணைகள் மேற் கொள்ளப்படல் அவசியமானது. விசாரணைகளின் பின்னர் குற்றவாளிகளாக இனங்காணப்படும் மாணவர்களை பல் கலைக்கழகத்திலிருந்து நீக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டால் கூட அது ஏனைய மாணவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகவே அமையும்.

# தமிழர்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

வன்னிப் பிரதேசங்களில் நிறையப் பயன்தரும் மரங்கள் உள்ளன. மா, பலா,



வாழை என்பன கணிசமாக விளைகின்றன. அவற்றைப் பதப்படுத்தி பயன்படுத்தும் பதனிடல் தொழிற்சாலைகளை இங்கு அமைக்க முடியும். உணவு பதனிடும் பயிற்சிகளை இங்குள்ளவர்களுக்கு வழங்கி இதனை ஒரு குடிசைத் தொழிலாகக் கூட உருவாக்க முடியும். இங்குள்ள பழங்கள் தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்து தயாரிக்கப்படும் பழப்பாகுகள் போன்றவை மீண்டும் இங்கு வருகின்றன. அதனை மக்கள் அதிக விலை கொடுத்து வாங்குகின்றனர். வன்னியிலேயே இதற்கான தொற்சாலைகளை உருவாக்கினால் உள்ளூர் உற்பத்தி வளம் பெறுவதுடன், தொழில் வாய்ப்புகளும் பெருகும்.

இவற்றை எல்லாம் இலங்கை அரசாங்கம் செய்யும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலைமை மாற வேண்டும். இங்குள்ள, மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள், நிர்வாகங்கள் இது பற்றி சிந்திக்க வேண்டும். உண்மையான எண்ணத்துடனும், மக்களுக்கான அர்ப்பணிப்புடனும் செயற்பட்டால் இன்றுள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.


**Second Career**

*Planning for a New Career or Upgrading Your Skills?*

**Find Out:**

- Which program best suits your skills?
- What government funding is available for you?
- Which careers have the best job opportunities?



- EENC is an award-winning service network that is connected to 100's of Training Institutions and Employers.
- We are **NOT** a Training Institution.
- Our services are free and you are under no obligation.

*Join 100's Who Say They're Glad That They Called Us First*

EENC.ca Employment and Education Network Canada Inc.

2016 readers' choice Awards WINNER · 2016 readers' choice Awards DIAMOND

Nira (Mon to Fri 9AM to 5 PM)
**(416)-224-5020 Ext: 201**

தமிழில் விபரங்களிற்கு:
**(416)-224-5020 Ext 205**

Second Career மற்றும் அரச நிதியுதவி பற்றிய விபரங்களிற்கு அழையுங்கள்:

**BUSINESS / LAW CAREERS**
Accounting ♦Payroll Admin ♦Business Administration ♦ERP Information System Analysis ♦Banking and Financial Services ♦Paralegal / Law Clerk ♦Property Administrator ♦Hospitality Management ♦Tourism Management ♦Police Foundations/ Immigrant Consultant ♦Supply Chain & Logistics ♦Business Management ♦Business Analysis, Projects & Service Management ♦PMP ...

**IT CAREERS**
Network Administration ♦Graphic/Web Designer ♦Software Quality Assurance and Testing Diploma ♦Network Security Specialist ♦Web & Mobile Developer ♦CISCO ♦LINUX ♦Software Quality Assurance and Testing ♦ITIL ♦Datawarehousing & Business Intelligence ...

**HEALTHCARE & Related**
Medical Office Administration ♦Diagnostic Cardiovascular Sonography♦ ECG/Phlebotomy ♦Aesthetician/ Make-Up Artist ♦Hair Stylist ♦Community Service Worker ♦Personal Support Worker(PSW) ♦Massage Therapist ♦Pharmacy Technician ♦Early Childhood Assistant(ECA) ♦Medical Laboratory Technician ♦Physiotherapist Assistant and Occupational Therapist Assistan♦Food Service Worker ♦Intra Oral Dental Assistant ♦Addiction Worker ...

**TRADES**
HVAC Technician ♦Gas Technician-G3/G2 ♦Home Inspection ♦Construction & Maintenance Electrician Pre-Apprenticeship ♦Electrical Technology ♦Home Renovation Technician ♦Industrial and Commercial Maintenance ♦Civil / Mechinacial / Engineering ♦Welding / Solar Energy Technician ...

**ENGINEERING / DESIGN**
Civil Engineering Design and Technology ♦CNC and MasterCAM Technology ♦Mechanical Engineering Design and Technology ♦Structural Engineering Design and Technology♦Electrical and Electronics Engineering Design & Technology ...

**PHARMACEUTICAL**
Pharmaceutical Manufacturing ♦Pharmaceutical Quality Control ♦Regulatory Affairs ♦Research & Development ♦Industrial Pharmaceutical and Bio-Pharmaceutical Modern Technology ♦Pharmaceutical and Bio-Pharmaceutical Clinical Research ..

# கனேடிய பொருளாதாரமும் ஆதனவியாபாரமும்

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 470**

கனேடிய ஆதன வியாபாரம் குறிப்பாக ரொறொன்ரோவில் பொருளாதார நிபுணர்களால் கூட எதிர்பாராதவிதமாக ஏறக்குறைய கடந்த 20 வருடங்களிற்கு மேலாக ஒரே திசையில் செல்வதனையே காணக்கூடியதாக உள்ளது. இவ்வளவு பெரிய நீண்டகாலத்திற்கு விலை அதிகரிப்பை வளர்ந்த நாடுகளில் காணமுடியாது. கனடாவில் பிறந்து வளர்ந்த, புதிதாக வெளிநாடுகளில் இருந்து வந்து குடியேறியவர்களிற்கு தமது முதல் வீடு / மனையை வாங்குவது என்பது மிகவும் சங்கடமான நிலைமையாகவே உள்ளது. இந்நிலைமை மாறாதா என்பதே பலரின் அங்கலாய்ப்பு. விலை குறையலாம் என்று இலவு காத்தவர்கள் பலரைக் காணக்கூடியதாக உள்ளது. சரித்திரத்தில் குறைந்த வட்டிவீதமும் முக்கிய காரணங்களில் ஒன்று. மத்திய அரசு, நிதி நிறுவனங்கள் மிக இறுக்கமான நிலைமையை அடமானக்கடன் பெறுபவர்கள் மீது பிரயோகித்த போதிலும் ஒப்பீட்டளவில் வியாபாரமும் ஆதனவிலையும் அதிகரிப்பதனையே காணக்கூடியதாக உள்ளது.

கனேடியப் பொருளாதாரம் ஆரோக்கியமான நிலைமையில் இருப்பதாகக் கொள்ள முடியாது. ஆனால் அமெரிக்காவின் நிலைமை கனடாவுடன் ஒப்பிடும்போது சிறப்பாகக் காணப்படுகின்றது. அமெரிக்க மத்திய வங்கியின் ஆளுனர்களின் சந்திப்பில் வட்டிவீத அதிகரிப்பு ஏற்படலாம் எனத் தொடர்ந்து கூறி வருகின்றார்கள். இந் நிலைமை எல்லைக்கோட்டிற்கு தெற்குப் பகுதியில் ஏற்பட்டால், கனடாவும் இதனைப் பற்றித் தீவிரமாக சிந்திக்க வேண்டி ஏற்படலாம். ஆனால் கனேடியப் பொருளாதாரம் இதற்கு இடம் கொடுக்குமா? அண்மைக்காலமாக மத்திய வங்கி ஆளுனர் திரு. ஸ்டீபன் போலஸ், நிதி அமைச்சர் பில் மோனோ முன்னாள் மத்திய வங்கி ஆளுனருக்கு டேவிட் டொட்ஜ், முக்கிய நிதி நிறுவனங்களின் தலைவர்கள் வீட்டின் விலை பற்றித் தமது ஆதங்கத்தைக் கூறி வருகின்றார்கள். குறிப்பாகவும் மிகக் கவனமாகவும், முக்கியமாகவும் ரொறொன்ரோ, வன்கூவர் போன்ற நகரங்களின் கட்டுக்கடங்காத விலையைப் பற்றியே தமது கரிசனைகளைத் தெரியப்படுத்துகின்றார்கள்.

இதன் ஒரு கட்டமாக, யூலை 25, 2016 இல் வன்கூவரின் புதிதாகக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு வாங்குபவர்களிற்கான 15% ஆன நிலமாற்று வரி ஓகஸ்ட் 02, 2016 இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் மிகவும் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது 5 வருடங்களிற்கு முன்பு ஒப்பமிட்டிருந்த ஆதனமாக இருந்தாலும், ஓகஸ்ட் 02, 2016 இற்குப் பிற்பாடு பெயர் மாற்றப்பட்டால் இந்தத் தொகை செலுத்த வேண்டியுள்ளது. ஏற்கனவே இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக வன்கூவர், ஆதன முகவர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். இதுபோன்ற ஒரு புதிதான வரி அல்லது வேறு ஓர் உருவமான சட்டம் ரொறொன்ரோவில் (அதாவது $100 வருமானத்திற்கு கடன் 127.81 ஆகக் காணப்படுகின்றது) கொண்டு வரப்படலாமா? என ரொறான்ரோ பெரும்பாக மக்களிடம் காணப்படுகின்றது. அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படலாம்?

அண்மையில் எடுக்கப்பட்ட கணக்கின்படி பொதுவாக வீடு வாங்குபவர்கள் தாம் இருக்கும் வீட்டை விற்றபின் இருந்ததை விட விலை அதிகமான ஆதனத்தையே வாங்குவதால், அவர்களின் அடமானக் கடன் அதிகரிப்பதாகவே தெரிய வருகின்றது. இந்நிலைமை சிறந்ததாகக் கூறமுடியாது. வாங்குபவர்கள் இதில் கவனம் எடுப்பது நல்லது. கனேடிய மக்கள் மேலும் கடன்காரர்களாகவே மாறுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

**குறிப்பு -**

1. வீட்டின் விலை 15% இனால் இறக்கம் ஏற்பட்டால் 13% அடமானக்கடன்கள் (600,000) வீட்டின் விலையை விட அதிகமாக காணப்படும்.

2. வீட்டின் விலை 25% இனால் இறக்கம் ஏற்பட்டால் 23% ஆன அடமானக்கடன் (1.1 மில்லியன்) வீட்டின் விலையை விட அதிகமாக காணப்படும்.

3. 2005 இல் ரொறொன்ரோவில் சராசரி வீட்டுவிலை $335,907

4. 2015 இல் ரொறொன்ரோவில் சராசரி வீட்டு விலை $622,121

5. 2005 இல் வருமானத்திற்கும் கடனிற்குமான விகிதம் 127,81 ஆகக் காணப்பட்டது. இதே பெறுமதி 2015 இல் 163,62% ஆக காணப்படுகின்றது.


CUSTOM BUILD HOME

Build Your Personalized Dream Home

Starting From $139 / sq ft

Quality ! Price !! Peace of Mind !!!



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு

அனுபவம் நிறைந்த, நாணயமான, தரமான கட்டிட நிபுணர்கள்

Industrial Buildings from $75 / sq ft

TAMB CANADA (647) 877-8262 (TAMB)

# நான் மனிதன்தானே?

மக்கள் செயலிழந்து நிற்கும் போதெல்லாம் 'நானும் மனிதன்தானே' என்ற பல்லவியைப் பாடுகிறார்கள். துரதிர்ஷ்டவசமாக தோல்வி, பலவீனம் ஆகியவற்றுடன்தான் மனிதனை அடையாளப் படுத்துகிறார்கள். தோல்வி மனிதனை துவளச் செய்யும்போது அவனுக்குள்ள சாத்தியம் தான் என்ன? அவன் வாழ்வை வெற்றி நோக்கி திசை திருப்ப அவன் என்ன செய்ய முடியும்???

மக்கள் செயலிழந்து நிற்கும் போதெல்லாம் 'நான் மனிதன்தானே' என்ற பல்லவியைப் பாடுகிறார்கள். துரதிர்ஷ்டவசமாக தோல்வி, பலவீனம் ஆகியவற்றுடன்தான் மனிதனை அடையாளப் படுத்துகிறார்கள்.

மனிதன் என்பவன் பலத்துடனும், திறமையுடனும், எல்லா சாத்தியங்களுடனும் அடையாளம் காணப்பட வேண்டும். நான் மனிதன்தானே என்று மக்கள் புலம்பும்போது, தங்களை எப்போதும் பலவீனங்களோடும் எல்லைகளோடும்தான் அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள்.

மனிதனாக இருப்பதால் தனக்குக் கிடைத்துள்ள வாய்ப்புகளுடன், சாத்தியங்களுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளத் தவறுகிறார்கள். ஆனந்தம், பேரானந்தம்,




களிப்பு போன்றவையெல்லாம் மனிதனுக்கு மட்டுமே சாத்தியங்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆனால், மக்கள் இவற்றை மனிதனுடன் அடையாளப்படுத்தாமல் எல்லாவற்றையும் சொர்க்கத்துக்கு ஏற்றுமதி செய்துவிட்டார்கள். சாதாரணமாக இருக்க வேண்டிய அன்பைக்கூட தெய்வீக அன்பு என்று சொல்லிக் கொள்வார்கள். யாருக்குத் தெரியும், தெய்வம் அன்பு செலுத்தும் என்று? நீங்கள் அறிவீர்களா?

மனிதனால் அன்பு செலுத்த முடியும், அது உங்களுக்குத் தெரியும். ஒரு நாய் அன்பு செலுத்த முடியும், அது உங்களுக்குத் தெரியும். ஆனால், கடவுள் அன்பு செலுத்த முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா?


மனிதனின் மகத்துவமான குணங்களை எல்லாம் தெய்வீகமாக மாற்றி சொர்க்கத்துக்கு அனுப்பிவிட்டு, மோசமான குணங்களை மட்டுமே மனிதனுக்கு உரியதாக ஐக்கியப்படுத்தப் பார்க்கிறீர்கள்.

நான் மனிதன், எனவே நான் துன்பப்பட முடியும், விரக்தி அடைய முடியும் என்று நினைக்கிறீர்கள். இன்னொரு முறை அப்படிச் செய்யாதீர்கள்.

தற்போது உங்கள் மனம் நீங்கள் சொல்வதைக் கேட்கவில்லை. எனவேதான் துன்பமும் விரக்தியும் அடைகிறீர்கள். உங்கள் மனம் நீங்கள் சொல்வதைக் கேட்க ஆரம்பித்தால், சிந்திக்க ஆரம்பிப்பீர்கள்தானே? நிச்சயமாக சிந்திக்க ஆரம்பிப்பீர்கள்.

சிந்திப்பது என்பது ஆனந்தமான ஒன்று. இது ஒரு சிறந்த கருவி. இந்தக் கருவியை நீங்கள் இன்னமும் நன்கு பயன்படுத்த முடியும். மனிதனுக்கு இப்போதுள்ள சாத்தியங்கள் லட்சக்கணக்கான ஆண்டு பரிணாம வளர்ச்சிக்குப்பிறகு கிடைத்தவை. எனவே, மனிதத்தன்மையைப் பழிக்காதீர்கள், கவலை, துன்பம் ஆகியவற்றுடன் அடையாளப்படுத்தாதீர்கள்.

நான் மனிதன் என்று நீங்கள்



## சத்குரு வாசுதேவ்

சொல்லும்போது, இனி மிகவும் அழகான தருணங்களையும், அன்பான தருணங்களையும், ஆனந்தமான தருணங்களையும் நீங்கள் நினைக்க வேண்டும். அன்பு, ஆனந்தம் இவை எல்லாம் எனக்கே உரியவை, ஏனெனில் நான் மனிதன் என நீங்கள் நினைக்கப் பழகுங்கள்!

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

## 4 day Inner Engineering Program

*led by an Isha teacher trained by Sadhguru in Scarborough and Mississauga from September 22nd to 25th*

***Program Venue***

***Princess Banquet***, 3330 Pharmacy Avenue,
Scarborough (Toronto), ON M1W 3V8

***Park Inn by Radisson***, Toronto Airport West, 175 Derry Road East
Mississauga (Toronto), ON L5T 2Z7

***Program schedule***

Program timings are as follows for each day:
Thursday Sept 22nd : 6:30PM - 9:45 PM    Friday Sept 23rd : 6:30PM - 9:45 PM
Saturday Sept 24th: 7:30AM - 7:00 PM    Sunday Sept 25th: 7:30AM - 7:00 PM
Contact Information

***Email: toronto@ishafoundation.org / Phone: 416 300 3010***
***Online registrations: www.innerengineering.com/total***






# இறைவனை அடையும் எளியவழி

கடவுளை அடைதற்குரிய இனியவழி, எளியவழி, பெரியவழி அனைவருக்கும் உரிய வழி நாம ஜெபமாகும். அது நாம சங்கீர்த்தனம் எனப்படும். இறைவனது திருப்பெயரை இடைவிடாது உச்சரித்தலே இதுவாகும். கடவுள் பெயரை கணக்கற்று உச்சரிப்பதனால் இறையருள் கிட்டும் என்பதை அருளாளர்கள் காட்டிப் போந்துள்ளனர். அது வரும் துன்பங்களிலிருந்து எம்மை பாதுகாப்பதாகும். 'ஆதிமூலமே' என்றான் கஜேந்திரன். 'கோவிந்தா' என்றாள் பாஞ்சாலி. 'முருகா' என்றார் அருணகிரிநாதர். 'ஹேராம்' என்றார் காந்திஜி. எனவே கடவுள் நாமத்தை விடாப்பிடியாய் கட்டிப்பிடித்துக் கொண்டால் கட்ட முடியாத கடவுளையே கட்டிப் போட்டு விடலாம். விஷ்வரூபம் கொண்டு பெருவடிவாக நின்ற கிருஷ்ணனை 'நாரயணா' என்ற நாமம் மூலம் கட்டினான் சகாதேவன் என்பதிலிருந்து நாமத்தின் வலிமை விளங்குகின்றதன்றோ!

கடவுளை விட கடவுளின் நாமம் மேலானது என்கின்றது சமய அனுபவம். நம்மைவிட நமது கையெழுத்திற்கு மதிப்பு உண்டு. ஒருவரை சிபார்சு செய்வதற்கும், வங்கியில் பணம் பெறுதற்கும் கையெழுத்தையே பயன்படுத்துகின்றோம். இது போன்றே 'நின்னிற் சிறந்தது நினது திருநாமம்' என்று சங்க இலக்கியம் கூறுகின்றது. கட்டிப் பொன்னிலும் பார்க்க அதில் செய்யப்பட்ட அணிகளுக்கு மதிப்புண்டு. கட்டிப்பொன் போன்றவன் பெயரும் உருவமுமற்ற இறைவன். அணிகள் போன்றவை அவனது திருநாமங்கள். அணிகளை அணியலாம். ஆபத்துக் காலத்தும் அவை உதவி செய்யும். எனவே நாம ஜெபம் ஒரு உன்னத இறையருள் சாதனமாகும்.



'ஓங்கி' உலகளந்த உத்தமன் பேர்பாடி என்று பாடினாள் ஆண்டாள். முன்பு செய்த பழிக்குத்துணை 'முருகா' எனும் நாமங்கள் என்றார் அருணகிரியார். 'உன் நாமமே உச்சரித்திடும் அடியார் நாமமே நான் உச்சரித்திடத் தகுமோ என்றார் தாயுமானவர். குழந்தைகளுக்கு கடவுளரின் திருப்பெயர்கள் வைப்பது அவற்றை நாம் அடிக்கடி உச்சரிப்பதற்கேயாகும். அம்பிகை, சிவன்ரூபன், லம்போதரன், முருகவேள், நாராயணன் என்ற பெயர்கள் இறை உணர்வை ஏற்படுத்துவனவாகும்.

சந்நியாசியாகி சங்கடப்படுவதிலும் பார்க்க இல்லறத்திலிருந்தே இறை அருளில் மூழ்கித்திளைப்பது சுலபம் எனக் கூறப்படுவமுண்டு. காவி உடுத்து, கமண்டலம் ஏந்தி, காட்டிற்குச் சென்று கடுந்தவம் இயற்றி கஷ்டப்பட்டு கடவுகளைக் காணும் முயற்சியில் ஈடுபடுவதிலும் பார்க்க இல்லறத்தில் ஈடுபட்டு குழந்தைகளைப் பெற்று அவற்றிற்கு இறை பெயர்களைச் சூட்டி இடைவிடாது அவற்றை உச்சரிப்பதனால் இறையருள் இலகுவில் கிட்டும் என்பதை அனுபவரீதியாக உணரலாம். 'பரமனையே பாடுவார் எல்லோர்க்கும் அடியேன்' என்பதும் 'பாடுவார் பசி தீர்ப்பான்' என்பதும் நாவலிக்க நாமம் சொல்வார் பீடினைப் பேசுகின்றது. எல்லாத் தெய்வங்களும் ஒரு மூலப் பொருளின் பல்வேறு வடிவங்களே என்று தெளிந்து நம் மனதிற்கினிய ரூபம், நாமம் தேர்ந்து அதற்கான மூலமந்திர பலத்தை தக்க குருமூலம் தெரிந்து தொடர்ந்து சொல்வது சரியான வழிபாடாகும்.

மனதிற்கு பிடித்த ஏதேனும் தெய்வ ரூபத்தையும், நாமத்தையும் சிக்கெனப்பிடித்துக் கொள்க என்றே மணிவாசகர் 'இம்மையே உன்னைச் சிக்கெனப்பிடித்தேன் எங்கெழுந்தருள்வது இனியே' என்று பாடியுள்ளார். ஒன்றே பலவுருவே என்று கடவுள் பற்றிக் கூறப்பட்டாலும் முக்தி நோக்கிய முன்னேற்றத்திற்கு நமது மனதிற்கு பிடித்த ஒரு தெய்வ உருவத்தின் உபாசனை மிகமிக அவசியம். இரவிலும் - பகலிலும், விழிப்பிலும் - தூக்கத்தில் அவ்வுருவம் வடிவம் நம் அகக்கண்ணில் தெரிய வேண்டும். அப்பொழுது அத்தெய்வத்தின் பெயர் சொல்லிப் பேரானந்தம் அடையலாம்



நா. க. சிவராமலிங்கம்


பல்லுப் போனால் சொல்லு போச்சு

CAN YOU AFFORD YOUR DENTIST BILLS ???

WHY YOU NEED TO DO DENTAL, VISION & HEARING PLAN ???

Dental, Vision, Hearing Plan
3 in 1 Combined Coverages

- YEAR 1 : 60% Coverage, YEAR 2 : 70% Coverage, YEAR 3 : 80% Coverage, YEAR 4+ : 90% Coverage
- 10% household discount if two or more people live in same address
- Some coverages cover day one
- Client will qualify for UCT member benefits.

பல், கண், காது
மூன்று உறுப்புகளையும்
காப்பதற்கான ஒரே காப்புறுதி



Nimal Subramaniam
Financial Advisor
Dir: 416 816 7994
Web: www.nimalInsurance.com
Email: neel900@hotmail.com


KABIS
KABIS & ASSOCIATES INC.
A Solution Company

UCT LaCapitale iA Financial Group

◂ Life Insurance ◂ Non-Medical Insurance ◂ Critical Illness Insurance ◂ Disability Insurance ◂ Mortgage Insurance ◂ Travel Insurance ◂ Super Visa Medical Coverage ◂ Drug and Dental Plan ◂ TFSA ◂ RESP ◂ RRSP ◂ LIRA ◂ LIF

# Homes, Condos, Business, Land, Farms, Rural Homes...!

Port Union And Lawson



1/2 Acre 75' X 295' Ravine Home

Concession Rd 5 Rd /Beaverton



Vacant Land, 5 Acres 225k

Whitby./Taunton




Ramara/ Rural Ramara



Vacant Land, 74 Acres 375k

Sheppard Ave E & Hwy404




Investment with Tenant/ or Vacant

Kennedy/Sheppard




3 bm 2 wsrm 60 ft x 125 ft

Oshawa/ Taunton



Luxury Home 629k

Kennedy/ Kingston Rd

Restaurant Ready to go..



STORE PLUS APT

Stouffville

768k




Detached home with Walkout Basement



## Restaurant For Sale In Stouffville

Opportunity Knocks! Be Your Own Boss!! Fantastic Location! Established Clientele. Vipei Bistro( Rated High Score) , Name Negotiable, Has Become The Hub For Local And Out Of Town Patrons. Offering Great Atmosphere With A Blend Of Great Food And Excellent Service!! Recent Renovations Include A Newer Bar, Newer Furniture, Newer Central Air And Furnace!

# 0.5% Listing commission*

## Pat Pushpakanthan

Hall of Famer

Real Estate Broker

416-894-1187

PAT WILL BEAT ANY DEAL*!!

Our MLS listing include:

- Free Professional Photography
- Free Professional virtual tour
- Free custom website of your home
- Free Home Staging
- Free Feature Sheets
- Free UTube Video
- Free Online Marketing............. , Open house and more..

To buy Home, New Condos, commercial, Farms, Lands..

Call Me For Free service!



Century 21 AFFILIATE REALTY INC BROKERAGE*

OFF: 416-290 1200

nhome2025@gmail.com

**Profit From 15 years of Real estate Success!**

*From , valid only upto june 15/16, ^Not intended to solicit existing buyers and sellers, under contract * some conditions apply

# மதுபோதையில் வாகனம் செலுத்திப் பிடிபட்டவரை தப்ப வைத்த கனேடிய சட்டம்!

## கனேடிய தகவல் தொடர் 256

கனடாவில் தினமும் பல்வேறு கோணங்களி லிருந்தும் தகவல்களை 'விளம்பரம்' பத்திரிகையின் வாசகர்களோடு பகிர்ந்து கொள்வது எனக்கு அலாதியாகப் பிடித்த ஒரு விடயம்.

முக்கியமாகக் கனடாவின் சட்டங்கள், அந்தச் சட்டங்களின் முறிவுகள், ஓட்டை களைப் பயன்படுத்தி நீதித்துறையின் முன் னால் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளும் செய்திகள் என்பது தர்மத்தின் பார்வையில் அக்கிரமாகத் தெரிந்தாலும் தகவல்களை படிப்பவர்களின் பார்வையில் சுவையான-தாகவும் ஆச்சரியமானதாகவும் இருக்கும்.

மதுபோதையில் வாகனம் செலுத்திப் பிடிபட்டு தண்டனைக்கு உட்பட்ட தமிழர் ஏராளம். ஆனால் இங்கு இவ்வாறு சிக்குப் பட்டவர் சிலர் சட்டத்தின் ஓர் இடத்தில் இருந்த முறிவினைப் பயன்படுத்தி தப்பினர் என்பது அதிசயமான விடயமாகும்.

கடந்த யூலை 26, 2016 இல் 'ரொறொன்ரோ ஸ்ரார்' பத்திரிகையில் பின்வரும் தலைப்பில் பிரம்ரன் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட வழக்கு ஒன்றின் தீர்ப்பு தொடர்பான செய்திக் கட்டுரை வெளியாகியிருந்தது.

**மொழி பெயர்ப்பாளர் வழங்கவில்லை? அதனால் வழக்கும் இல்லை!**
***(No Interpreter provided? No Case!)***

பஞ்சாபி மொழி பெயர்ப்பாளரின் உதவியில்லாது வழக்குப் பதியப்பட்டதால் நீதிபதி குற்றச்சாட்டை நிராகரித்து விட்டார். (Judge throws out Impaired driving charges because man wasn't access to someone who could seadk punjabi)

திரு. பிக்கார் - ஹாண்டல் (Mr. Bikkar Khandal) என்ற சீக்கிய இனத்தினைச் சேர்ந்த ஒருவர் கடந்த ஒக்ரோபர் 2015 இல் மதுபோதையில் வாகனம் செலுத்தியபோது மிசுசாகா நகரில் பிடிபட்டிருந்தார்.

கனடாவின் அடிப்படை மனித உரிமைகள் சட்டப்படி (The Canadian Charter of Rightes and Freedom) கைது செய்யப்பட்ட ஒருவர் பொலீஸ் காவலில் வைக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்ய முன்பு கைது செய்யப்பட்டவருக்கு உள்ள உரிமைகள் பற்றி பொலிசார் அவருக்கு தெளிவு பண்ணவேண்டும். அவரது வக்கீலுடன் தனியாகத் தொலைபேசியில் ஆலோசனை பெற அனுமதிக்க வேண்டும். சொந்தமாக வக்கீலை ஒழுங்கு செய்ய முடியாது போனால் அரச செலவில் இயங்கும் வக்கீலின் தொடர்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

இங்கு அரச செலவில் இயங்கும் இலவச வக்கீலுடன் (Duty council free legal clinic) தொலைபேசியில் பேசுவதற்கு கைது செய்து வைத்திருந்த மதுபோதையில் வாகனம் செலுத்தியவரைப் பொலிசார் ஒழுங்கு செய்து கொடுத்திருந்தனர். ஆனால் ஆங்கிலம் பூரணமாகப் பேசத் தெரியாத அவருக்கு பஞ்சாபி மொழியில் மொழி பெயர்ப்பாளர் தேவை எனக் கேட்டிருந்தும் அந்த உதவி செய்து கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாக இந்த வழக்கினை பிரம்ரன் நீதிமன்ற நீதியரசர் திரு. போல் மோனகன் அவர்கள் (Justice Mr. Paul Monahan) கைது செய்யப்பட்ட ஒருவர் தமக்குரிய மனித உரிமைகளைச் சரியாகப் பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்ற காரணத்தினால் அவருக்கு எதிரான வழக்கினை தள்ளுபடி செய்தார்.

இதேமாதிரியான இன்னொரு வழக்கின் செய்திக் கட்டுரை பின்வரும் தலைப்பில் மே 15, 2015இல் 'Canadian lawyers & Law Times' என்னும் சஞ்சிகையில் பின்வரும் தலைப்பில் வெளி வந்திருந்தது.

**அரச இலவச சட்டமையத்தின் தரக் குறைவான நடத்தையால் வழக்கு நிராகரிக்கப்பட்டது.** (Case Thrown Out Due To Duty Counsel's Rudness)

இங்கு நடந்தது இதுதான்!
எடிற்றா ஹயோவ்ஸ்கா (Edita Hajovska) என்ற பெண் கடந்த பெப்ரவரி 20, 2013 இல் டொன்வலி பார்க்வே (Donvalley Park Way) நெடுஞ்சாலையில் அன்றைய தினம் அதிகாலை நேரம் மதுபோதையில் வாகனம் செலுத்தி வந்தார். வாகனம் அங்கும் இங்குமாக ஓடியபோது பிடிபட்டு விட்டார்.

கைது செய்து வைத்திருந்த பொலிசார் வழக்குப் பதிவு செய்த நேரம் அரச இலவச வக்கிலீன் ஆலோசனையினைப் பெறத் தொலைபேசியில் ஒழுங்கு செய்து கொடுத்திருந்த போது அந்த வக்கீல் மிகவும் நாகரிகமற்ற வார்த்தைகளில் குற்றம் சாட்டப்பட்டிருந்தவருக்கு ஆலோ சனை வழங்கியது நீதிமன்ற விசாரணையில் நிரூபிக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த ரொறொன்ரோ நீதிமன்ற நீதியரசர் திரு. லெஸ்லி சி. பிறின்ஜில் (Justice Leslie. C. Pringle) அவர்கள் குற்றம் சாட்டப்பட்டவருக்குரிய மனித உரிமைகள் இங்கு மீறப்பட்டது எனக் குறிப்பிட்டு வழக்கினை நிராகரித்தார்.

இன்னொரு செய்திக் கட்டுரை கடந்த யூலை 01, 2016 இல் பின்வரும் தலைப்பில் கனடாவின் ஆங்கில செய்தி ஊடகங்களில் வெளிவந்திருந்தது.

குற்றம் சாட்டப்பட்டவரின் சீக்கிய மத தலைப்பாகையினை வைத்திருந்தபடியால் வழக்கு தூக்கி எறியப்பட்டது. (Drunk Driving Case Tossed After Peel Cops Retain Accused's Turban)

டிசம்பர் 2014 இல் திரு. சார்குல் சிங் (Mr. Sarkul Singh) என்ற சீக்கிய இனத்து நபர் மதுபோதையில் வாகனம் செலுத்தி மிசுசாகா நகரில் பிடிபட்டு கைவிலங்குடன் பொலீஸ் வாகனத்தில் அழைத்துச் சென்ற போது அவரது தலைப்பாகை விழுந்து விட்டது. அதனை பொலிசார் மூன்று மணி நேரமாகத் திருப்பி அவர் கேட்டபோதும் வழங்கவில்லை என்பது நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டது.




கைது செய்யப்பட்டபோது ஒரு மனிதனின் மத உரிமை மீறப்பட்டது என்ற அவரது வக்கீலின் வாதம் ஏற்கப்பட்டு வழக்குத் தள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட சில தகவல்களை உதாரணத்திற்காக இங்கு குறிப்பிட்டேன். இதேமாதிரி குறிப்பிட வேண்டுமானால் நிறையச் சொல்லிக் கொண்டே போகலாம்.

கனடாவில் கைது செய்யப்படும் ஒவ்வொரு வருக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள மனித உரிமைகள் சட்டம், சுதந்திரம் (The Canadian Charter Rights & Freedoms which part of Canada's Constitution) என்ற விடயங்களில் சில உரிமைகள் உண்டு. ரொறொன்ரோ நகரின்



**சிவ. பஞ்சலிங்கம் B.Com.,**
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM /NECK PROBLEM • TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP • ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# சிசேரியன் பிறந்த கதை

## *Birth Story of Caesarean / C-Section*

இந்தியாவில் கி.மு 322 தொடக்கம் கி.மு 185 வரை மௌரிய அரச வம்சத்தினர் ஆண்ட பேரரசு ஆகும். பழங்கால இந்தியாவில் பரப்பளவில் விரிவானதும், அரசியல், படைத்துறை தொடர்பில் மிகவும் வலுவானதுமாக இப்பேரரசு விளங்கியது. இந்தியத் துணைக் கண்டத்தின் கிழக்குப் பகுதியில், கங்கைச் சமவெளியில், இன்றைய பீகார், வங்காளம் ஆகிய மாநி-லங்களின் பகுதிகளை உள்ளடக்கியிருந்த மகத நாட்டை அடிப்படையாகக் கொண்டே இப்பேரரசு உருவானது. இதன் தலைநகரம் பாடலிபுத்திரம் ஆகும். இது இன்றைய பட்னாவுக்கு அருகில் இருந்தது.

பிந்துசாரர் மௌரியப் பேரரசின் இரண்டா வது மன்னர் ஆவார். சந்திரகுப்தரின் மகன் தான் பிந்துசாரர். பிந்துசாரர் கருவில் இருக்கும் அவனை பெறும் காலம் அண்மிக்கும் போதே அவன் தாய் தவறுதலாக நஞ்சுப் பொருளை உட் கொண்டதால் இறந்துவிட்டார். சுஷ்ருதர் என்ற புகழ்பெற்ற மருத்துவ மேதையின் ஆலோசனைப்படி குழந்தை வாழ வேண்டும் என்று சந்திரகுப்தரின் மனதில் உறுதி செய்து கொடுத்துவிட்டு மருத்துவ மேதை சுஷ்ருதர் ராணி வயிற்றை வெட்டித் திறந்து குழந்தையை வெளியே எடுத்தார். இவ்விதமாய்க் குழந்தையின் உயிரைக் காப்பாற்றியது சரித்திரத்தில் முதல் தடவையாகும். பின்னர் பண்டைய ரோமன் அறுவை சிகிச்சை பிரசவம் போது இறந்த ஒரு தாயின் கர்ப்பத்தில் இருந்து ஒரு குழந்தையை அகற்ற மட்டும் நிகழ்த்தப் பட்டது. அந்தக் காலகட்டத்தில் இவ்வகையாக குழந்தையைக் காப்பாற்றும் முறை நடைமுறையில் இல்லாத போது அதற்கென ஒரு பெயரும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

பிந்துசாரர் வளர்ந்து இவர் தனது ஆட்சிக் காலத்தின் மௌரியப் பேரரசை விரிவு படுத்தினார். தெற்கே தோழமை அரசுகளான சேர, சோழ, பாண்டியர்களைத் தவிரவும் கலிங்க நாட்டைத் தவிரவும் இந்தியாவின் ஏனைய பகுதிகளை இவர் வெற்றி கொண்டார். மாமன்னர் அசோகன் இவரது மகன் ஆவார். மாமன்னர் அசோகன் தானும் பௌத்த மதத்தைத் தழுவியதோடு மட்டுமல்லாது இலங்கை, சீனா, தாய்லாந்து, பர்மா போன்ற நாடுகளுக்கும் பௌத்த மதத்தைப் பரவச் செய்தவர்.

பிந்துசாரர் பிறந்து பல ஆண்டுகளின் பின்னர் கிட்டதட்ட 125 ஆண்டுகளின் பின்னர் எகிப்தில் பேரழகியாகப் புகழ் பெற்றவள் கிளியோபாட்ரா. வரலாற்றுப் பேரழகிகள் பட்டியலில் இன்றும் முதலிடத் தில் இருப்பவர் கிளியோபாட்ரா. கி.மு 69 தொடக்கம் கி.மு 30 வரை காலத்தில் வாழ்ந்தவள். எகிப்திய பேரரசியாக இருந்தாலும் அவள் கிரேக்க பேரரசர் அலெக்சாண்டரின் தளபதி தாலமியின் வம்சாவளியில் வந்தவள். வசீகரம், இளமை, புத்திக்கூர்மை, தேசப்பற்று, நினைத்ததை சாதிக்கும் உறுதி இவைதான் கிளியோ பாட்ராவின் வெற்றி ரகசியம். 11 மொழிகள் சரளமாகப் பேசுவாள். பேச்சாற்றலும் நிறைந்தவள். அவளது பேச்சுக்கு யாரும் மறுத்துப் பேச்சுப் பேசியதில்லை. 14 வயதாகும் போதே தந்தையுடன் சேர்ந்து ஆட்சியைப் பகிர்ந்து கொண்டாள். தந்தை இறந்த பின் 18வது வயதில் அரசியானாள். எகிப்து அரச வழக்கப்படி அரசி மட்டும் தனியாக ஆட்சி நடத்தமுடியாது. இதனால் அந்நாட்டு வழக்கப்படி தனது தம்பி முறையான தாலமியை திருமணம் செய்து கொண்டாள். எகிப்தில் பெரும் படை கிடையாது.

கி.மு 100 தொடக்கம் கி.மு 44 வரை ரோமை ஆட்சி செய்தவர் ஜூலியஸ் சீசர். கி.மு 58 தொடக்கம் கி.மு 51 வரை ஆண்டுகளில் சீசர் இந்தப் படைகளைப் பயன்படுத்தி, தற்போதுள்ள பிரான்சும், பெல்ஜியமும் அடங்கிய கால்பகுதி



முழுவதையும், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, ஹாலந்து ஆகிய நாடுகளின் பகுதிகளையும் வெற்றி கொண்டார்.

எகிப்தையும் தனது ஆட்சியையும் பாதுகாக்க கிளியோபாட்ரா எடுத்த முடிவு யாரும் எதிர்பாராதது. அப்போது வலிமையுடன் இருந்த ரோமப்பேரரசர் ஜூலியஸ் சீசரை காதலிக்க முடிவு செய்தாள். முதல் சந்திப்பிலேயே ஜூலியஸ் சீசரை தன் காதல் வலையில் வீழ்த்தினாள். அப்போது கிளியோபாட்ராவுக்கு 21 வயது, சீசருக்கு 54 வயது. ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தையின் பெயர் சிசேரியன்!. அறுவை சிகிச்சை செய்து அக்குழந்தை பிறந்தது. இவ்வகையாக குழந்தையைக் காப்பாற்றும் முறைக்கும் சிசேரியன் என அழைக்க தொடங்கி விட்டனர்.

தற்காலத்தில் கருவுற்று முப்பது முப்பத்தி இரண்டு வாரங்கள் கடந்துவிட்டபிறகு, தேதி குறித்துக் கொடுப்பார்கள். தேதிக்கு முன்ன தாகவே அந்த மருத்துவமனையில் சேர்ந்து விட வேண்டும். குறிப்பிட்ட தேதியில் பிரசவ வலி வருகிறதா எனப் பார்ப்பார்கள். வர வில்லை என்றால், வலி வருவதற்கான ஊசியைப் போடுவார்கள். மாறாக, குறிப் பிட்ட தேதிக்கு முன்னதாகவே பிரசவ வலி வந்து விட்டால், வலி நிற்பதற்கான ஊசியைப் போடுவார்கள். இப்படியாக, மருத்துவரின் அல்லது பெற்றோரின் எதிர் பார்ப்புக்கு தக்கபடி, குழந்தை பிறந்தாக வேண்டும். இல்லாவிட்டால், 'சிசேரியன்' எனும் அறுவை சிகிச்சைப் பிரசவம் தான். ஆங்கில மருத்துவ உலகில், 'கான்ஸர்' என்ற வார்த்தைக்கு அடுத்தபடியாக அதிகம் உச்சரிக்கப்பட்டது 'சிசேரியன்' எனும் வார்த்தை தான்.

**- சுந்தரம் இந்திரராஜா -**

# மரணிக்கும் தறுவாயில் தனது மகனுக்கு நா. முத்துக்குமார் எழுதிய மனதை கலங்க வைக்கும் கடிதம்!

வேதனைப் பெருவெளியில் நம்மை தள்ளிவிட்டுப் பறந்துபோன நா. முத்துக்குமார் தனது மகன் ஆதவன் நாகராஜனுக்கு எழுதிய கடிதம்.

"அன்புள்ள மகனுக்கு அப்பா எழுதுவது இது நான் உனக்கு எழுதும் முதல் கடிதம். இதைப்படித்துப்புரிந்து கொள்ளும் வயதில் நீ இல்லை. மொழியின் விரல் பிடித்து நடக்கப்பழகிக்கொண்டு இருக்கிறாய்….

வயதின் பேராற்றாங்கரை உன்னையும் வாலிபத்தில் நிறுத்தும். சிறகு முளைத்த தேவதைகள் உன் கனவுகளை ஆசீர்வாதிப் பார்கள். பெண் உடல் புதிராகும். என் தகப்பன் என்னிடமிருந்து ஒளித்து வைத்த ரகசியங்கள் அடங்கிய பெட்டியின் சாவியை நான் தேட முற்பட்டதைப்போல நீயும் தேடத் தொடங்குவாய். பத்திரமாகவும் பக்குவமாக வும் இருக்க வேண்டிய பருவம் அது. உனக்குத் தெரியாதது இல்லை. பார்த்து நடந்து கொள்.

நிறைய பயணப்படு. பயணங்களின் ஜன்னல்களே முதுகுக்குப்பின்னாலும் இரண்டு கண்களைத்திறக்கின்றன. புத்தகங் களை நேசி. ஒரு புத்தகத்தை தொடுகிற போது நீ ஓர் அனுபவத்தைத் தொடுவாய். உன் பாட்டனும் தகப்பனும் புத்தகங்களின் காட்டில் தொலைந்தவர்கள். உன் உதிரத்திலும் அந்தக் காகித நதி ஓடிக் கொண்டே இருக்கட்டும்.

கிடைத்த வேலையை விட பிடித்த வேலையைச்செய். இனிய இல்லறம் தொடங்கு. யாராவது கேட்டால் இல்லை எனினும் கடன் வாங்கியாவது உதவி செய்.



அதில் கிடைக்கும் ஆனந்தம் அலாதி யானது. உறவுகளிடம் நெருங்கியும் இரு. விலகியும் இரு. இந்த உலகில் எல்லா உறவுகளையும்விட மேன்மையானது நட்பு மட்டுமே. நல்ல நண்பர்களைச் சேர்த்துக்கொள். உன் வாழ்க்கை நேராகும். இவையெல்லாம் என் தகப்பன் எனக்குச் சொல்லாமல் சொன்னவை. நான் உனக்கு சொல்ல நினைத்துச்சொல்பவை.

என் சந்தோசமே நீ பிறந்த பிறகுதான். என் தகப்பனின் அன்பையும் அருமையையும் நான் அடிக்கடி உணர்கிறேன். நாளை உனக்கொரு மகன் பிறக்கையில் என் அன்பையும் அருமையையும் நீ உணர்வாய்.

நாளைக்கும் நாளை நீ உன் பேரன் பேத்திகளுடன் ஏதோ ஒரு ஊரில் கொஞ்சிப்பேசி விளையாடிக்கொண்டு இருக்கையில் என் ஞாபகம் வந்தால், இந்தக் கடிதத்தை எடுத்துப்படித்துப்பார். உன் கண்களில் இருந்து உதிரும் கண்ணீர்த் துளியில் வாழ்ந்து கொண்டிருப்பேன் நான்.

இப்படிக்கு,
உன் அப்பா
நா. முத்துக்குமார்

## நான் வாசித்தது

நீங்கள் வாசித்து மனதைத் தொட்டதை மற்றவர்களும் வாசிக்கட்டுமே. அனுப்புங்கள்
**Vlambaram@sympatio.ca**

**- க. தேவன்**

# Attention Students!

MATH WORLD
Most Advanced Talented Help
- A private math institute -

"Teaching Experience in Math for more than 23 years"

Math World trains students to achieve from 80's to

**90%**

& above

with more than 23yrs of experience in teaching math

**Guaranteed Results**

G12, G11 G10, G8-400 G9, G7-500

(The most important grades)

Limited Space - 416-666-5515

61 Snowy Owl Way

# இயற்கையின் இரகசியங்கள் (யாவருக்குமான அறிவியல்)

## வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம் - சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்


சென்ற தடவை புறவூதாக்கதிர்ப் பேராபத்துப் பற்றிப் பார்த்தோம். அதன் தொடர்ச்சியை இன்றும் பார்க்கப் போகின்றோம்.

புறவூதாக்கதிர்ப் பேராபத்துப் பற்றி இன்னமும் தெளிவாகப் பார்ப்பதற்கு ஆய்வாளர்கள் நியமக் கரும்பொருளைப் பாவித்தார்கள். நியமக் கரும்பொருள் ஒன்றின் வெவ்வேறு வெப்பநிலைகளில், அதன் சிறிய துவாரத்தின் ஊடாக வந்த கதிர்வீச்சின் திருசியத்தினை பார்த்தார்கள். திருசியம் காட்டிய வெவ்வேறு அலைநீளங் களுக்கான, கருந்துளையினால் வீசப்பட்ட கதிர்களின் சக்திச் செறிவானது, பரிசோத னையிற் கணிக்கப்பட்ட அலைகளின் சக்திச் செறிவின் அமைப்பினையே காட்டின. இச்செறிவுகளின் வரைபடமானது ஒரு மணியின் அமைப்பில் இருந்தது. ஆக, சூடான பொருட்களில் இருந்து புறவூதாக் கதிர்களும், அவற்றிக்குச் சிறியதான அலைநீளம் உள்ள கதிர்களும் வெளி வருவதில்லை என்பது நிரூபிக்கப்பட்டது. இது எங்களுக்கு நல்லதுதான். புறவூதாக் கதிர்களோ அல்லது எக்ஸ் கதிர்களோ இன்னமும் காமாக் கதிர்களோ கரும் பொருட் கதிர்வீச்சில் இருந்து, சூடான பொருட்களில் இருந்து வெளிவீசப்பட்டால் அது எங்களுக்கு ஆபத்தாக அமைந்திருக் கும். இதுதான் ஆண்டவனின் அருள் அல்லது இயற்கையின் அருள் என நாங்கள் நினைத்தாலும், விஞ்ஞானிகள் அப்படி நினைக்கவில்லை.

கரும்பொருட் கதிர்வீச்சின் இந்த முரணான விளைவிற்கான காரணத்தை விஞ்ஞானி களால், நியூட்டனின் செம்மைப் பொறி முறை கொண்டு விளக்க முடியவில்லை. செம்மைப் பொறிமுறை முழுமையான தாயின் இதற்கான விளக்கத்தினைக் கொடுத்திருக்க வேண்டுமே! ஏன் கொடுக்க வில்லை? அவர்களுக்கு இது பெரும் தலையிடியாக இருந்தது. நாங்களும் அந்த இடத்தில் இருந்தால் இந்தத் தலையிடி எங்களுக்கும் வந்துதானே இருக்கும். இந்தச் சிக்கலின் பின்னால் பெரிய புதிர் ஒன்று இருப்பதாக லோட் கெல்வின் என்ற இயற்பியல்வாதி கூறினார். அச்சிக்கல் விடுபடும்போது இயற்பியலில் பெரும் மாற்றமே ஏற்படும் எனக் கூறியுமிருந்தார். அவர் கூறியது மிகச் சரியானது எனக் காலம் உடனேயே பதிலாகக் கூறியது.

ஜெர்மனியரான மாக்ஸ் பிளாங் என்பவர் இச்சிக்கலுக்குப் புதியதொரு தீர்வொடு வந்தார். நாற்பது வயதான அவர் தனது முடிவினை உலகினருக்கு அறிவிக்க முன்னராக தனது மகனிடம் "நியூட்டனின் கண்டுபிடிப்பிற்கு நிகரான கண்டு பிடிப்பினைக் கண்டுபிடித்துள்ளேன்" எனக் கூறினாராம். அது பற்றிய விளக்கத்தைப் பார்ப்போம்.

பிளாங் தனது கணித முடிவுகளை துணை கொண்டு, சூடான பொருட்கள் சக்தியை தொடர்ச்சியான அலைவடிவில்லாது, சின்னச் சின்ன சக்திக் கட்டுக்களாக, பொட்டலங்களாக, அதாவது துகள்களாக சூழலுக்குள் தள்ளுகின்றன எனக் கூறினார். சூடான பொருட்களில் இருந்து வருகிற ஒளியானது சக்தியைக் காவுகின்ற துகள்களாகக் காணப்படுகிறது என்பது அவரது விளக்கமாக இருந்தது. ஒவ்வொரு துகளும் காவுகின்ற சக்தியின் அளவினைக் 'குவாண்ரா' என்றும் கூறினார்.




தான் குறிப்பிட்டுக் கூறிய கதிர்களின் பொட்டலம் ஒன்றின் சக்தியின் அளவான குவாண்ராவைக் கணிப்பதற்கும் அருமை யான சமன்பாடு ஒன்றையும் கொடுத்தார். அதுவும் மிகச் சிறிய சமன்பாடுதான். $E = hf$ என்ற அந்தப் பிரபலமான சமன்பாட்டில் $E$ சக்திப் பொட்டலங்கள் கொண்டுள்ள சக்தியையும், $f$ கதிர்வீச்சின் அதிர் வெண்ணையும் சுட்டி நிற்க, $h$ என்பது பிர பலமான பிளாங் மாறிலி எனக் கூறப்படுகிறது. அலைநீளம் கூடிய அலைக ளின் அதிர்வெண், அலைநீளம் குறைந்த வற்றினைவிடக் கூட என்பது எங்களுக்குத் தெரியும். அதன்படி, வானொலி அலைக ளில் இருந்து காமாக் கதிர்கள் வரையில் செல்கையில் அதிர்வெண் கூடிக்கொண்டே போகின்றது. எமது கட்புல ஒளிகளிலே, குறைந்த அதிர்வெண் கொண்ட சிவப்பு நிற ஒளியின் துகள்கள் குறைந்த அளவு சக்தியைக் (குவாண்ராவை) கொண்ட துகள்களையும், பெரிய அதிர்வெண் உடைய ஊதா நிற ஒளித்துகள்கள் பெரிய அளவிலான சக்தியையும் (குவாண்ராவை யும்) கொண்டுள்ளன எனக் கூறிய பிளாங், இந்தத் துணிக்கை இயல்பினால்தான் கரும்பொருட் கதிர் வீச்சில் சிக்கல் ஏற்பட்டது எனவும் கூறினார்.


சூடான பொருட்கள் சக்தியை மின்காந்த அலையாக தம்மில் இருந்து வீசுகின்றன. அச்சக்தி, பொருட்களில் இருந்து சின்னச் சின்ன பொட்டலங்களாக வெளிவருகின்றது. சிவப்புநிறக் கதிர்களினதும் அதற்குக் கீழான அதிர்வெண் கொண்ட கதிர்களும் சக்தி குறைந்த பொட்டலங்களாக இருப்ப தால், அவற்றின் பொட்டலங்கள் அதாவது துகள்கள் சூடான பொருட்களில் இருந்து சூழலுக்கு பெருமளவில் வருகின்றன. அதனால் அவை தனித்தனி கட்டுக்களாக வருவது போன்று தோன்றாது, தொடர்ச்சி யான அலையாக வருவது போலத் தோற்றுகிறது. அதனால் றெய்லிட்ஜின் சமன்பாட்டிற்குச் சரியானவை போல் காணப்படுகின்றன.
ஆனால், சிவப்புநிறக் கதிர்களினதும் அதற்கு மேலாக உள்ள அதிர்வெண் கொண்ட கதிர்களினது பொட்டலங்கள் (கட்டுக்கள்) சக்தி கூடியவையாக இருப்பதால் அவற்றின் பொட்டலங்கள் சென்னிறக்கீழ் கதிர்களின் பொட்டலங்கள் போல அதிக அளவில் வருவதில்லை. அத்துடன் புறவூதாக் கதிர்களுக்கு அப்பால் உள்ள கதிர்களின் பொட்டலம் ஒன்றிக்குத் தேவையான சக்தியை கரும்பொருட்களோ அல்லது சூடான பொருட்களோ கொடுப்ப தில்லை. அதனால் ஊதாக் கதிர்களினது பொட்டலங்களோ அல்லது அதற்கும் உயர்வான அதிர்வெண் கொண்ட கதிர் களினது பொட்டலங்களோ சூடான பொருட்களில் இருந்து கதிர்வீச்சாக வர முடிவதில்லை. இதனால் புறவூதாப் பேராபத்து கரும்பொருட் கதிர்வீச்சிற் தவிர்க்கப்படுகிறது என்றார். பிளாங்கினை மீறிப் பேசமுடியவில்லை. அவ்வளவு கச்சிதமாகத் தனது நிறுவலைக் காட்டி றேய்லிட்ஜின் சமன்பாட்டில் திருத்தத் தினையும் கொண்டு வந்தார். கரும்பொருட் கதிர்வீச்சுக்கான பிளாங்கின் சமன்பாடானது பரிசோதனை முடிவுகளுடன் மிகப் பொருத்தமாகவும் இருந்தது.

> உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதில் குறிப்பிடப்படக் கூடிய விடயம் என்னவெனில், பிளாங் தனது முடிவினைப் பெறுவதற்கு அலைகளின் அமைப்பில் சிறிய மாற்றத்தினைச் செய்தே இம் முடிவினைப் பெற்றார். அதாவது அலைக ளின் முடிவில் திருத்தங்கள் செய்தே தன் முடிவினைக் காட்டியிருந்தார். பிளாங்கின் முடிவு வந்து சில ஆண்டுகளில் (1905ம் ஆண்டு) அல்பேட் அயன்ஸ்ரைன், பிளாங்கின் முடிவு சரியானதுதான் என ஒளிமின் விளைவு (Photo Electric Effect) என்னும் தனது பிரபலமான விஞ்ஞானக் கட்டுரையின் ஊடாகக் காட்டினார். (அதற்காக பின்னர் நோபல் பரிசினையும் பெற்றுக் கொண்டார்) அதிலும் இன்னும் சிறப்பாக, ஒளித்துகள் ஒன்று கொண்டுள்ள சக்தியின் அளவினையும் பிளாங் குறிப்பிட்டுக் காட்டிய அதேஅளவாக, $E = hf$ எனவும் நிறுவிக் காட்டி இருந்தார். ஆக ஒளியானது துணிக்கைகளாக, அதாவது துகள்களாகச் செல்கின்றது என்பது 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிளாங்கினாலும் அயன்ஸ்ரைனாலும் ஐயமின்றிக் காட்டப்பட்டது.

'வேதாளம் மீண்டும் முருங்க மரத்தில் ஏறிக் கொண்டது' போன்றிருந்தது அறிவிய லாளர்களுக்கு. இப்பதான் ஒளி அலை வடிவினது எனக் கணிதத்தின் உதவியுடன் பரிசோதனை வாயிலாகக் காட்டினார்கள்,

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 26ஆம் பக்கம்

வீடு விற்பனைக்கு

VAUGHAN நகரில் 2,850 சதுரஅடி
கொண்ட வடக்கு வாசல்
வீடு விற்பனைக்கு உண்டு.



தொடர்புகளுக்கு: Ragu Mahesu
HomeLife Top Star Realty
Tel.:905.209.1400

# ஜோக்கர் - திரைவிமர்சனம்

இயற்கையை சீர்குலைத்து எதிர்காலத் தலைமுறையினர் வாழ்வை நாசமாக்கும் மணல், கிரானைட் கனிம வளங்கள் கொள்ளை, லஞ்சம், ஊழல் எல்லாவற்றை யும் இயல்பாகக் கடந்துசெல்லப் பழகி விட்டது பொதுச் சமூகம். விதிவிலக்காகச் சிலர்தான் போராடுகிறார்கள். ஆனால், யாருக்காக இவர்கள் போராடுகிறார்களோ அவர்களே இவர்களைக் கேலிப் பொருளாக் குவதும் புறக்கணிப்பதும்தான் இன்றைய தமிழ்நாட்டின் கள யதார்த்தம். இதை மனதை உருக்கும் ஒரு நகைச்சுவை துன்பியல் படமாகப் பதிவு செய்கிறது இந்த ஜோக்கர்.

ஆற்றுமணல் கொள்ளையிலிருந்து காட்சி கள் விரிகிறது. தொடர்ச்சியாக, தூர்ந்து போன கிணற்றையும், கேன்களில் அடைக்கப்பட்ட தண்ணீர் கிராமங்களுக்குள் நுழைவதையும், சாலையோரங்களில் சிறார் கள் மலங்கழிப்பதையும் பார்த்துக்கொண்டே தர்மபுரி மாவட்டம் பாப்பி ரெட்டிபட்டிக்குள் செல்லும் காமிரா, தெருவில் அலையும் குடிகாரர்களையும் சுகாதாரமற்ற புளுரைடு தண்ணீர்க் குழாயடியையும் சில எருமை மாடுகளையும் கடந்து, ஜனாதிபதியாகத் தன்னைக் கருதிக்கொண்டிருக்கும் மன்னர் மன்னனின் கொல்லைக் கழிப்பறைக்கு செல்ல, அங்கிருந்து துவங்குகிறது படம்.

அந்தக் கிராமத்தில் வாழும் சாமானியக் குடிமகன் மன்னர் மன்னன். ஒரு தனியார் தண்ணீர் கேன் நிறுவனத்தில் வேலை பார்க்கிறார். அவருக்கு திருமண செய்ய வீட்டில் மல்லிகாவைப் பெண் பார்க்கிறார் கள். ஆனால், மல்லிகா தான் வாழப் போகும் வீட்டில் நிச்சயமாகக் கழிப்பறை இருக்க வேண்டும் என்று உறுதியுடன் கூறிவிடுகிறார். மன்னர் மன்னன் வீட்டில் கழிப்பறை இல்லை ஆனாலும், மல்லிகா விடம் மனதைப் பறிகொடுக்கும் அவர், அவளையே திருமணம் செய்ய வேண்டும் என ஆசைப்படுகிறார். அதேநேரம் இந்திய நாடெங்கும் 'வாழ்ந்து காட்டுவோம்' என்கிற திட்டத்தின் கீழ் சில கிராமங்களைத் தத்தெடுத்து, அங்கே கழிவறை வசதியி ல்லாத வீடுகளுக்கு அரசே இலவசமாக கழிவறைகளை கட்டித் தரும் திட்டத்தைத் துவக்குகிறது. மன்னர் மன்னனுக்கு தன் திருமணம் குறித்து நம்பிக்கை பிறக்கிறது. ஆனால், வழக்கம்போல மந்திரிகளும் அரசு அதிகாரிகளும் அத்திட்டத்தில் ஊழல் செய்யத் துவங்க, மன்னர் மன்னன் வீட்டில்



- சிவதாணு -

கழிப்பறை பாதி கட்டப்பட்ட நிலையில் அம்பேலென்று நிற்கிறது.

கர்ப்பிணியாய் இருக்கும் மன்னரின் மனைவி மல்லிகா, ஒரு கொட்டும் மழையின்போது அந்தக் கழிப்பறையை பயன்படுத்தப் போகிறார். அப்போது, சரியாகப் பூசாமல் விட்ட கழிப்பறைச் சுவர் மழையில் இடிந்து விழுந்து, அது மல்லிகாவை கடுமையாகத் தாக்கி வயிற்றில் இருக்கும் குழந்தை இறந்துபோகிறது. அன்றுதான் ஜனாதிபதி, 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தில் கட்டப்பட்ட கழிப்பறையைத் திறந்துவைக்க அந்தக் கிராமத்துக்கு வருகிறார். ஜனாதிபதி வந்துபோகும் வரையிலும், ஊரைவிட்டு யாரும் வெளியிலும் போகமுடியாது, உள்ளேயும் வரமுடியாது என்னும்படி பாது காப்பு வளையத்துக்குள் அந்தக் கிராமம் இருக்கிறது. இதனால், தாமதமாகவே மல்லிகாவை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல முடிகிறது. அதற்குள் அதிக ரத்தம் வீணாகியதாலும் மூளையில் ரத்தம் தேங் கிய காரணத்தினாலும் மல்லிகா மூளைச் சாவை அடைந்து நடைப் பிணமாகிறார்.

இந்தச் சோகத்தில் மன்னர் மன்னனுக்கு புத்தி பேதலித்து, இந்தியாவின் ஜனாதிபதி யாகத் தன்னைத்தானே பாவித்து, அறிவித் துக்கொள்கிறார். அந்தக் கற்பனையிலேயே பல அறிவிப்புகளை வெளியிட்டு, அவற்றை செயல்படுத்தாதற்காக, அரசு அலுவலர் களை காய்கிறார். அரசு அதிகாரிகள், காவல் துறையினரிடம் ஜனாதிபதிக்குரிய தோரணையுடன் பேசுகிறார். பொதுப் பிரச்சினைகளுக்காகப் போராடுகிறார் 'உத்தரவுகள்' பிறப்பிக்கிறார். இது ஒரு புதுப் போராட்ட வடிவமாக, மன்னருக்குக் கை கொடுக்கிறார்கள் சமூக ஆர்வலர் பொன்னூஞ்சலும் குடியினால் கணவனை இழக்கும் இசையும். முகநூலில் மன்னர் மன்னனின் பக்கம் உருவாக்கப்பட்டு, தினமும் அவரைப் பற்றிய செய்திகள் ஏற்றப்படுகின்றன. இதனால், தர்மபுரி மாவட்டத்தையும் தாண்டி அவரது புகழ்

தொடர்ச்சி 27ஆம் பக்கம்


JOBS! JOBS! JOBS!

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு. கனடாவிற்கு புதிதாக வந்தவர்கள், மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம். உங்களுக்கு ஏற்ற விதத்தில் பதிவுகள் செய்து தரப்படும்.

JOB OPENINGS IN TORONTO, MISSISSAUGA, BRAMPTON, CONCORD & SCARBOROUGH

- General Labourers in Bakeries, Laundries & Other Factories
- Window Assemblers
- Forklift Operators & Warehouse Workers
- CNC Machine set-up/Operators
- Packagers & Assembly Line Workers
- Welders MIG & TIG

PLEASE APPLY IN PERSON WITH YOUR SIN CARD & PHOTO ID
AND TALK TO OUR SRI LANKAN REPRESENTATIVE AS SOON AS POSSIBLE

ABLE PLUS PERSONNEL INC
2300 Finch Ave. West, Unit #46
Toronto, ON M9M 2Y3
(416) 742-7474

ABLE PLUS
PERSONNEL INC.

# பித்த அழுத்தத்திற்கு (இரத்தக்கொதிப்பு) வர்ம மருத்துவம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### இரத்த அழுத்தம் என்றால் என்ன?

வர்ம மருத்துவத்தில் இதனைப் பித்த வாதஅழுத்தம் என்கிறோம்.

இதயம் ஒரு வலுவான விசைக்கருவி ஆகும். இந்த இதயம் ஒவ்வொரு முறையும் சுருங்கி விரிந்து இரத்தத்தை உடலின் எல்லா பாகங்களுக்கும் அனுப்புகிறது. இவ்வாறு இதயம் இயங்கும் போது குழாய்களில் உள்ள இரத்தம் அவற்றின் உள்பகுதியில் ஒருவகையான அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இதைத் தான் இரத்த அழுத்தம் என்கிறோம். ஆரோக்கியமாக இருக்கும் ஒரு மனிதனின் இரத்த அழுத்தம் 120/80 மில்லி மீற்றர் பாதரச அளவில் இருப்பது இயல்பானது.



இதயம் ஒவ்வொரு முறையும் சுருங்கி விரியும்போது இரத்தக்குழாய்களில் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இந்த அழுத்தமானது இரண்டு வகைப்படும். அதாவது இதயம் சுருங்கும் போது ஒருவகையான அழுத்தத்தையும் விரியும் போது மற்றொரு வகையான அழுத்தத்தையும் இரத்தக் குழாய்களில் ஏற்படுத்துகிறது.

இதயம் சுருங்கும்போது ஏற்படும் அழுத்தத்தைச் சுருங்கழுத்தம் (Systolic pressure) என்றும், இதயம் விரிவடையும்போது ஏற்படும் அழுத்தத்தை விரிவழுத்தம் (Diastolic pressure) என்றும் இரண்டு வகைகளாகப் பிரித்துள்ளனர். 120/80 என்பதில், 120 அளவு சுருக்கழுத்தத்தையும் 80 என்ற அளவு விரிவழுத்தத்தையும் குறிக்கிறது. இரத்த அழுத்தம் 120/80 என்ற அளவுக்கு மேல் இருக்கும் நிலையைத் தான் உயர் இரத்த அழுத்த நிலை (Hypertension) என்று சொல்கிறார்கள்.

மொத்தமாக உள்ள நோயாளிகளில் 95 சதவீதத்தினருக்கு இரத்தமிகு அழுத்த நோய்க்கான அடிப்படைக் காரணங்களைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை. காரணங்கள் கண்டறிய இயலாத இரத்த மிகு அழுத்த நோயை முதல்தர இரத்த மிகு அழுத்த நோய் (Idiopathic Hypertention) என்றும் மற்றையதை காரணமறியா இரத்தமிகு அழுத்த நோய் என்றும் குறிப்பிடுவார்கள்.

இரத்தமிகு அழுத்த நோயில் உள்ள முக்கியமான சிக்கல் என்னவென்றால் அதன் அறிகுறிகள் அவ்வளவாக வெளியில் தெரியாது. மற்ற நோய்களைப் போல் இந்தப் பிரச்சினைக்கு சிறப்பான கண்டுபிடிக்கும் தன்மையுள்ள அறிகுறிகள் கிடையாது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் நீண்டநாட்கள் வரை நோயின் தன்மையை அறியாமல் சாதாரணமாக இருப்பார்கள். எனவேதான் இதை அமைதியான உயிர்க்கொல்லி நோய் (Silent Killer) என்றும் குறிப்பிடுகிறார்கள்.

பெரும்பாலும் இந்த நோயானது ஏதாவது மருத்துவப் பரிசோதனையின் போதோ அல்லது வேலைக்கு ஆள் தேர்வு செய்யும் போது நடைபெறும் மருத்துவப் பரிசோதனைகளின் போதோதான் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்படுகிறது. இருந்தாலும் சிலசமயங்களில் தலைவலி, படபடப்பு, நெற்றிப்பொட்டு, எலும்புப் பகுதியில் உள்ள தமனிகள் துடித்தல் போன்ற அறிகுறிகள் தோன்றலாம். ஆனால் இந்த அறிகுறிகளைக் கொண்டு இரத்தமிகு அழுத்த நிலையை உறுதிசெய்ய முடியாது.

இந்த நோய் இருக்கிறது என்பதை எப்படி உறுதி செய்வது? இரத்தமிகு அழுத்த நிலையைக் கண்டுபிடிக்க மிகச்சிறந்த முறை, இரத்த அழுத்தக் கணக்கீடு கருவியைப் பயன்படுத்தி நேரிடையாக இரத்தத்தின் அழுத்தத்தை அளவிடுவது தான். இது மிகவும் எளிமையான, சிறந்த, நம்பகமான முறையாகக் கருதப்படுகிறது.

இந்த முறையால் இரத்தமிகு அழுத்த நோயைக் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து தக்க மருத்துவச் சிகிச்சைகளின் மூலமாகக் கட்டுபடுத்தாவிட்டால் இதயத்தில் மட்டுமன்றி உடலில் உள்ள முக்கியமான உறுப்புகளிலும் பலவகையான சிக்கல்கள் உருவாகக்கூடும்.

இரத்தமிகு அழுத்தத்தின் காரணமாக இதயத்தமனிகள் தடித்துச்சுருங்குவதால் இதய வலி ஏற்படும். மேலும் இதயத் தசைகள் தங்களுடைய இயற்கையான வலுவை இழப்பதால் உடலுக்குத் தேவையான இரத்தத்தை இதயம் செலுத்த முடியாத நிலையில் இதயச் செயலின்மை நிலை (Heart Failure) ஏற்படுகிறது. மேலும் தக்க மருத்துவ முறைகளின் மூலமாக உரிய நேரத்தில் இரத்தமிகு அழுத்த நோயைக் கட்டுப்படுத்தாவிட்டால் மாரடைப்பு ஏற்படுவதையும் தவிர்க்க முடியாது.

இரத்த அழுத்த நோய்க்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடிவதில்லை எனப் பொதுவாகப் பிற மருத்துவ முறைகளில் கூறுவதுண்டு. ஆனால், கல்லீரலின் இயக்கம் சீராக இருந்தாலே இரத்த அழுத்த நோயைக் கட்டுப்படுத்தி விடலாம் என்பது வர்ம மற்றும் சித்த மருத்துவ சிகிச்சை முறையில் அனுபவ ரீதியாகக் கண்டறியப்பட்ட உண்மையாக உள்ளது.

இந்தியாவில் ஆயிரத்துக்கு எழுபது பேர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதற்கு உடல்எடை அதிகரித்தல், மன உளைச்சல், ஓய்வின்மை எனப்பல காரணங்கள் கூறப்படுகின்றன.

வர்ம மருத்துவத்தைப் பொறுத்தவரை கல்லீரலின் செயல்பாடு பாதிக்கப்படும் போது, உடல்வாகைப் பொறுத்து இரத்த அழுத்தம் கூடுவதற்கோ, குறைவதற்கோ வாய்ப்பு அதிகரிக்கிறது.

பொதுவாக வாத உடலுக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதில்லை. ஏனெனில் வாதநீரானது பித்தத்தைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும், பித்த உடம்புக்கு உயர் இரத்த அழுத்தம் வர அதிக வாய்ப்புண்டு. காரணம் கல்லீரலால் அளவுக்கு அதிகமான பித்த நீர் உற்பத்தி செய்யப்படும்போது, பித்த அழற்சி மீறி அதிக இரத்தஅழுத்த நோய் உருவாகிறது.


இரத்த அழுத்தத்துக்கு வயதை மட்டுமே வரம்பாகவோ, காரணமாகவோ கூற முடியாது. உணவுமுறையும், வாழ்க்கை முறையும் முக்கியமான காரணிகளாகும், அளவுக்கு மீறி உண்ணுதல், நேரம் தவறி உண்ணுதல், தூக்கமின்மை, மது, புகையிலை உள்ளிட்ட போதைப் பழக்கம் என இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கான காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

கிறுகிறுப்பு, தலைவலி, முகமும் உடலும் சிவத்தல், உணர்ச்சி வசப்படுதல் போன்றவை இரத்த அழுத்தத்திற்கான அறிகுறிகள் ஆகும். கல்லீரலை வலுவாகவும், அதன் இயக்கத்தைச் சீராகவும் வைத்துக் கொள்வதற்கான மருந்தை உட்கொள்வதன் மூலம் மட்டுமே இரத்த அழுத்த நோயைக் குணப்படுத்த முடியும்.

வேலிப்பருத்தி இலைகள் 5 எடுத்து சுத்தமான நீரில் கழுவி சிறிது பால் விட்டு அரைத்து 50மி.மி பாலில் கரைத்து தினமும் அதிகாலை 4.00மணி முதல் 5.00 மணிக்குள் ஒரு மண்டலம் (48 நாட்கள்) உட்கொண்டு வந்தால் இரத்த அழுத்த நோய் குறைந்து விடும். இம் மருந்தை இரத்தக் கொதிப்புள்ள சர்க்கரை நோயாளிகளும் அருந்தலாம். இது வர்மப் பரிகார முறையாகும்.

இஞ்சி, பூண்டு, சோம்பு, சீரகம் இவற்றை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்வதன் மூலம் இரத்த அழுத்த நோயைத் தவிர்க்க முடியும். கோவைக்காய், பாகற்காய் இவை இரத்த அழுத்தத்தைத் தடுக்கும் சிறந்த மூலிகைக் காய்களாகும்.

பாகற்காய் 15 கிராம் எடுத்து சுத்தமான நீரில் நன்கு கொதிக்க வைத்து தினமும் காலையில் ஒரு மண்டலத்திற்கு (48



நாட்கள்) குடித்து வந்தால் இரத்த அழுத்த நோய் முழுமையாக குணமாகும். இதுவும் வர்மப் பரிகாரமுறையாகும்.

கரிசலாங்கண்ணிக் கீரையைப் பொரியலாகவோ, அவியலாகவோ உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் இரத்த அழுத்த நோயைத் தடுக்க முடியும். கரிசலாங்கண்ணியை அரைத்துப் பாலுடன் கலந்து மூன்று நாட்கள் 6 வேளை அருந்திப் பின்னர் வாரம் ஒரு முறை அருந்தி வர இரத்த அழுத்த நோய் நம்மை எப்போதும் நெருங்காமல் பார்த்துக் கொள்ளலாம்.

வர்ம சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஹோமியபதி மருத்துவ முறைகளிலும் இரத்த அழுத்த நோயை குணப்படுத்த முடியும்.








C - 416.617.5721
H - 416.289.2033 after 7:00pm



ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca


Irudaya Dance Company
Sathangai Narthanalayam Students Association
PRESENTS
JOURNEY
A Glimpse into Tamil Cinema
Exclusive Media Sponsor:
ATN
Powered By:
Lankasri fly
Saturday, September 17, 2016
Doors Open at: 5:00 pm
Chinese Cultural Centre of Greater Toronto
5183 Sheppard Ave E, Scarborough, ON M1B 5Z5
General= $20 VIP= $50 VVIP= $100
(647) 967-1994 (416) 319-0164 (416) 567-8415 (647) 401-1874
Proceeds will be donated to the Canadian Cancer Society and
the Mahadeva Suwamigal Childrens Home in Killinochi, Sri Lanka
PLATINUM SPONSORS
Vela Subramaniam
Dir: 416-786 0760
ROSEMOUNT REALTY
AND ASSOCIATES LTD., BROKERAGE
Your Partner in Real Estate
416.290.6000
www.ramanans.com
REALTOR RAMANAN
MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN
416-908-5656
SIVA NAGAMANY
I CAN FIND THE BEST MORTAGE FOR YOUR HOME
CALL TODAY!
UTHA JEYANANDAN
416-953-1473
mortgageguardian.ca
OHM
DEVELOPMENTS
AVR AUTO
COLLISSION LTD
Tel: 416.640.2991
Jyothi
Experience the Taste
Tel. (416) 477- 5345
www.jyothifoods.com
SILVER SPONSORS
SUBAN SINNADURAI
CIBC
ARYA
CANADA INC
MORTGAGE CONSULTANT
Nilogini Thurairajah
(905) 239 - 6845
Ohm COMPUTERS
SIVA & JOY
einthusan.com

# Another Project By CONCORD

EXCHANGE

At Lake shore and Bathurst





Price starting:
High $200K's

For VVIP Reservation and Special Prices**

Please Call: 416 321 6969

HomeLife/GTA Realty Inc., Brokerage*

GTA SQUARE 5215 Finch Ave. East. Unit #203 Toronto ON. M1S 0C2

HOMELIFE HIGHER STANDARDS

** Some Conditions will Apply

* Independently Owned & Operated

# JRS AUTO TECH

**OPEN 24 HOURS**
**7 DAYS A WEEK**

**MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS**

VISA

- ✔ Free Inspection & Diagnostics
- ✔ Complete Car & Truck Care
- ✔ Licensed Mechanics
- ✔ Insurance Work Done
- ✔ All Fluid Top Ups & A/C Repairs
- ✔ Fuel Injection Service & Muffler/ Turbos
- ✔ Courtesy Drop Off & Pick Up Available
- ✔ Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

## TIRE SPECIALS



NEW TIRES FROM $75
USED TIRES FROM $35

## FREE OIL CHANGE WITH RUST PROOFING

$99 Car
$120 SUV

## BRAKE JOB

STARTING FROM
$159

## WATER PUMP TIMING BELT & LABOR

STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol

REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95

## TRANSMISSION FLUSH

*Starting From...*
*Imports*
*$74.95*
*Radiator Flush*
*$79.95*
*Domestic*
*$149.95*

## ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS

CHECK

LEXUS

FREE DTC Code Run and Inspection

# 2655 Lawrence Ave. East, Unit 5

(Midland & Lawrence, rear of the building)

## CALL SUBAS DIRECT → 416-206-9489

## Tel: 416-628-4399

**Email: jrsautotech@hotmail.ca**

Like, Share & Follow us at **www.facebook.com/jrsautotech**

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

# தமிழர் தெருவிழா 2016

கனடாவின் ஸ்காபரோவின் வீதிகளில் நடக்கும் கொண்டாட்டங்களில் மிகப் பெரிய விழாவாகக் கருதப்படும் தமிழர் தெரு விழா ஓகஸ்ட் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஓகஸ்ட் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வரை நடை-பெற்றது.

இலங்கையிலிருந்து மட்டக்களப்பு நாடாளு மன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன் உரை நிகழ்த்தினார்.

'தமிழர் தெருவிழா 2016' கொண்டாட்டங்கள் 3 நாட்களாக நடைபெற்றன. இந்நிகழ்வு களில் தவில், நாதஸ்வரம், வில்லுப்பாட்டு, இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இவ்விழாவில் 15க்கும் மேற்பட்ட உணவு அங்காடிகளும், 50க்கும் மேற்பட்ட வர்த்தக, இலாப நோக்கற்ற அங்காடிகளும் காணப் பட்டன. இங்கு நடைபெற்ற இசை நிகழ்ச்சி களில் கனடாவின் பிரபல இசைக்குழுவினர் களான Mega Tuners, Super Sons, Melofunk Music & SunSea Music, BassMent Sound Crew ஆகியோரின் இசையில் கனடாவின் பிரபல பாடகர்கள் அவர்களும் கலந்துகொண்டார்.

தமிழர் தெருவிழாவில் துணைப் பொலிஸ்மா அதிபர் நிசாந் மற்றும் ரொறொன்ரோப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சுரேன் சிவதாசன், கஜன் கதிரவேலு, நிரான் ஜெயநேசன், ஜொனி பொப்லி உள்ளிட்டோர் பாதுகாப்புத் துறையில் அங்கம் வகிக்கும் இளம் பொலிசார் மற்றும் துணைப்படையை சேர்ந்த பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.


















முதல் நாள் 2016, ஓகஸ்ட் 26 வெள்ளிக்கிழமை ஒன்றாறியோ முதல்வர் Kathleen Wynne அவர்கள் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து அங்குரார்ப்பண உரைகள் சுருக்கமாக இடம்பெற்றன. பாரம்பரிய நடனம், துள்ளிசை நடனம், நவீன நடனம் எனப் பலவகை நடனங்க ளும், சிலம்பாட்டம் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களும், தெருக்கூத்து, ஆடை அலங்கார அணிவகுப்பு என பல்வேறு வீதிக் கொண்டாட்ட நிகழ்வுகளும், மேடை பாடினர். சிறப்புப் பாடகர்களாக தமிழ் தெருவிழா 2016க்காக தமிழகத்திலிருந்து திரைப்படப் பாடகர் ஹரீஷ் ராகவேந்திரா அவர்களும், சுப்பர் சிங்கர் பாடகர் சந்தோஷ் அவர்களும் வந்திருந்தனர். இவர் களோடு சமையல்கலை வல்லுனர் தாமு

1986 ஆம் ஆண்டு நியூபவுண்லாந்துக்கு 155 தமிழர்கள் அகதிகளாக வந்த படகுகளில் ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டு இருந்தது.

# ஜோக்கர்...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

தான் பிரச்சனைன்னா பேர்றதும் பிரச்சினை யா..?", "ஹெலிகாப்டரை பார்த்து கும்பிடறது தப்பு" போன்ற வசனங்கள் அரங்கத்தை அதிர வைக்கிறது. 'ஏர்கூலர் வைத்து நடத்தப்பட்ட அரைமணி நேர உண்ணாவிரதத்தையும்' விட்டுவைக்க வில்லை இவர்கள்.

ஒளிப்பதிவு: செழியன் கிராமத்தின் சூழலை அருமையாகக் காட்சிப்படுத்தியுள்ளார். இசை: ஷான் ரோல்டன் 'என்னங்க சார் உங்க சட்டம்' பாடலில் நிமிரவைக்கிறார் என்றால், 'ஜாஸ்மின்', ரமேஷ் வைத்யா எழுதிய 'செல்லம்மா' பாடல்களில் உருக வைக்கிறார்.

திரைக்கதை, இயக்கம்: ராஜுமுருகன். திரைக்கதை யதார்த்தத்திலும் யதார்த்தம். கொஞ்சம் நையாண்டியும் நிறைய கோபமு மாக சமூக அக்கறையுடன் இப்படி ஒரு அரசியல் படத்தைக் கொடுத்த துணிச்சலுக் காக ராஜு முருகனை தயங்காமல் பாராட்டலாம். இன்றைய தமிழ்நாட்டில் அரசியலையும் தர்மபுரி மாவட்ட சூழலையும் அப்படியே தத்ரூபமாகக் காட்டியிருக்கிறார். தர்மபுரி மாவட்டத்தின் குடிநீரில் கலந்திருக்கும் ப்ளோரைடால் அந்தப் பகுதி மக்களுக்கு இயல்பாகவே இருக்கும் பற்கறை உட்பட பல விஷயங்களைப் பார்த்துப் பார்த்து நுட்பமாக பதிவு செய்திருக்கிறார்.



ஜோக்கர் – தமிழில் ஓர் அழுத்தமான அரசியல் படம்.

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
படிக்க கொஞ்ச நேரம் ஒதுக்குங்க கை நிறைய சம்பாதிங்க



JOB READY PROGRAMS
ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks
Jobs available in plenty
Earn good salary
Co-op Available
COMPUTERIZED ACCOUNTING
26 Weeks
PERSONAL SUPPORT WORKER(PSW)
28 Weeks
FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks
MEDICAL OFFICE ADMIN.(MOA)
32 Weeks
BUSINESS ADMINISTRATION
26 Weeks

GOVERNMENT GRANT
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000 or more

PART TIME COURSES
Windows, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting (Simply) & Accpac 2012
Workshops
Food Handler Certification
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Placement Assistance
- TTC Accessible
- Instructors with over 15 years of Canadian Experience

416- 451- 6680 / 416-291-5155
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# புத்தகங்கள் அழியாது

## - எழுத்தாளர் ரமணிசந்திரன்

## நேர்காணல்

தமிழில் எந்த எழுத்தாளருடைய புத்தகங்கள் அதிகம் விற்பனையாகிறது என்று, 'நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி' நிகழ்ச்சியில் கேட்டால் உங்கள் பதில் என்னவாக இருக்கும்? ரமணிச் சந்திரன் அல்லாமல் வேறு யார் பெயரைச் சொன்னாலும் அது தவறான பதிலாகத்தான் இருக்கும். ஆம், நம் எல்லோர் கற்பனை யையும் மீறி ஆச்சரியமளிப்பவை ரமணி சந்திரனின் புத்தகங்களின் விற்பனை. 78 வயதாகும் ரமணிசந்திரன், இப்போதும் ஓயாமல் எழுதிக் கொண்டிருக்கிறார். சென்னை மயிலாப்பூரிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வாழும் ரமணிச் சந்திரனை சந்தித்தோம்.

இப்போது அனேகமாக எல்லா எழுத்தாளர் களுமே கம்யூட்டருக்கு மாறிவிட்டார்கள். நீங்கள் எப்படி, இன்னும் பேனாவில்தான் எழுதுகிறீர்களா அல்லது கம்யூட்டருக்கு மாறிவிட்டீர்களா?

பேனாவைப் பிடித்து எழுதி எழுதி என் கைவிரலில் மைக்ரோ சர்ஜரி பண்ணும் அளவுக்கு தள்ளப்பட்டுவிட்டேன். எனவே, இப்போது பேனாவைப் பிடித்து கொஞ்சநேரம் எழுதினாலும் வலி உண்டாகிவிடும். எனவே, நானும் கம்யூட்டருக்கு மாறிவிட்டேன். பத்து வருடங்கள் ஆகிறது. இதில் சில சௌகரி யங்கள் இருக்கின்றன சில அசௌகரியங் களும் இருக்கின்றன. பேனாவில் எழுதிக் கொண்டிருந்தபோது மனதில் வார்த்தைகள் அருவி மாதிரிக் கொட்டும். தோன்றியதை எல்லாம் கடகடவென்று அப்படியே எழுதி விடுவேன். ஆனால், கம்யூட்டர் முன்னால் அதுபோல் நிகழ்வதில்லை. உட்கார்ந்து யோசித்து யோசித்து கீ போர்டை தட்ட வேண்டியிருக்கிறது. ஆனால், பேனாவில் எழுதும்போது ஸ்பெல்லிங் மிஸ்டேக் வந்தால் பேப்பரை கசக்கித் தூக்கி எறிந்து விட்டு மறுபடியும் முதலில் இருந்து புதுப் பேப்பரில் எழுத வேண்டியிருக்கும். ஆனால், கம்யூட்டரில் அப்படியில்ல.

நீங்கள் எழுத வந்தது எப்படி?

தமிழ்நாட்டில் திருச்செந்தூர் பக்கம் இருக்கிற மூலைப்பொழில் கிராமம்தான் என்னுடைய சொந்த ஊர். என்னுடன் பிறந்தவர்கள் ஆறு பேர். அப்பா கணேசன், அந்த காலத்திலேயே பி.ஏ. படித்தவர். மிகப்பெரிய நிலச்சுவான்தர். எங்கள் எல்லோரையும் நல்லமுறையில் படிக்க வைத்தார். எங்கள் அம்மா கமலசுந்தர தேவி எதையுமே கலைநயத்தோடு பார்ப்பார்கள். எங்கள் ஊர் பக்கம்தான் கடற்கரை. அங்கே போனால் கடல் அலையைப் பார்த்துப் பயப்படுகிறதைவிட அதை ரசிப்பது எப்படி? அலையின் ஒலி எவ்வளவு அழகானது, ரம்மியமானதென்று விளக்குவார்கள். என் கற்பனைத் திறனை அம்மாகிட்டே இருந்துதான் கற்றுக்கொண்டேன். அதுதான், என்னுடைய எழுத்துத் திறமைக்கும் அடிப்படை. எனக்குத் திருமணமான பின்னர் கோயம்புத்தூரில் இருந்தோம். என் தங்கை சந்திரா சென்னையில் இருந்தாள். போன் இல்லாத காலகட்டம். எங்களுக்குள் பேசிக் கொள்வதற்கான தொடர்பு சாதனம் என்பது கடிதங்கள் மட்டுமே. என் தங்கைக்கு தொடர்ந்து நான் எழுதிய கடிதங்கள்தான் என்னை எழுத்தாளராக்கியது.

அப்படியென்ன அந்தக் கடிதங்களின் விசேஷம்?



என் கடிதங்களில் குடும்ப விவகாரங்களை மட்டுமல்லாமல், என்னைச் சுற்றியுள்ள விஷயங்களை எல்லாம் விவரித்து எழுதுவேன். அதைப் பார்த்த தங்கையின் குடும்பம், "நீ எழுதுகிறதை படிக்கும்போது அங்க இருக்கிற சூழலை நேரில் பார்க்கிற மாதிரி இருக்கு" என்று பாராட்டுவார்கள். அது எனக்கு ஒரு ஊக்கம். ஒருநாள், கோவையில் ஆலங்கட்டி மழை பெய்தது. அதைப் பார்த்த என் அனுபவத்தை அப்படியே கடிதத்தில் எழுதி அனுப்பினேன். அதைப் படித்த என் தங்கையின் கணவர் அ. மாரிசாமி, அப்போது அவர் ராணி பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார். அவர் என்னை சிறுகதை எழுதச் சொல்லிப் பாராட்டினதோடு பத்திரிகையில் அறிவிப்பும் வைத்துவிட்டார். அப்படித்தான் நான் எழுத ஆரம்பித்தேன்.

எட்டு வருடத்துக்கு முன்னால் ஒரு வார இதழில் வெளியான 'கண்டநாள் முதல்'தான் நீங்கள் பத்திரிகைகளுக்கு எழுதிய கடைசி த்தொடர்கதை. அதன்பின்னர் ஏன் தொடர் கதை எழுதுவதை நிறுத்திவிட்டீர்கள். இப்போது என்ன எழுதிக்கொண்டிருக்கீறீர்கள்?

உண்மைதான், அதன்பின்னர் பத்திரிகைக-ளில் எழுதுவதை விட்டுவிட்டேன். தொடர் கதைகளைப் பொறுத்தவரைக்கும் ஒவ்வொரு இதழிலும் முடிக்கும்போது, அதற்கடுத்த இதழிலும் வாசகர்களை ஆர்வமாகத் தேடி வந்து படிக்கவைக்க, ஒரு சஸ்பென்ஸ் வைக்க வேண்டும். இப்படி ஒவ்வொரு வாரமும் ஒரு சஸ்பென்ஸ் வைப்பதற்காக தேடித்தேடி, ஒரு கட்டத்தில் அதனால் எனக்கு ரத்த அழுத்தம் அதிகமாகிவிட்டது. எனவே, பத்திரிகைகளில் தொடர்கதை எழுதுவதை முடித்துக்கொண்டேன். ஆனால், அதன் பின்னரும் மூன்று மாதத்துக் ஒருமுறை என்னுடைய நாவல்கள் வெளி யாகிக் கொண்டுதான் இருக்கிறது. இப்போது, ஒரு மென்மையான காதல் கதை எழுதிக் கொண்டிருக்கிறேன்.

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

# வாழ்க்கைப் பயணங்கள் - 24

## தொடர்கதை.........

அடுத்த நாள் வேலையுடன் அமலா சுறுசுறுப்பாக இருந்தாலும் அவள் மனதில் ஒரு புறத்தில் "இன்று நான் அரவிந்த் இனை மாலை சந்திக்கப் போகின்றேன். நான் நினைச்ச மாதிரி எனது திருமண முறிவு பற்றிச் சொல்லி விடவேண்டும். அதன்பின்பு அரவிந்த் நட்பை முறித்துக் கொண்டாலும் பரவாயில்லை" என்ற தனது எண்ணத்தைத் திரும்பத் திரும்பக் கூறி மனதில் உறுதியெடுத்துக் கொண்டாள். ஆனாலும் அவளுக்கு ஒருவிதமான அச்சம் இருக்கத்தான் செய்தது.

வேலை முடித்துக் கொண்டு அமலா அரவிந்த் கூறியவாறு ஸ்ரார் பக் கோப்பிக் கடைக்குச் சென்று அங்கே தனக்காகக் காத்துக் கொண்டிருந்த அரவிந்த் இனைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் அவனருகில் சென்று சுகம் விசாரித்துக் கொண்டு அவன் எதிராக இருந்த ஆசனத்தில் அமர்ந்தாள்.

சிறிது நேரத்தில் அரவிந்த் காசாளரிடம் சென்று இருவருக்கும் காப்பி வாங்கிக் கொண்டு வந்தான்.

"ஏன் அமலா கொஞ்சம் படபடப்போடு இருக்கிறீர்கள்?. வேலையிடத்தில் ஏதாவது பிரச்சினையா?" என்று கேட்டான் அரவிந்த்.

"இல்லை அரவிந்த். உண்மையில் நான் ஒரு விடயத்தை உங்களிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்து வந்தேன். ஆனால் அதை எப்படிச் சொல்வது என்றுதான் எனக்குத் தெரியவில்லை" என்றாள் அமலா.

"அதிலென்ன தயக்கம் அமலா. என்ன விடயம் என்றாலும் தயங்காது சொல்லுங்கோ" என்று சொல்லி அமலாவின் தோளில் தனது கையை வைத்து அமல-ாவைத் தைரியப்படுத்தினான் அரவிந்த்.

அமலாவின் கண்கள் கலங்கின. ஒருவாறு தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு அமலா பேசத் தொடங்கினாள்.

"அரவிந்த். நாங்கள் இருவரும் மனம் விட்டு நிறைய உரையாடியிருக்கிறோம். ஆனால் எனது வாழ்வில் எனக்கு ஏற்பட்ட ஒரு துர்ப்பாக்கியமான விடயத்தைப் பற்றி மட்டும் நான் உங்களிடம் எதுவும் சொல்லாமல் விட்டு விட்டேன். இந்த விடயத்தை உங்களிடம் மறைத்துக் கொண்டு உங்களுடன் நட்பாகப் பழகுவது எனக்கு மிகவும் கஸ்டமாக உள்ளது." என்றாள் அமலா.

"அமலா உங்கள் உண்மையான நட்புக்கு மிக்க நன்றி. தயவுசெய்து என்னோடு பகிர்ந்து கொள்ளுங்கள். என்னால் முடிந்தளவு உங்களுக்கு ஆதரவாக நான் இருப்பேன்" என்றான் அரவிந்த்.

"அரவிந்த் எனக்குத் திருமணப் பேச்சு நடந்து பதிவுத் திருமணமும் இலங்கையில் நடந்து கனடாவிற்கு வந்த பின்பு திருமணம் நடப்பதாக இருந்தது. ஆனால் எல்லாம் பிரச்சினையாகப் போய்விட்டது." என்று ஆரம்பித்து தனக்கு ஏற்பட்ட துர்ப்பாக்கி யத்தைப் பற்றி விபரமாகக் கூறினாள் அமலா.

இதை அரவிந்த் எப்படி எடுத்துக் கொள்வானோ என்ற அச்சத்தால் அவன் முகத்தைப் பார்க்கத் துணிவின்றி தனது கையால் முகத்தை மூடியவாறு மௌனமாக அழுது கொண்டிருந்தாள்.

"அமலா கவலைப்படாதே! கடவுள்தான் உங்களைக் காப்பாற்றியிருக்கிறார். இத்த கைய நிலையற்ற மனிதருடன் நீங்கள் வாழ்ந்திருந்தால் உங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியாய் இருந்திருக்காது. இதுபற்றி நீங்கள் கொஞ்சமும் கவலைப்படாதீர்கள். உங்கள் அழகுக்கும், நல்ல குணத்திற்கும், திறமைக்கும் எல்லாம் நன்றாக அமையும். நடந்ததைக் கெட்ட கனவாக நினைத்து மறந்திடுங்க" என்று சொல்லியவாறு அமல-ாவின் கையை தனது கையால் இறுகப் பற்றி அமலாவை ஆறுதல் படுத்தினான் அரவிந்த்.

அமலாவுக்கு அரவிந்த் நடந்து கொண்ட விதம் மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. அரவிந்த் மீதுள்ள எண்ணம் மேலும் பன்மடங்கு அதிகரித்தது.

"ஐயோ கடவுளே! அமலா போன்ற அற்புதமான பெண்ணுக்கு இந்த நிலை ஏற்பட்டு விட்டதே. ஆனால் அமலா கெட்டிக்காரி. இந்தத் துயரத்தால் தனது வாழ்வை இழக்காது துணிவோடு போராடி வெற்றி பெற்றிருக்கிறாள். அமலா உண்மையில் பாராட்டப்பட வேண்டியவள். இவளுக்கு நான் ஆதரவாக நல்ல நட்போடு இருக்க வேண்டும். இவள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். கடவுளே இவளுக்கு உங்கள் அருளைப் பொழியுங்கள்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு கடவுளைப் பிரார்த்தித்தான் அரவிந்த்.

அரவிந்த் பேச்சின் திசையை மாற்றி அமலாவுடன் மகிழ்ச்சியாக உரையாட அமலாவும் அரவிந்த் இடம் மனம் திறந்து எல்லாம் சொல்லி விட்டேன் என்ற மன நிறைவோடு அரவிந்த் உடன் மகிழ்ச்சியாக உரையாடத் தொடங்கினாள்.

சிறிது நேரம் உரையாடி விட்டு "வாங்கள் அமலா. இன்று ஒரு சைனீஸ் ரெஸ்ற்ரோ றன்ற் இல் போய்ச் சாப்பிடுவோம்." என்று சொல்ல அமலாவும் "நேரத்தைப் பார்த்து விட்டு 7 மணியாகி விட்டது. நேரம் போனதே தெரியவில்லை" என்று சொல்லிக் கொண்டு இருப்பிடத்தை விட்டு எழுந்தாள்.

சைனீஸ் ரெஸ்ற்ரோறன்ற் இல் உணவருந்தியவாறு அமலா "சாப்பாடு நல்லாய் இருக்குது. மிக்க நன்றி அரவிந்த். உங்கள் நட்பை தந்த கடவுளுக்கும் நன்றி" என்றாள் அமலா.

"எனக்கும் உங்கள் நட்புக் கிடைத்ததில் மகிழ்ச்சி" என்றான் அரவிந்த்.

இரவு 9:30 வரை ரெஸ்ற்ரோறன்ற் இல் உணவருந்தியவாறு அவர்களின் உரையாட லும் அமைந்திருந்தது. இடைக்கிடை திசை மாறி வேலை, கணினித் துறை பற்றியும் கலந்துரையாடிக் கொண்டாலும் அதிகளவி ற்கு தத்தமது எண்ணங்களை, கடந்த கால நினைவுகளை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்ளும் விதமாகவே அமைந்திருந்தது. இவர்களின் முதல் நாள் உரையாடலுக்குப் பிறகு இன்றுதான் இவ்வளவு நேரம் ஒன்றாக அமர்ந்திருந்து பேசினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ரெஸ்ற்ரோறன்ற் இல் இருந்து புறப்பட்டு சப்வே நிலையம் வரை நடந்தபடியே உரையாடிச் சென்று கைகளை இறுகப் பற்றிக் குலுக்கி விட்டு ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு தோள்களைத் தொட்டு அன்பைப் பரிமாறி விட்டு புகையிரதத்தில் ஏறிக்கொண்டார்கள்.

அவர்கள் உரையாடல் புகையிரதத்திலும் சில நிமிடங்கள் தொடர்ந்தன.

அமலா இறங்க வேண்டிய நேரம் வந்ததும் " எல்லாத்துக்கும் நன்றி அரவிந்த். இரவு முடிந்தால் பேசுகிறேன்" என்று சொல்லிக் கையைசைத்து விட்டு அமலா புகையிரத நிலையத்தை விட்டு இறங்கினாள்.

அரவிந்த் தனது மோட்டார் வண்டி தரித்திருக்கும் இடத்தில் இறங்கித் தனது காரை நோக்கி நடந்தான்.

"நாங்கள் நல்ல நண்பர்கள் மட்டுமா? அல்லது இருவரும் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றோமா? நான் மட்டுமா காதலிக்கின்றேன்?" போன்ற கேள்விகள் இருவர் மனதிலும் சமகாலத்தில் தாண்டவமாடின.

ஆனால் இந்தக் கேள்விகளுக்கு விடை காணும் நோக்கில் எந்த முன்னெடுப்பையும் எடுத்து தமது நட்புக்கு நன்மையோ அல்லது தீமையோ ஏற்படுவதற்கு முகம் கொடுக்க அவர்கள் தயாரில்லை,

அன்றைய தினத்தில் நடந்த உரையாடல் கள் பற்றிய நினைவு களுடனேயே இருவரும் தத்தமது வீடு நோக்கிப் பயணித்தார்கள்.......

அமலா வீட்டையடைந்ததும் நேரடியாக படுக்கையறைக்குச் சென்று சிறிது நேரம் இளைப்பாறப் படுக்கையில் படுத்தாள்.

"இன்று முதல் எனது விடயங்களை மறைக்காது பகிர்ந்து கொள்ளச் சுகந்தியைப் போல் அரவிந்தும் இருக்கிறார்" என்று அமலா தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

அந்த மனநிறைவும், களைப்பும் ஒன்று சேர்ந்து பரிசாகக் கொடுத்த குட்டித் தூக்கம் அவளைப் பற்றிக் கொண்டது.

(யாவும் கற்பனை) (தொடரும்.....)



- அகணி -
authorakani@gmail.com


அளவெட்டி மக்கள் மன்றம் கனடா
வருடாந்த ஒன்று கூடலும் பொதுக்கூட்டமும்
செப்டம்பர் 03 ஆம் திகதி சனி காலை 10:00 மணி முதல்
Steeles & Mccowan இல் அமைந்துள்ள
மில்லிக்கன் பூங்கா "C" பிரிவில் நடைபெறவுள்ளது.
ஊர் மக்கள் அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.
மேலும் விபரங்களுக்கு : 416.451.6680 / 647.346.5584

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# இயற்கையின்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

அதற்குள் மீண்டும் ஒளி துகள்களாகத்தான் பயணப்படுகிறது என கணித முறையில் காட்டுகிறார்கள். இந்த இழுபறிக்கு முடிவே இல்லையா? உங்களுக்கும் இப்படியான சலிப்பொன்று ஏற்படுகிறதா? ஆனால் விஞ்ஞானிகளுக்குச் சலிப்பென்பது ஏற்பட வேயில்லை. இன்னமும் ஆர்வமுடன் தொழிற்படுவார்கள்., வெற்றியினைப் பெறுவதற்கு. இச்சிக்கலுக்கும் தீர்வு இருக்கிறது எனக் கூறினார், அயன்ஸ்ரைன். ஒளி துகளா இல்லை அலையா என்ற கேள்விக்கு அழகான விளக்கமொன்றைக் கொடுத்தார். தனது விளக்கமானது புதியதொரு இயற்பியற் பகுதிக்கான திறவுகோல் என அப்பொழுது அவர் அறிந்திருக்கமாட்டார். அதனை அடுத்த




தடவையிற் பார்ப்போம் சரிதானே!

# ஜோக்கர்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

பரவுகிறது.

கடைசியாக தனது மனைவி மல்லிகாவை வீட்டில் வைத்துக் கவனிக்க முடியாமல் அவளைக் கருணைக் கொலை செய்ய அனுமதி வேண்டி உச்ச நீதிமன்றம் செல்கிறார் மன்னர் மன்னன். முடிவு என்ன என்பது க்ளைமாக்ஸ்.

ரியோ ஒலிம்பிக் மகளிர் கால்பந்து போட்டியில் ஜேர்மனி அணி முதன்முறையாக தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளது. மகளிர் கால்பந்து போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஜேர்மனி- சுவீடன் அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடை-பெற்ற இந்த ஆட்டத்தின் முடிவில் ஜேர்மனி அணி 2-1 என்ற கோல் கணக்கில் சுவீடனை வீழ்த்தியது. இதன் மூலம் ஜேர்மனி ஒலிம்பிக் அரங்கில் முதன்முறையாக தங்கப்பதக்கம் வென்று வரலாறு படைத்தது. தோல்வி கண்ட சுவீடன் அணிக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது. ஜேர்மனி அணி ஒலிம்பிக் போட்டியில் ஏற்கனவே 3 முறை வெண்கலப் பதக்கம் வென்றுள்ளது. ஆனால் தற்போது தான் முதன்முறையாக தக்கப்பதக்கம் வென்றுள்ளது. மேலும், முன்னதாக நடை-பெற்ற வெண்கலப்பதக்கத்துக்கான போட்டியில் கனடா 2-1 என்ற கோல் கணக்கில் பிரேசிலை வீழ்த்தி வெண்கலப்பதக்கத்தை வென்றது.

## ரியோ ஒலிம்பிக்ஸ் இல் மின்னல் மனிதர்!

ரியோ ஒலிம்பிக் போட்டியில் உலக சாதனை படைத்த ஜமேக்கா நாட்டு சூப்பர் ஸ்டார் உசைன் போல்ட் விரைவில் விளையாட்டுப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஒலிம்பிக் வரலாற்றில் இதுவரை எந்த வீரரும் நிகழ்த்தாத சாதனையை ஜமேக்கா நாட்டை சேர்ந்த உசைன் போல்ட் நிகழ்த்தி தனது நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார்.

114 விநாடிகளில் 9 தங்கப்பதக்கங்களை வென்ற ஒரே விளையாட்டு வீரர். அதாவது, மைதானத்தில் 2 நிமிடங்கள் மட்டும் செலவிட்டு போல்ட் 9 தங்கப்பதங்களை இதுவரை வென்றுள்ளார்.

போல்ட்டின் வேகத்தை ஒரு வாகனத்தின் வேகத்தோடு ஒப்பிட்டால், போல்ட் மணிக்கு சுமார் 3,54,056 கி.மீ தூரம் ஓடக் கூடியவர் ஆவர். இவ்வளவு வேகத்தில் இதுவரை எந்த மனிதரும் ஓடியதில்லை. இதனால் தான், போல்ட் 'ஒரு மின்னல் மனிதர்' என அழைக்கப்படுகிறார்.

உலகம் முழுவதும் தற்போது போல்ட்டின் பெயரை உச்சரித்து வரும் நிலையில், அனைவரும் அதிர்ச்சி அடையும் வகையில் போல்ட் விளையாட்டில் இருந்து விரைவில் ஓய்வு பெறுகிறார் என்ற செய்தி வெளியாகியுள்ளது. இது குறித்து வெளியாகியுள்ள செய்திகளில் 'புகழின் உச்சத்தில் இருக்கும் போதுதான் ஒரு சாதனையாளர் ஓய்வு பெற வேண்டும். இந்த அபார சாதனையை மற்றவர் முறியடிக்கும்போது போல்ட் களத்தில் இல்லாமல் இருப்பது தான் அவருக்குப் பெருமை' என ஊடகங்கள் கருத்து தெரிவித்துள்ளன. ஊடகங்களின் செய்திகளை போல்ட்டும் ஏற்றுக்கொண்டுள்ளார். ஓய்வு பெறுவது குறித்து போல்ட் தனது சொந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார். அதில், 'எனக்கு வயதாகி கொண்டே செல்கிறது. 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் எனது சாதனையை நானே முறியடிப்பேனா என்பது கடினம் தான்.


லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் போது 200 மீற்றர் சாதனையை ரியோ ஒலிம்பிக்கில் முறியடிக்க நினைத்தேன். ஆனால், முடியவில்லை. லண்டனில் 19.32 வினாடிகளும் ரியோவில் 19.78 வினாடிகள் தான் ஓட முடிந்துள்ளது' எனக் கூறியுள்ளார். மேலும், ரியோவில் நிகழ்ந்த ஒலிம்பிக் போட்டியும் அடுத்தாண்டு லண்டன் நகரில் நடைபெற உள்ள World Championships விளையாட்டு போட்டி தான் எனது கடைசி விளையாட்டு போட்டிகள் என போல்ட் தீர்மானித்துள்ளார். 'நான் ஒரு மிகச் சிறந்த விளையாட்டு வீரர் என்பதை இந்த உலகிற்கு நிரூபித்து விட்டேன். இதற்காக தான் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்றேன். எனவே, இதுதான் எனது கடைசி ஒலிம்பிக் போட்டி' என உசைன் போல்ட் உருக்கமாக தெரிவித்துள்ளார்.

## இலங்கை அணி தொடரைக் கைப்பற்றியது

இலங்கை, அவுஸ்திரேலியா இடையேயான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 3-0 என அவுஸ்திரேலியாவை 'வொயிட்வாஷ்' செய்து கம்பீரமாகக் கிண்ணத்தை கைப்பற்றியது. இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலியா அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று விளையாடியது. இதில் இலங்கை அணி முதல் இரண்டு போட்டியை வென்று முன்னதாகவே தொடரை கைப்பற்றியது. இந்நிலையில் கொழும்பில் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நடந்தது. முதலில் விளையாடிய இலங்கை அணி முதல் இன்னிங்சில் 355 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர், முதல் இன்னிங்சை விளையாடிய அவுஸ்திரேலியா அணி 379 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை விளையாடிய இலங்கை அணி 8 விக்கெட் இழப்பிற்கு 347 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் டிக்ளேர் செய்தது. 324 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கி விளையாடிய அவுஸ்திரேலியா அணி, ஹெராத் சுழலில் 160 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. அசத்தலாக பந்து வீசிய ஹெராத் 7 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதன் மூலம் இலங்கை அணி 163 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிப்பெற்று, மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 3-0 என அவுஸ்திரேலியாவை வொயிட்வாஷ் செய்து கிண்ணத்தைக் கைப்பற்றியது.




இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரும் ஆரம்ப துடுப்பாட்ட வீரருமான தில-கரட்ண டில்ஷான், சர்வதேச ஒருநாள் மற்றும் 20 ஓவர் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித்துள்ளார். 2019 உலக கோப்பைக்கான அணியை உருவாக்கும் பணியில் இலங்கை அணித் தலைவர் மேத்யூஸ் மற்றும் தேர்வாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந் நிலையில், தேர்வாளர்களிடமிருந்து வந்த அழுத்தத்தை தொடர்ந்தே 39 வயதான டில்ஷான் தனது ஓய்வை அறிவித்துள்ளதாக கூறப்படுகிறது. அவுஸ்திரேலிய அணிக்கெதிராக தம்புள்ளையில் இடம்பெறவுள்ள 3வது ஒருநாள் சர்வதேச போட்டியுடனும் கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ள 2வது 20 ஓவர் போட்டியுடனும் சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையில் இருந்து ஓய்வுபெறவுள்ளதாக டில்ஷான் தெரிவித்துள்ளார். இலங்கை அணியின் சகலதுறை ஆட்டக்காரரான டில்ஷான், 87 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 5492 ஓட்டங்களையும் 39 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். இதேவேளை 329 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடி, 10248 ஓட்டங்களையும் 106 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். 78 20 ஓவர் போட்டிகளில் விளையாடி 1884 ஓட்டங்களையும் 7 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



எஸ். கணேஷ்



# EDUCATION

## Review Questions16-17

### ➢ CHEMISTRY 11

Determine the $K^+$ and $NO_3^-$ concentrations after adding 50 ml, 0.02 M $Ca(NO_3)_2$ and 25 ml 0.03 M $Al(NO_3)_3$ in to the 0.01M, 25ml $KNO_3(aq)$ solution.

### ➢ CHEMISTRY 12

(i) Explain the order of increasing boiling points given below,

| | |
|---|---|
| 2,4-dimethyl pentane | 80.5°C |
| n- Heptane | 98.42°C |
| 2- hexanone | 128°C |
| 1- hexanal | 158°C |


(ii) (A) Explain " disproportionation" and "comproportionation" in redox reactions.

(B) Balance the equation in acidic solution

(i) $FeS + NO_3^- \rightarrow Fe^{3+} + NO + SO_4^{2-}$

(ii) $HNO_3 + HCl + NH_4Cl \rightarrow NO_2 + Cl_2 + HClO_4 + H_2O$

(iii) Give IUPAC names of the following




## Answer Key : 16-16

### ➢ CHEMISTRY 12

$K_2Cr_2O_7\,(aq) + 14HCl(g) \rightarrow 7H_2O(l) + 2KCl\,(aq) + 2\,CrCl_3(aq) + 3\,Cl_2(g)$

Mole ratio;
$K_2Cr_2O_7$ (aq) : 14HCl(g) = 1: 14

Molar mass of $K_2Cr_2O_7$ = 294.13 g/ mol
Molar mass of HCl = 36.46 g/mol

Moles of $K_2Cr_2O_7$ = 30 × 0.9 / 294.13
= 0.091796mol.

Moles of HCl = 28 / 36.46 = 0.767964893 mol.
Limiting reactant is, HCl.
HCl : $Cl_2$ = 14: 3
Number of moles of HCl produced,

0.767964893 × 3 / 14 = 0.164563905

= 11.7g

### ➢ Adv. FUNCTIONS 12

*(i)* when the 3rd difference is constant,
3 = a ( 3-1), (3-2 ) (3-1)
leading coefficient (a) = 0.5

*(ii)* $f(x) = a(x-1)(x-2)(x-3)^2$

Plug the values $f(x) = 18$ and $x = 4$, and then find the value "a " and write the equation

$18 = a(4-1)(4-2)(4-3)^2$

$a = 3$

$f(x) = 3(x-1)(x-2)(x-3)^2$

(iii) $f_{(x)} = ax^3 + bx^2 + cx + d$

$a + b + c + d = -7$ ………..(1)

$8a + 4b + 2c + d = -8a + 4b - 2c + d$ ….(2)

$4a + c = 0$ ….(2)

The graph passes through origin,

d = 0 …..(3)

The graph passes through (-1,17)

$-a + b - c + d = 17$ ……..(4)

Solve for a, b, c.

$f_{(x)} = 4x^3 + 5x^2 - 16x$

### ➢ CALCULUS 12

(i) $\lim_{x\to 0} \frac{ax^2+bx+c}{cx^2+bx+a}$ ; *ans C/a*

(ii) $\lim_{h\to -4} \left(\frac{\frac{1}{4}+\frac{1}{h}}{4+h}\right)$ ; $ans = \frac{1}{16}$

(iii) $\lim_{x\to -2} \frac{x+2}{x^3+8}$ $ans = \frac{3}{15}$

(iv) $\lim_{x\to 1} \frac{x^6-1}{x^{10}-1}$ $ans = \frac{1}{12}$

(v) $\lim_{x\to -1} \frac{x^2+x-5}{x+1}$ ans = DNE

Answer key
16-17 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj

KEEN TUTORING CENTRE


# நில அதிர்வுகள்: தொடரும் மனித அவலங்கள்

## EARTH QUAKES

பூகம்பம், புவிநடுக்கம் என்று பல்வேறு தமிழ்பெயர் கொண்டும், தற்போது நில அதிர்வுகள் என அழைக்கப்படும் இவ்வகையான அசைவுகள் உலகெங்கிலும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. புவியின் மேற்பரப்பில் ஏற்படும் இவ்வாறான அதிர்வுகளால் மக்கள் நிம்மதியிழந்து அங்கு மிங்குமாக அலைந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகள் மிகவும் சோகமயமானவை. திடீரென ஏற்படும் இந்நிகழ்வுகளால் கட்டிடங்கள் தகர்ந்து விடும், நிலம் பிளந்து விடும், பாலங்கள் இடிந்து விழும், வீடுகள் தரை மட்டமாகும், ஆறுகள் கூட திசை திரும்பி விடும்.

புவியோட்டில் ஏற்படும் திடீர்சக்தி மாற்றத்தால் (Energy Changes) புவி அலைகள் காரணமாக நிலம் திடீரென அதிர்வதே இந்நில அதிர்வாகும். இதனுடைய தாக்கங்கள் மிகவும் கடுமையானவை, கொடுமையானவை. எவராலும் தாக்குப் பிடித்துக் கொள்ளமுடியாத, தாங்கி கொள்ளமுடியாத நிகழ்வு இதுவாகும். அண்மையில் இவ் அதிவுர்கள் தொடர்ந்து நடைபெறுவதே மனித குலத்திற்கு பெரும் அவலமாகும்.

புவி நடுக்கத்தினை அளப்பதற்கு 'Seismometers' என்னும் கருவிகள் உதவுகின்றன. பொதுவான ரிச்ரர் அளவுகோல் சராசரி 5க்கு கூடவென்றால் உலகிலுள்ள நில நடுக்க பதிவு கருவிகள் பதிவு செய்யும். இதனைவிட குறைந்த அளவு ஏற்படுத்தலாம். எவ்வாறான ஆழத்திலிருந்து வருகிறது என்பதனைப் பொறுத்தே இது அமையும். புவியோட்டில் (Earth crust) வரலாற்றுக் காலத்தில், 9க்கும் கூடிய ரிச்ரர் அளவிலும் நிலஅதிர்வு பதிவு பெற்றுள்ளது.




உள்ளூர் பதிவு கருவிகளில் பதிவாகும். ரிச்ரர் (Richter) என்பவரே இந்த அளவு கோலை கண்டு பிடித்தமையால் எந்த ஒரு நில அதிர்வும் 'Richter magnitude scale' எனவே அழைக்கப்படும். 3ரிச்ரர்க்கு குறைவான அளவினால் எதுவும் பாதிப்பதில்லை. ஆனால் இது 7 ரிச்ரர்க்கு கூடிவிட்டால் பெரிய அளவில் பாதிப்பினை புவியில் ஏற்படும் நில இடப்பெயர்வுகள் (Displacement) காரணமாகவும், பல நிலஅதிர்வுகள் ஏற்படலாம். இவை பொதுவாக கடலோர நிலப்பகுதிகளில் காணப்படும். சுனாமி (Tsunami) எனப்படும் பேரலையின் தோற்றத்திற்கும் இவையே காரணமாகும். சிலவேளைகளில் நில சரிவுகளாலும், எரிமலைகளாலும் கூட நில அதிர்வுகள் ஏற்படலாம். புவியோட்டின் கீழ் உள்ள புவிச்சரிதவியல் முறிவு (Geological faults)களாலும் நில அதிர்வுகள் ஏற்படலாம். நிலஅதிர்வு ஆரம்ப இடத்தினை 'Epicenter' என அழைப்பர். சில இடங்களில் அணு ஆயுத பரிசோதனை, சுரங்க வெடிப்புகளாலும் நில அதிர்வுகள் ஏற்படலாம்.

பாறைகளில் ஏற்படும் முறிவுகள் மூன்று வகையாகும். எனினும், இப்பகுதியில் ஏற்படும் நில அதிர்வுகள் உட்தகடு நில அதிர்வுகள் எனப்படும். சாதாரணமானவை. திரும்பிநிற்கும் வகை, தவறுதலானவை என்பனவே அந்த மூன்றுவகை. முதலாவதும் இரண்டாவதும் நிலைக்குத்தாக ஏற்படும் மூன்றாவது வகை நிலஅதிர்வு கிடையாக ஏற்படுவது பொதுவாக எல்லாமே Dip - slip - Strike slip மூலம் ஏற்படும்.

எமக்கு வருகின்ற ஒற்றைத் தலைவலி போன்றது தான் இவ்நிலஅதிர்வுமாகும். புவிக்கு ஏற்படுகின்ற வலுவை வெளியே எடுக்க முயற்சிக்கும் போது தான் நிலமும் அதிர்வுறுகின்றது. சிலியில் 1960இல் ஏற்பட்ட நில அதிர்வு 300 டிகிரி செல்சியஸ் வெப்பம் கொண்டதாகவும், நிலப்பிளவு 1000Km உடையதாகவும் இருந்துள்ளது.

தொடர்ச்சி 38ஆம் பக்கம்...

# கற்பனை கலந்த உண்மைக்கதை

## அலசல் அரங்கம் - 10

கிருஷாந்தன் கூறுகிறான்...

அடுத்த நாள் காலை விரைவாக எழும்பிக் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு இனி என்ன, நடக்குமோ என்ற ஏக்கத்தோடு யோசித்துக் கொண்டிருந்தேன். உயிருக்குப் பயந்து எவ்வளவோ கஷ்டப்பட்டு கனடாவுக்கு வந்தும் நிம்மதி யில்லையே என்பதை நினைத்த போது அழுகை அழுகையாக வந்தது. ஊரில் என்னை நம்பியிருக்கும் ஒரு குடும்பம், எனக்காகப் பணத்தை வாரி இறைத்த சித்தி. இவர்களுக்கு நான் என்ன சொல்லப் போகிறேன். எவ்வளவோ எதிர்பார்ப்புக் களோடு என்னை கனடாவுக்கு அனுப்பி வைத்தார்கள். இங்கு வந்து இப்படிச் சிக்கலில் மாட்டிக் கொண்டேன் என்று பல்வேறு எண்ணங்கள் மாறி மனதில் ஓடிக்கொண்டிருந்தன. 'நாய்க்கு நடுக் கடலிலும் நக்குத் தண்ணியா? என அடிக்கடி அம்மா சொல்லும் வார்த்தைகள் எனக்கு ஞாபகத்துக்கு வந்தன. கோப்பி குடிக்கவும் மனமில்லாமல் அறையில் யோசித்துக் கொண்டிருந்தேன். யாரோ கதவில் தட்டுஞ் சத்தங்கேட்டது. கதவைத் திறந்தேன். ஜுலியா நின்று கொண்டிருந்தார். 'நீ நன்றாகப் பயந்து விட்டாய் என்று எனக்குத் தெரியும். இது எதிர்பாராதவிதமாய் நடந்தது. எதற்கும் யோசியாதே. இன்னும் அரை மணித்தியாலத்தில் பொலீஸ் வருவதாக எனக்கு போன் பண்ணினார்கள். நான் ஒரு மொழி பெயர்பாளரையும் கூடி வரச் சொன்னேன். எனவே நீ பயப்படாமல் எல்லாவற்றையும் சொல்லு. நானும் விசாரிக்கும் போது கூட இருப்பேன். கோப்பியைக் குடித்து தயாராக இரு என்று, ஆறுதல் வார்த்தைகள் கூறி சமயலறைக்குப் போனா. மொழி பெயர்க்கத் தமிழ் ஆள் வருவார். எனது பிரச்சினைகளை நான் அவரோடு கதைக்கலாமென்பதை நினைந்து ஓரளவு மனவாறுதல் அடைந்தேன். எதற்கும் கோப்பியைக் குடிப்போம் என நினைத்துக் கொண்டு சமயலறைக்குப் போனேன்.

வீட்டுக்கு முன்னால் ஒரு வான் வந்து நின்றது. அதிலிருந்து சாரிகா (CAS உத்தியோகத்தர்) ஒரு முதியவர், ஒரு பொலீஸ்காரன் எல்லோரும் வந்தனர். நான் வரவேற்பறையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் ஜுலியா இறங்கி வந்து கதவைத் திறந்து அவர்களை வரவேற்றார். எல்லோரும் வரவேற்பறைக்குள் வந்தனர். சாரிகா என்னைக் கண்டதும் சிரித்துக் கொண்டே 'என்ன நீ மல்யுத்தம் செய்தாயோ' என்று பகிடியாகக் கேட்டார். நான் எதுவும் பேசாமல் எழுந்து நின்றேன். முதியவர் தான் மொழி பெயர்ப்பாளர் என்று அறிமுகஞ் செய்தார் சாரிகா. பொலீஸ் காரர் என்னையும் மொழி பெயர்ப்பாளரை யும் தனியாக அங்கிருந்த மேசைக்குக் கூட்டிச் சென்று இருக்கச் சொல்லி நடந்த விபரங்களை ஒளிக்காமல் சொல்லுமாறு கேட்டார். முதியவர் எனக்கு இதைச் சொல்லிப் பயப்படாமல் எல்லா வற்றையும் சொல்லும்படி கூறினார். 'நான் நல்ல நித்திரையாக இருக்கும்போது எனது ஒரு காலை யாரோ இழுப்பது போன்றிருந்தது. நான் காலால் உதைத்தது ஞாபகத்திலிருக்கிறது. திடீரென பெரிய சத்தத்தோடு ஏதோ விழுந்தது போன்றிருந்தது. நான் உடனே எழுந்து லைட்டைப் போட்டேன். லீ மேசைக்குப் பக்கத்தில் விழுந்து கிடந்தான். நான் பயத்தோடு கதவைத் திறந்து வெளியே வந்தேன். அவன் விழுந்த சத்தங் கேட்டு ஜுலியாவும் பிறரும் கீழே வந்தனர். ஜுலியா திறந்திருந்த கதவுக் கூடாக லீ விழுந்து கிடப்பதையும் அசைவெதுவுமில்லாமல் இருப்பதையும் கண்டு என்னிடம் என்ன நடந்ததென்று கேட்டா, என்றேன். இதற்கிடையில் பொலீஸ்காரன் ஆறுதலாகச் சொல்ல வேண்டும் நான் குறிப்புகளை எடுக்கிறேன் என்றான். எனவே அதன்பிறகு நான் நான் நடந்ததைக் கூற அவ உள்ளே போய் அவன் பேச்சில்லாமல் கிடப்பதைப் பார்த்து 911 தொலைபேசிக்கு அடித்தா என்றேன். அதன் பிறகு நடந்தவற்றைத் தனக்குத் தெரியுமென்றான் பொலீஸ்காரன். மொழி பெயர்ப்பாளர் இடைக்கிடை எனக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிக்கொண்டிருந்தனர். அப்போது ஜுலியாவையும் சாரிகாவையும் வைத்துப் பொலீஸ்காரன் ஏதோ கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தான்.

என்னைப்பற்றிய விபரங்களை முதியவர் அறிய முயற்சித்தார். நான் அதிகம் கூற விரும்பவில்லை. எனவே அவரும் அதை உணர்ந்து அதிகம் கேட்கவில்லை. அதிகம் நேரம் அவர்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அதன் பின் சாரிகா என்னைக் கூப்பிட்டு கல்லூரிக்கு இந்த விடயம் அறிவிக்கப்படும். எனவே என்னை வீட்டிலேயே இருக்கும்படி கூறினா. மேலும் லீயைப் பற்றிக் கல்லூரியிலும் பல புகார்கள் இருப்பதாகவும், ஜுலியாவுக்கு அவ சொல்லிக் கொண்டிருந்தா. எனக்கு அரைகுறையாக சொன்னது விளங்கியது. இது ஒரு எதிர்பாராத நிகழ்ச்சி என்பதால் பயப்படத் தேவையில்லை என்றாலும் லீ இன்னும் நினைவில்லாமல் இருப்பதால் வைத்திய பரிசோதனை அறிக்கை வந்தபின் தான் தாங்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாமெனவும் பொலீஸ்காரன் சொன்னார். சாரிகா தான் கல்லூரிக்குப் போய் நடந்த விபரங்களைக் கூறப் போவதாகவும் சொன்னார். ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்தின் பின் யாவரும் விடைபெற்றுச் சென்றார்கள். மொழி பெயர்ப்பாளர் போகும் போது சில புத்திமதிகள் கூறிச் சென்றார். பொலீஸ் காரர் கூப்பிட்டால் தான் தேவையான போது வருவதாகவும் கூறிச் சென்றார். அவர்கள் போன பின்பு ஜுலியா என்னோடு ஆறுதலாகக் கதைத்தார். லீயின் நிலமையில் முன்னேற்றமில்லையென்றும் பிடரிப் பக்கம் அடிபட்டதால் அவனுக்குச் சுயநினைவில்லையென்றும் வைத்திய பரிசோதனை அறிக்கையைப் பொறுத்தே எனது நிலைமை தீர்மானிக்கப்படும் என்று கூறினார். எனக்குப் பயம் அதிகமாகியது. சிலவேளை லீயின் நிலைமை மோசமானால் எனது நிலமையும் மோசமாகும் என்பதை நினைத்த போது பயம் அதிகமாகியது.

நடந்ததைச் சித்திக்கும் கூறுவதா வேண்டாமா எனபலமுறை யோசித்தேன். பிறகு ஜுலியாவின் ஆலோசனைப்படி சித்திக்குத் தொலைபேசி எடுத்தேன். நான் போன் எடுத்தபோது சித்தி வீட்டில் இல்லை. சித்தப்பாவோடு கதைத்தேன். அவர் கேட்டவுடன் அதிர்ச்சி அடைந்தார். மீண்டும் மீண்டும் ஏன் நீ அப்படி மோட்டு வேலை செய்தாய் என்று கேட்டார். நான் நடந்தவற்றை விபரமாகக் கூறி அவன் குடிபோதையிலிருந்ததால், தள்ளியவுடன் அப்படி விழுந்து விட்டான். இதைப் பொலீஸ்காரரும் சொன்னார் என்றேன். சித்திக்கு இதைச் சொன்னால் அவ பயந்து போவா, எதற்கும் நீ பயப்படாமல் நடப்பவற்றை எடுத்துச் சொல்லு. ஆனால் இங்கேயிருந்து நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. எங்களுக்குக் கனடா வருவதற்கும் போதிய பாஸ்போட் வசதி யில்லை. உனக்கு உதவி செய்ய எங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் விசாரித்துப் பார்க்கிறேன் என்று சொல்லி எனது போன் நம்பரைக் கேட்டு எழுதிக் கொண்டு ஆறுதல் வார்த்தைகள் கூறினார்.


பாடசாலையுமில்லை படிப்புமில்லை. வீட்டில் இருப்பது ஒரே கவலையாய் இருந்தது. தொலைக்காட்சியில் எவ்வளவு நேரம் நிகழ்ச்சிகள் பார்ப்பது. அதுவும் ஆங்கிலத்தில் பார்க்க அலுப்புத் தட்டியது. இடைக்கிடை பின்னேரத்தில் வெளியே போய் வந்தேன். மூன்றாம் நாள் ஜுலியாவுக்கு அழைப்பு வந்தது. லீயின் நிலைமை மோசமாகுவதாகவும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அவவுக்கு பொலிசார் கூறியிருக்கிறார்கள். அவ எனக்கு முழுவதையும் கூறாமல் லீயின் நிலைமை மோசமாக உள்ளது என்று மட்டும் கூறினா. எனக்கு விடயம் விளங்கியது. என்ன செய்யலாமெனப் பலமாக யோசித்தேன். வேறு வழியின்றி அந்த மொழிபெயர்ப்பாளரோடு தொடர்பு கொள்ளலாமென நினைத்தேன். ஆனால் என்னிடம் அவரது போன் நம்பர் இல்லை. ஜுலியாவைக் கேட்டேன். அவர் சாரிகாவோடு தொடர்பு கொள்ளலாமென யோசனை கூறினா. நாங்கள் போன் எடுத்தபோது அவ கந்தோரில் இல்லை எனக் கூறினார்கள். எனக்குப் பயம் கூடியது. சாப்பிடவும் மனமில்லை. சித்தியோடு பேச நினைத்தேன். ஆனால் அவவுக்கு விடயம் கூறவேண்டாமென சித்தப்பா சொன்னது நினைவுக்கு வந்தது. பின்னேரம் ஒரு வான் வந்து நின்றது. சாரிகாவும், மொழி பெயர்ப்பாளரும் வேறொரு பொலீஸ்காரரும் வந்தார்கள்.

**- துறையூரான் -**

நான் பயந்தது போல் ஆகிவிட்டது. அன்று போல் எல்லோரும் வரவேற்பறையில் கூடினார்கள். மருத்துவ அறிக்கையின்படி லீயின் பிற்பக்க மூளைப்பகுதி இரத்தக் குழாய் வெடித்து இரத்தம் கசிந்திருப்பதால் ஒரு பகுதிக்கு இரத்தம் போவது தடைப் பட்டிருப்பதாகவும் தற்போது அறுவைச் சிகிச்சை நடந்து கொண்டிருப்பதாகவும் பொலீஸ்காரர் சொல்லப் பெரியவர் எனக்குத் தமிழில் கூறினார். யாவரும் அமைதியாக இருந்தனர். லீயின் நிலைமை இவ்வாறிருப்பதால் சட்டப்படி தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத் தின் பிரகாரம், என்னைக் கைது செய்து, விளக்கமறியலில் வைக்கும்படி நீதிபதியின் கட்டளையைக் காட்டினார். எனக்கு மயக்கம் வரும்போல் இருந்தது. பெரியவர் ஆறுதல் கூறி நல்ல வழக்கறிஞரை வைத்து வாதாடி என்னைக் காப்பாற்ற வழிகள் செய்யப்படுமென்றார். எனக்கு வாழ்க்கை இருண்டு விட்டது போன்ற பிரமை ஏற்பட்டது. கைவிலங்கெது வும் மாட்டாமல் என்னை வானில் ஏற்றிக் கொண்டு போனார்கள். நான் கொலை காரனா இல்லையா என்பதை காலந்தான் பதில் சொல்லும்.

முற்றும்

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்
GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ M CAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

# நில அதிர்வுகள்...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

இதே போன்று அலாஸ்கா (1957) சுமாத்திரா (2004) வடக்கு அனட்டோலிய துருக்கி (1939) அலாஸ்காவில் Denali fault (2002) என்பவையும் இவ்வகை பாறைமுறிவுகளால் ஏற்பட்ட நில அதிர்வுகளாகும். கடந்த கால புவிச்சரித வரலாற்றில் இவை பதிவு பெற்றுள்ளன. புவியோட்டிற்கு (Earth crust) அடுத்துள்ள புவிப்பகுதி Lithosphere எனப்படும். இங்கிருந்தும் புவிநடுக்கம் எழலாம்.

இதுவரைப் பல்வேறு நில அதிர்வுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. After shock, blind thrust earthquake, cryoseism, deep - focus earthquake, doublet earth quake, earth quake swarm, fore shock, harmonic tremor, induced seismicity, inter plate earth quake, intraplate earth quake, megathrust earth quake, remotely triggered earth quake, submarine earth quake, tsunami earth quake, volcano tectonic earth qake என எத்தனையோ விதமானது இவை. பிள்ளைகளுக்கு பெயர் வைத்தது போல் எவ்வளவு பெயர்களில் இவை உள என்பது வியப்பினை தருகிறது.

பெருமளவு புவியோட்டு நில அதிர்வுகள் 10 கிலோ மீட்டர்களுக்கு மேலாகவே எழுகின்றன. 70க்கு குறைந்த அளவில் ஏற்படுபவை மேலானவை எனவும் 70-300 கி.மீட்டர்க்குள் மிதமானவை எனவும் கூறலாம். 300-700 கி.மீட்டர்கள் ஆழமானவை எனவும் கூறலாம். இதேவேளையில் புவியோட்டின் கீழ் உள்ள பகுதி Lithosphere என அழைக்கப்படும். இங்கிருந்து எரிமலைக் குழம்புகள் வெளியே வர முயற்சிக்கும். மக்மா எனப்படும் எரிமலைக்குழம்பு வெளியேறுகிறது. இவ் எரிமலை தோன்றுவதற்கு முன் எச்சரிக்கையாவும் இந்நில அதிர்வு ஏற்படலாம்.

எரிமலைகள் உருவாகும்நிலை (Volcanic activity) யிலும் அப்பகுதிகளில் புவியதிர்வு உண்டாகுவது இயல்பாகும். எரிமலையாக்கம் நடைபெறும் போது மக்மா குழம்பு இடம்பெயர ஆரம்பிக்கும். இவ்வாறான செயலுக்கு முன்பதாக புவிநடுக்கமும் ஏற்படுகிறது. இது உடனடியாக Seismometeres எனப்படும் புவியதிர்ச்சி பதிவு கருவிகளில் பதிவாகும். இதனைக் கொண்டும் ஏற்படக்கூடிய விளைவுகளை அறிந்து கொள்ளலாம்.

புவியோடுகள் பிளந்து விடுவதும் இவ்வாறான நில அதிர்வுகளின் விளைவாகும். பாறை முறிவுகளுக்கூடாக இடம்பெறும் இவ்வாறான புவியோடு பிளவுகள் (Ruptures) பெரும் ஆபத்தை தர வல்லவை. இவ்வாறான சம்பவங்கள் சுனாமியை தோற்றுவிக்க வல்லவை. ஒரு தடவை இப்பிளவுகள் ஏற்பட்டால் அவை தொடர்ந்தும் செல்ல கூடியவை. பல இடங்கள் காணாமலும் போய்விடலாம். ஆறுகள் கூட செயலிழந்து விடும் அல்லது திசைமாறி ஓடும். சில வேளைகளில் புவி நடுக்கம் ஒரு குவியலாக (Clusters) ஏற்படலாம். அதாவது ஓரிடத்தில் ஏற்பட்ட புவியதிர்வு அருகில் உள்ள பகுதிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். இந்த அதிர்ச்சிகளும் மிகவும் மோசமானவை. துருக்கியில் உள்ள வட அனரோலியன் பாறைமுறிவுகளில் 20 இடங்களில் புவி நடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

வருடமொன்றுக்கு 5 இலட்சம் நில அதிர்வுகள் உலகெங்கிலும் ஏற்படுகின்றன. எனினும், இதில் உணரப்பட்டவை 1 இலட்சம் மட்டுமேயாகும். மிக சிறிய புவிநடுக்கங்கள் கலிபோர்ணியா, அலாஸ்கா, எல்சல்வடோர், குவாட்டமாலா, சிலி, பெரு, இந்தோனேசியா, ஈரான், பாகிஸ்தான், போர்த்துக்கல், நியூசிலாந்து, கிறீஸ், இத்தாலி, இந்தியா ஆகிய நாடுகளில் ஏற்பட்டன. அத்துடன் 90 வீதமான நில நடுக்கங்கள் பசுபிக்கில்



உள்ள நெருப்பு வளையம்(Fire zone) பகுதியில் 40,000 கி.மீ நீளத்தில் ஏற்படுகின்றன. இதனை Pacific ring of fire என்பர். இது ஒரு குதிரைக் குளம்பு வடிவமான பகுதியாகும். இது பசுபிக் நில தட்டில் உள்ளவை. அதேபோன்று பெருமளவு புவியதிர்வுகள் இமயமலை பகுதிகளில் நிகழ்கின்றன. மெக்சிக்கோ நகரம், ரோக்கியோ, ரெகிரான் நகர்களும் ஆபத்தான பகுதிகளாகும் சிலவேளைகளில் ஒரு தனி புவியதிர்வு மூலம் 3 மில்லியன் மக்கள் கூட பாதிப்புறுவர்.

சிலவேளைகளில் நடைபெறும் புவியர்வுகளால் புவியோட்டு தட்டுகள் அசைந்து விடலாம். நிலக்கரி அகழ்வு எண்ணெய் அகழ்வு மூலம் இவ்வாறான ஆபத்துக்கள் ஏற்படலாம். சீனாவில் இவ்வாறாக ஏற்பட்ட நில அதிர்வால் 2008 இல் 69, 227 பேர் மரணமாயினர். இது உலகில் ஏற்பட்ட அழிவுகளில் 19ஆவது மோசமான நில அதிர்வாகும். இதேபோல அவுஸ்திரேலியாவில் நியூகாசில் நகரம் இவ்வாறான நிலக்கரி அகழ்வால் பாதிக்கப்பட்ட தொன்று. அங்கு மில்லியன் கணக்கான தொன் பாறைகள் அகற்றப்பட்டிருந்தன.

பொதுவாக புவியதிர்வு பதிவு கருவிகள் தூரத்திலிருந்தும் பதிவு செய்யக்கூடியவை. எவ்வளவு ஆழத்திலிருந்து வருகிறது என துல்லியமாக காட்டிவிடும். தற்போது றிச்ரர் அளவினை புதிதாக Moment Magnitude scale என குறிப்பிடுவர். அத்துடன் mercalli intensity scale என்ற அளவிலும் தயாரிக்கின்றனர். புவியதிர்வு பற்றிய அளவுகளை பல அலைகள் மூலம் கண்டறியலாம். Longitudinal p.waves, transverse s.waves, surface waves என கணிக்கின்றனர். ஆழம், தூரம் மூலம் எங்கிருந்து ஆரம்பிக்கின்றது என அறியலாம். எல்லா அலைகளும் புவியின் குழம்பு (Earth mantle) பகுதியூடாக வந்து விடும். அத்துடன் இதன் மூலம் இட அமைப்பு, சனத்தொகை பகுதி, புவிப்பகுதி, தூரம் எல்லாவற்றையும் அறிந்து முன்னெச்சரிக்கை செய்ய முடிகிறது.

புவிநடுக்கத்தின் அகோர விளைவுகள் கற்பனை பண்ண முடியாதவை. உள்ளேயுள்ள புவிப்பகுதி, புவிவெளியுருவியல், அமைப்பியல் எல்லாமே மாறிவிடும். அணைக்கட்டுகள், பாலங்கள், அணு உற்பத்தி நிலையங்கள் எல்லாமே உடைந்து விடும். புவிநடுக்கம் புயல், எரிமலை, கரையோர அலை எழுதல், காடுகள் தீப்பற்றல் மட்டுமன்றி நில சரிவுகளை உண்டாக்கும். இதில் சிக்கியவர்களை காப்பாற்றுவது கடினம். மண்ணோடு மண்ணாக போனவர்கள் இலட்சக்கணக்கானவர்கள். அத்துடன் மண் அமைப்பு பலவீனம் அடைந்து விடும். திடமான மண் திரவமாகிவிடும். இதனால் தப்பியுள்ள கட்டிடங்களுக்கும் பின்பு ஆபத்து ஏற்படலாம். உதாரணமாக 1964 இல் ஏற்பட்ட அலாஸ்கா நில அதிர்வினால் மண் பலமிழந்து போனதால் பல கட்டிடங்கள் நிலத்தில் விழுந்து மறைந்து விட்டன.

புவி அதிர்வுகளால் ஏற்படும் பெரிய ஆபத்து சுனாமி ஆகும். நீண்ட அலைகள் நீண்ட நேரமாகத் தொடர்ந்து நீரை தரைக்குள் கொண்டு வந்து விடுவதே இந்நிகழ்வாகும். 2004 டிசம்பரில் ஏற்பட்ட பாரிய சுனாமி இந்து சமுத்திர நாடுகளையே தாக்கியிருந்தது. 100கி.மீ உயரத்திற்கு அலைகள் எழுந்து 600-800 கிலோ மீட்டர் தூரத்திற்கு 373-497 மைல்கள் வேகத்தில் நகர்ந்து சென்றுள்ளது. இது கரையில் உள்ள கப்பல் தளங்கள், கட்டிங்களை அழித்து சென்றது. 7.5 மக்னிற்ரியூட் வலுவில் புவிநடுக்கம் ஏற்பட்டால் இவ் ஆபத்து ஏற்படலாம்.


புவிநடுக்கம் மூலம் வெள்ளப்பெருக்கு ஆபத்தும் ஏற்படலாம். ஏரிகள் எல்லாம் பெரிதாகி விடும். அணைக்கட்டுகள் உடைந்து விடும். எத்தனையோ நாடுகளில் நிலச் சரிவினால் பலர் உயிரிழந்தனர். வெள்ளப்பெருக்கால் 5 மில்லியன் மக்கள் பாதிப்புறுகின்றனர். இத்துடன் நூற்றுக்கணக்கான கிருமிகள் உண்டாகி நோய்கள் ஏற்பகின்றன. அடிப்படை உணவு இன்றி மன நோய்க்கும் உள்ளாகியுள்ளனர். திகில் (Panic) உளச்சோர்வு, உயரும் இன்சூரன்ஸ் பாதிப்பு என்பனவும் பிரச்சினைகளாகும்.

வரலாற்று ரீதியாக அதிக மக்களை காவு கொண்ட புவி அதிர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முதலாவது மிக பெரிய நில அதிர்வாக 1556 இல் சீனாவில் உள்ள Shaanxi மாகாணத்தில் ஏற்பட்டதனை குறிப்பிடலாம். 8 இலட்சம் பேர் இதில் இறந்துள்ளனர். சீனாவில் உள்ள Tangshan புவி நடுக்கம் 2 இலட்சத்து 40 ஆயிரம் முதல் 655000 மக்களை அழித்தது. கணக்கு கூட எடுக்க முடியவில்லை. 20ஆம் நூற்றாண்டில் பெரிய அழிவு இது.

1960 இல் சிலியில் இடம்பெற்ற பெரிய நில நடுக்கம் 9.5 மக்னிரியூட் ஆகும். 1964 மார்ச் 27 இல் Good friday earth quake அலாஸ்காவில் ஏற்பட்டது. இதுவும் பெரிய அளவினதாகும். இதேபோல 10 பெரிய புவி நடுக்கங்கள் பதிவில் உள. இதனை Megathrust earth quake என கூறுவர். பொதுவாக பெரிய அளவில் நிகழும் இப்புவி அதிர்வால் பெருமளவு மக்கள் கட்டிடங்கள் அழிவுற்றன. ஆயிரக்கணக்கான கி.மீ நிலங்கள் பாழாகின. மனித குலத்திற்கே ஆபத்தாயிற்று.

தற்போது எவ்வளவுதான் விஞ்ஞானம் வளர்ந்தாலும் திடீரென ஏற்படும் நில அதிர்வுகளை கண்டறிவது கடினமாகவே உளது. குறித்த மாதம், திகதி என்பவற்றில் கணிக்க முடிவதில்லை. அத்துடன் தற்போது Earth quake enginering துறை புதியதாக வந்துள்ளது. இவர்கள் மூலம் புதிய வீடுகளை கட்டும் முறைகள் உருவாகலாம். ஆபத்தான வேளைகளில் உதவுவது பற்றிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. வீடுகளின் காப்புறுதி திட்டங்களும் வலுப்பெறுகின்றன.

இன்றும் இவ்வாறான புவி அதிர்வுகள் கடவுளின் வேலை என்று கூறுபவர்களும் உளர். கிரேக்கநாட்டில் Poseidon என்ற காரணத்தால் கடவுள் நில அதிர்வை உண்டாக்குகிறார் என்ற நம்பிக்கை உள்ளது. ஜப்பானியர் Namazu என்ற பெரிய Catfish என்பதே புவி அதிர்வுக்கு காரணம் என நம்புகின்றனர். Kashima என்ற கடவுள் இதனை காப்பதாகவும் அது செயலிழந்தால் Namazu எழுந்து புவிஅதிர்வை ஏற்படுத்துவதாகவும் கூறுவர். இவை விஞ்ஞான உண்மைகள் அல்ல.



சிந்தனைப் பூக்கள்
எஸ். பத்மநாதன்

# முகநூல் நட்பு -சிறுகதை

கடந்த இதழ் தொடர்ச்சி....

ரதியும் மன்மதனும் தமது முகநூல் நட்பை, இருவரும் நேரில் சந்தித்த வுடன் இந்நட்பு இனியும் தொடர வாய்ப்பு இல்லை என்பதை உணர்ந்து கொண்டவர்களாக கொஞ்சம் நிம்மதி யுடன் வீடு வந்து சேர்ந்தார்கள். இருவருக்குமே மனதினுள் ஆச்சரியம். முகநூலில் விழுந்து விழுந்து தமது அன்பை பரிமாறியவர்கள் எப்படி நேரில் சந்தித்த பொழுது இவ்வளவு சங்கடத் துக்கு உள்ளாகினார்கள் என்பதே.

மெசேஞ்ஜெரில் ஒருவருடன் ஒருவர் உரையாடுகையில் ஓர் இனம் புரியாத ஈர்ப்பு கொண்டிருந்தனர். படங்களை பரிமாறிக் கொண்ட பொழுது இருவருமே ஒருவர் மேல் ஒருவர் கவர்ந்திழுக்கப் பட்டனர். ஆனால் அந்தக் கவர்ச்சி, ஈர்ப்பு என்பவை நேரில் சந்தித்த பொழுது அவர்கள் இருவருமே உணராததால் ஏமாற்றமே கொண்டனர். பரவாயில்லை வாழ்க்கை துணை என்று நினைத்தவர்கள் நல்ல காலம் முதல் சந்திப்பிலேயே தமது துணை மற்றவர் இல்லை என்பதை உணர்ந்தமை நன்மையே என்று மனதை தேற்றிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தனர்.

ரதி முகத்தை கழுவி விட்டு அம்மாவி டம் நேரே சென்றாள். அம்மா 'என்ன பிள்ளை ரதி எங்கேயம்மா போயிருந் தாய்? உன்ட நண்பி சுபா போன்ல உன்னை தேடினா. நீ அவவ தானே சந்திக்க போனனீ. அந்தப் பிள்ளை உன்ன காணாம இங்க போன் அடிச்சு பார்த்தா பிள்ளை. நீ அவள சந்திக்க ஏலாம போய்டுதோ? அம்மா கரிசனையாக கேட்டா. இல்லையம்மா நான் சுபாவ இன்றைக்கு சந்திக்கவில்லை. அம்மா அத விட்டுட்டு எனக்கு பசிக்குது. ஏதாவது தாங்கோமா' என்று சமாளித்தவாறே அம்மாவை கட்டிக் கொண்டாள் ரதி.

நல்ல காலம் இந்த மதனிடம் காதலில் விழாமல் தப்பித்து விட்டேன் என்று மனதினுள் நினைத்தும் கொண்டாள். 'பாவம் அம்மா என்னிடம் எவ்வளவு நம்பிக்கை கொண்டிருக்கிறா. நல்ல காலம் இனி பொய் சொல்ல தேவை வராது' என்று நிம்மதியானாள். 'சரி அம்மா நீங்க எனக்கு சாப்பாட எடுத்து வையுங்கோ நான் அதுக்குள்ள சுபாவோட கதைச்சுட்டு வாறன்' என்று நழுவினாள்.

மதன் அதேசமயம் வீடு சென்றவன் இருப்பு கொள்ளாமல் மீண்டும் தன் நண்பனை தேடிச்சென்றான். அவன் நண்பனுக்கு இவன் ரதியைப் பற்றி கூறியிருந்தமையினால் இவனைக் கண்டதும் நகைச்சுவையாகவே என்ன 'மச்சான் மன்மதன் ரதியை முகநூல் என்ற அம்பு விட்டு கவர்ந்து விட்டாயடா? எப்பொழுது உன் ரதியை எனக்கு அறிமுகம் செய்து வைக்க ப்போகிறாய்'? என்று கேட்டான். 'சும்மா போடா, அதெல்லாம் ஒன்றுமில்லை. ரதி பெயருக்கேற்ற வடிவு தான்டா. ஆனாலும் நேர பார்க்கையில் அவள் எனக்கு ஏற்றவள் தானா என்று சந்தேகமாக இருந்தது. நாம் இருவரும் நல்ல நண்பர்களாகவே பிரிந்து விட்டோம்'. "oh I am sorry மச்சான், ரதி இல்லாட்டி என்ன உனக்கு ராதிகா கிடைக்கும்'. நண்பன் வருண் தன் கணினியை திறந்து தன் முகநூல் பக்கம் போனான். மதனும் தன் கைதொலை பேசியை எடுத்து வழமை போன்று தன் முகநூலை ஒரு முறை பார்வையிட்டான். கண்கள் சுயமாகவே ரதி ஆன்லைனில் இருக்கிறாளா என்று தேடியது. அவள் இல்லை. oh என்று சிரித்து விட்டு மற்றைய பதிவுகளை பார்வையிட்டான்.

அடுத்த நாள் ரதி தன் முகநூலை திறந்தவுடன் தன்னையுமறியாமல் அவள் கண்கள் மதன் ஆன்லைனில் இருக்கிறானா என்றே தேடியது. அவனது பெயருக்கு முன் ஆன்லைனில் இருப்பதற்கான அறிகுறியாக பச்சை நிறத்தை கண்டவுடன் சிறிது நேரம் அதையே நோக்கினாள். அவள் மனதில் ஏதோ பிசைவது போன்று உணர்ந்தாள். நேரில் சந்திக்கையில் இல்லாத அந்த கவர்ச்சி ஏன் நான் இந்த முகநூலில் chat செய்யும்போது ஏற்பட்டது. அவளுக்கு அது புரியாத புதிராக இருந்தது. உடனே முகநூலை மூடி விட்டு பாடல்கள் கேட்கத் தொடங்கினாள்.

இவர்கள் இருவரும் சந்தித்து இரு நாட்கள் சென்று விட்டன. இருவரும் முகநூலை திறந்தவுடன் முதல் வேலை யாக ஆன்லைனில் இருக்கிறார்களா என்றே ஒருவரை ஒருவர் தேடினர். ஆனாலும் தொடர்பு கொள்ள மட்டும் இருவருமே முயலவில்லை. இந்நிலை யிலேயே மதனின் பிறந்த நாளும் வந்தது. ரதிக்கு இரண்டும் கெட்டான் நிலை. இப்பொழுது என்ன செய்வது? நான் அவனுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தா அவனை தேடுகிறது போல இருக்குமோ என்று சந்தேகமா இருந்தது அவளுக்கு. மதன் சும்மாவே னும் hi கூட இந்த கடந்த நாட்களில் கூறவில்லை அப்படியிருக்கையில் நான் ஏன் அவனுக்கு வழிய வேண்டும் என்று கொஞ்சம் யோசித்தாள்.

உடனேயே முகநூலில் பிறந்த நாள் கொண்டாடும் எல்லோருக்கும் நான் வாழ்த்து தெரிவிக்கிறேன். அதுபோல சாதாரணமாக தெரிவிப்பது அவ்வளவு தானே என்று தன்னையே சமாதானம் செய்து பிறந்த நாள் வாழ்த்துக்கள் என்று அவன் டைம்லைனில் எழுதி விட்டாள். அவள் எழுதிய அடுத்த நிமிடமே ரதியின் மெசெஞ்சேர் உள் பெட்டி மின்னியது. மதன் தான் ஏதோ எழுதியிருக்கிறான். ரதியின் இதய துடிப்பு வேகம் கொள்ள தொடங்கியது. திறப்பதா, வேண்டாமா என்று ஒரு கணம் தயங்கினாள். உடனே க்ளிக் செய்தாள். மெசெஞ்சேர் உள்பெட்டி திறந்தது.

'மிகவும் நன்றி ரதி. உங்கள் வாழ்த்து என்னை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. நீங்கள் எனக்கு வாழ்த்து கூறுவதனால் அழைப்பதாக நினைக்க வேண்டாம். நேற்றிலிருந்து எப்படி உங்களை தொடர்பு கொண்டு அழைக்கலாம் என்று யோசித்து கொண்டு இருந்தேன். உங்கள் நண்பி சுபாவையும் அழைத்துள்ளேன். ஆகவே மறுக்காது வரவேண்டும்'. ரதி தடுமாறினாள். 'இல்லை நான் வந்து'. 'என்று எழுத முதல் முந்திக்கொண்டு 'ரதி நீங்க என்ன சொல்ல வருகிறீர்கள் என்று எனக்கு விளங்குது. ஆனால் நாம் நண்பர்கள். ஆகவே கட்டாயம் வரவேண்டும், ரதி அங்கே சந்திக்கிறேன் இப்பொழுது நான் போக வேண்டும். சில ஆயத்தங்கள் செய்ய வேண்டியிருக்கு' என்று விடைபெற்றுக் கொண்டான். அவன் இணைப்பிலிருந்து சென்றதற்கான அறிகுறியாக பச்சை வெளிச்சமும் மறைந்தது.

ரதி மிக குழப்பத்தில் ஆழ்ந்தாள். அவளுக்கு ஏனோ மீண்டும் மதனை சந்திக்க தயக்கமாகவே இருந்தது. தன் கைதொலைபேசி அலற மீண்டும் மதன் தான் அழைக்கிறானோ என்று சிறு அச்சத்துடன் தொலைபேசியை எடுத்துப் பார்த்தாள். சுபாவின் பெயர் மின்னியது. எடுத்து என்ன சுபா? என்று கேட்கும் முன்னரே 'ரதி, நான் இன்றைக்கு மதன்ட பார்ட்டிக்கு என்ன அணியறது? ஜீன்ஸ்ஸா அல்லாட்டி கொஞ்சம் டிரஸ்சியா வெளிக் கிட வேணுமா? நீ என்ன போடபோறாய்?' என்று சுபா மிக ஆர்வமாக வினாவினாள். ரதி அவளை இடை மறித்து 'சுபா, நான் இன்னம் போவதைப்பற்றி தீர்மானிக்க வில்லை அதற்குள் நீ நான் என்ன போடப் போறன் என்று கேட்கிறாய்?. மதனின் பிறந்த நாளை கொண்டாட்டத்தில் பங்கு பெற எனக்கு விருப்பமில்லை சுபா' என்று இழுத்தாள். சுபா முந்திக்கொண்டு அந்த கதைக்கெல் லாம் இங்க இடமில்லை. நான் ஒரு நாலு மணி போல உன்ட வீட்ட நிற்பன். சரி இப்ப வைக்கிறன்' என்று அழைப்பை துண்டித்தாள்.

ரதி வேறு வழி இல்லாது பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கு ஆயத்தமானாள். அழகிய வெள்ளை நிற சட்டையில் உண்மையிலேயே ஒரு தேவதையைப் போல் காட்சி அளித்தாள் அவள். இவளைக் கண்ட சுபா 'அடியே ரதி, உன்னை பார்க்க எனக்கு பொறாமை யாக இருக்குதடி. உனக்கருகில் நான் இருந்தால் என் அழகு மங்கிவிடும். ஆனாலும் நான் உன் தோழி. ஆகவே சகித்து கொள்கிறேன்' என்று கேலி செய்தாள்.

அங்கே ரெஸ்டராண்டிலும் எல்லோரது பார்வையும் இவள் மேல் பாய்ந்து தமது மனதினுல் இவள் அழகி என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டனர். வருண் மதனை இடித்தான். மதன் ரதியைப் பார்த்தவாறே அவ்வளவுவாக நிச்சய மில்லாமலேயே 'இல்ல மச்சான், நாம் சும்மா நண்பர்கள் தான். வேறு ஒன்றுமில்லை' என்றான். எல்லோரும் சாப்பிட்டு விட்டு விடைபெறும் வேளையில் ரதியும் மதனிடம் விடைபெற வந்தாள். மதனும் 'ரதி உங்கள் வருகை என்னை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. எப்படி வந்தீர்கள்? நான் வேண்டுமென்றால் உங்களை ட்ரோப் பண்ணிவிடவா? என்று கேட்க ரதி உடனே மறுப்புடன் 'இல்லை இல்லை நான் எனது காரிலே தான் வந்தனாங்க. அதால பரவாயில்லை' என்று சிரித்தாள். மதனும் புன்சிரிப்புடன் விடை கொடுத்தான்.

அடுத்த நாள் ரதி முகநூலை திறந்தாள். மதன் ஆன்லைனில் இருந்தான். இவள் வருகையை எதிர்பார்த்து காத்திருந்தது போல் அவளது உள்பெட்டி மின்னியது. இவள் திறந்து பார்த்தாள். மதன் மீண்டும் இவள் வருகைக்கு நன்றி கூறியதுடன் நேற்று கவனமாக வீடு போய் சேர்ந்தாளா? என்று மிக கரிசனையுடன் கேட்டிருந்தான். ரதி தான் ஒரு பிரச்சனையு மின்றி வீடு போய் சேர்ந்ததாகவும் அழைப்புக்கும் நன்றி கூறினாள். சிறிது நேரம் அவர்கள் நண்பர்களைப்பற்றி அளவளாவி விட்டு விடைபெற்றனர்.

அடுத்தடுத்த நாட்களிலும் முகநூலில் இருவரும் chat பண்ண முயன்றனர். மீண்டும் அந்த சகஜ நிலை இவர்கள் இருவரிடமும் ஏற்பட்டது.


மதன் நன்றாக யோசித்துப்பார்த்தான். முகநூலில் தங்களுக்குள் இருக்கும் இந்த கவர்ச்சி ஏன் முதல் சந்திப்பில் தங்களிடம் ஏற்படவில்லை? ஆனால் அடுத்த முறை தனது பிறந்தநாளின் போது சந்தித்த பொழுது இருந்தது. மீண்டும் ரதியை எப்படியும் சந்திக்க முடிவெடுத்தான். ஆனால் எப்படி அவளை சம்மதிக்க வைப்பது என்பது தான் அவனுக்கு குழப்பமாக இருந்தது. நேரடியாக சந்திக்க வேண்டும் என்று கேட்டால் நிச்சயம் ரதி தயங்குவாள். வேறு முறையை தான் கையாள வேண்டும் என்று தீர்மானித்து கொண்டான். அவன் உடனே ரதியின் நண்பி சுபாவின் உதவியை பெறவும் தீர்மானித்துக் கொண்டான்.

சுபாவிற்கு நலமா? என்றும் முகநூலிலேயே செய்தியும் அனுப்பினான். ஆச்சரியத்துடன் சுபாவும் நலம் என்று பதில் அளித்தாள். மதன் தன்னிடம் இசைநிகழ்ச்சி ஒன்றிற்கு டிக்கட்டுகள் இருப்பதாவும் இவளையும் ரதியையும் பிறந்தநாள் கொண்டாட்டதிற்கு வருகை தந்தமைக்கு நன்றியாக அழைப்பு விடுத்தான். சுபாவும் சம்மதித்தாள். ஆனால் ரதி மதன் தன்னிடம் எதுவும் கூறாது



மீரா குகன்
ஜேர்மனி

தொடர்ச்சி 40ஆம் பக்கம்

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.

ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# தூறல்

## வானரன்

## த லெசன் (பாடம்) பல்கேரியா

மத்திய தர வர்க்கம் என்பது எதனை மையப்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது?



அவர்களிடமுள்ள சொத்தின் மதிப்பீட்டை முன்வைத்தா? அல்லது நிகர சொத்து (சொத்து - கடன்) னை முன்வைத்தா? இரண்டாவதாயின் பெரும்பாலான மத்திய தர வர்க்கத்தினரின் சொத்துக்கள் பூச்சியத்துக்கு அருகிலேயே உள்ளன. பெருகி வரும் மத்திய தர வர்க்கம் தங்கள் மீது பெரும் கடன் சுமைகளுடனேயே வாழ்கின்றது. இன்றைய முதலாளித்துவ வடிவம் இதனையே வரவேற்கின்றது. தங்களிடம் உள்ள சொத்துகளைக் காப்பாற்ற இவர்கள் எவ்வாறெல்லாம் முயற்சிக்கின்றார்கள்? இதனை மையப்படுத்தி வெளிவந்துள்ள பல்கேரிய படம் 'த லெசன்'.

ஒரு பாடசாலை ஆசிரியை, வகுப்பில் நடைபெறும் களவு ஒன்றை திருத்த முற்படுகின்றார். பாடசாலைக்கு வெளியே அவரது வாழ்க்கை வேறு விதமானது. அது யதார்த்தமானது. வீட்டின் மீதுள்ள கடனை முறையாகக் கட்ட முடியாததால், வீடு பறிபோகும் நிலை. அவளது கணவன் ஒரு வேலையில்லாதவன். அத்துடன் ஒரு நித்த குடிகாரன். தந்தை வேறு உலகத்தில் அவரை விட பல வயது இளம் பெண்ணுடன் வாழ்ந்து வருகின்றார். இவர்களையெல்லாம் நம்ப முடியாது எனத் தீர்மானிக்கும் ஆசிரியைக்கு வங்கியும் கைகொடுக்கவில்லை. இடைத் தரகர்களும் உதவவில்லை. பாடசாலையில் களவு எடுத்தல், ஒழுக்கமற்ற செயல் என்று கற்பிக்கும் ஆசிரியை நிஜ வாழ்வின் நிலையாமையை நிறுத்த வங்கியில் களவெடுக்கின்றார்.

ஒரு தொலைக்காட்சிச் செய்தியில் நடைபெற்ற வங்கிக் கொள்ளை பற்றி ஒளிபரப்பப்பட்ட செய்தியில், களவெடுத்தவர் ஓர் உயர் பாடசாலை ஆசிரியை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அச்செய்தியே இப்படத்தை எடுக்கக் காரணமாகவிருந்தது என இயக்குனர்கள் குறிப்பிடுகின்றனர். மத்தியதர வர்க்கத்தின் அவலங்களையும், இன்று குடும்பம் என்ற அமைப்பு பெண்கள் மீது பொருளாதாரச் சுமையை சுமத்தி வருகின்றது என்பதனையும் சுமையுடன் பதிவு செய்துள்ளது. இயக்குனர்கள் Kristina Grozeva, Petar Valchanov இது முதல் படம். ஒரு சமூக யதார்த்தத்தை அதன் துயர பரிமாணங்களுடன் பதிவு செய்துள்ளனர்.

## மன்கோரா (பேரு)




பொதுவாகவே பயணங்கள் சுவாரசியமானவை. வீதிகளில் வாகனத்தில் அல்லது பேரூந்தில் செல்லும் பொழுது, அப்புதிய சூழல், அங்கு உலாவரும் மக்கள், உறைவிடங்கள், வணிக நிறுவனங்கள் போன்றவற்றினை அவதானித்து, அச்சூழலின் பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றை கணிக்க முற்படுவது மற்றொரு சுவாரசியமான விடயம். பயணங்கள் எப்பொழுதும் விருப்பிற்குரியவை. பயணங்கள் பற்றிய படங்கள் அல்லது பயணங்கள் காட்சிகளாக விரியும் பொழுது, அங்கு தோன்றும் கதாபாத்திரங்களை விட, கடந்து செல்லும் சூழலே அதிக கவனத்தைப் பெறும்.

லீமா நகரின் இரவு விடுதியில் பெண்களுடன் உல்லாசமாக இருந்தபொழுது சன்டியாகோவிற்கு அந்த அதிர்ச்சியான செய்தி கிடைக்கின்றது. சன்டியாகோவின் தந்தை தற்கொலை செய்து விட்டார் என்பதே அச்செய்தி. செய்தியறிந்து சன்டியாகோவின் மாற்றுச் சகோதரி, தனது கணவனுடன் நியுயோர்க்கில் இருந்து லீமாவிற்கு வருகின்றார். லீமாவின் கடும் குளிரிலிருந்தும், மாற்றம் வேண்டியும் சன்டியாகோவுடன், மாற்றுச் சகோதரியும், கணவனும் மன்கோரா நகருக்கு பயணிக் கின்றனர். இடைநடுவில் ஒரு வழியில் மற்று என்ற வழிப்போக்கனும் இவர்களுடன் இணைந்து கொள்கின்றான்.

சன்டியாகோ அவனது மாற்றுச் சகோதரி, அவளது கணவன் மூவரும் வெவ்வேறான குண, பண்பாட்டு இயல்புகளைக் கொண்டவர்கள். வெவ்வேறு தொழில்கள் செய்பவர்கள். சன்டியாகோவிற்கும், மாற்றுச் சகோதரிக்குமிடையிலான நெருக்கம், அவளது கணவனுக்கு புழுக்கத்தைக் கொடுக்கின்றது. இம் மூவருக்குமிடையிலான உறவின் பரிமாணங்கள் விரிந்து செல்கின்றன. யதார்த்தத்திலிருந்து எம்மால் தப்பி ஓட முடியாது என்பதனை சன்டியாகோவின் பாத்திரம் தெளிவாகக் காட்டுகின்றது. இன்றைய சூழலில் நாம் பிரச்சினைகளிலிருந்து தப்பியோடவே முயற்சிக்கின்றோம். இதனையே இப்படமும் கேள்வியாக் கியுள்ளது. பின்னணி இசையும், ஒளிப் பதிவும் காட்சிகளுடன் எம்மையும் பயணிக்க வைக்கின்றது.

## ஜெருசலேத்துக்கான நுழைவு (சீட்டு)

ஜபீர் ஒரு பாலஸ்தீனியர். இவர் மேற்குக் கரைப் பிரதேசத்திலும், கிழக்கு ஜெருசலேத்திலும் வாழும் சிறுவர்களுக்குப் படங்கள் திரையிடுவதனை தனது பேரார்வமாகக் கொண்டுள்ளார். இவரது மனைவி பாலஸ்தீன முகாம்களில் உள்ளோருக்கு மருத்துவ உதவிகள் செய்யும் பணியினைச் செய்து வருகின்றார். மேற்குக் கரைக்கும், கிழக்கு ஜெருசலேத்துக்கும் பயணிப்பது என்பது இலகுவான காரியமல்ல. உங்களிடம் கார் இருப்பினும் எல்லையைத் தாண்டி காரில் பயணிக்க மறுத்துவிடுவார்கள். பல சோதனைச் சாவடிகள். படம் காட்டும் இயந்திரமும் பெரியது. இதனையும் கொண்டு பல தடைகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். அவற்றையெல்லாம் தாண்டித் தொடர்கின்றார். போப்ஸ் ரொ-யெலிட் நாயகனைப் போல் விடாது தொடர்கின்றார். இதன் விளைவு மனைவியுடன் செலவிடும் நேரம் மிகக் குறைவாகின்றது. ஒரு தடவை கிழக்கு ஜெருசலேத்தில் உள்ள Al-Dhesha முகாமில் உள்ள சிறுவர்களுக்கு படம் காட்டுவதற்கு ஒத்துக் கொள்கின்றார். முகாம் அமைந்துள்ள பகுதி இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே இஸ்ரேலிய கல்வி அமைச்சு படம் காட்டுவதற்கு அனுமதி மறுத்து விட்டது. இவர் எவ்வாறு தடைகளைக் கடந்தார் என்பதே மிகுதிப் பகுதி. 2002ல் படம் வெளிவந்திருந்தாலும் இன்றும் இதே நிலைதான் அங்குள்ளது. சோதனைச் சாவடிகளல்ல பாலஸ்தீனிய மக்களுக்கு சோதனையை ஏற்படுத்துபவை பாலஸ்தீனியப் பகுதிகளைச் சுற்ற அமைக்கப்பட்டுள்ள உயரமான மதில். இதனைக் காவல்காக்கும் இஸ்ரேலிய இராணுவம். ஒரு புறம் மேற்குக் கரை, இடையில் இஸ்ரேல் மறு கரையில் காசாப் பகுதி. நூற்றாண்டுகளாக பாலஸ்தீனியர்கள் படும் துயரத்துக்கு இப்படம் ஒரு துளியே. ஆனாலும் இயக்குனர் Rashid Masharawi தான் பட்ட துயரங்களை பதிவாக்கியுள்ளார். படம் பார்க்கும் பொழுது ஜபீர் படும் துயரங்களை மீறி இஸ்ரேல் அரசின் மீது கோபமே ஏற்படுகின்றது.

# முகநூல்...

39ஆம் பக்கத்தொடர்ச்சி

சுபாவிடம் பேசியது அவளுக்கு ஏதோ போல ஆகிவிட்டது. அவளை மெல்ல பொறாமை தீ பற்றிக்கொள்வது போல உணர்ந்தாள். 'ஒருவேளை மதன் தன் நண்பி சுபாவிடம் ஈடுபாடு கொண்டு விட்டானோ? அது தான் உண்மையாக இருக்கவேண்டும். அதனால்தான் அன்று அவன் தன் பிறந்தநாளுக்கு சுபாவிற்காக தான் என்னையும் அன்றும் அழைத்தானோ' ரதியின் மனம் மிகவும் சஞ்சலப்பட்டது.

மதன் மிகுந்த ஆவலுடன் இசைநிகழ்ச்சியின் வாயிலில் காத்திருந்தான். அவனது மனம் வேகமாக அடிக்க தொடங்கியது. நண்பன் வருணிடம் மட்டும் தான் உண்மையாகவே ரதியிடம் மனதை பறிகொடுத்து விட்டதையும் கொஞ்ச கொஞ்சமாக பழகி அவள் மனதை வெல்ல தான் தீர்மானித்திருப்பதாகவும் கூறினான். இசைநிகழ்ச்சி தொடங்கும் நேரமாகியும் ரதியின் வரவை காணாது மதன் கவலைபட தொடங்கினான்.

நிகழ்ச்சி தொடங்கி ஒரு 5 நிமிடம் கழித்து சுபா வந்து சேர்ந்தாள். பதட்டத்துடன் ரதி எங்கே என்று மதன் கேட்டதற்கு 'சுபாவோ எனக்கு காரணம் புரியவில்லை ஆனால் ரதி ஒரேயடியாக வருவதற்கு மறுத்து விட்டாள். அவள் ஏதோ மனவருத்தத்தில் இருந்தாள் என்று மட்டும் தெரிந்தது' சுபா கூறி முடிக்கும் முன்னரே மதன் 'வருண், சுபாவை உள்ளே அழைத்து சென்று நிகழ்ச்சியை பாருங்கள். நான் இதோ வருகிறேன்' என்று உடனே கிளம்பினான்.

ரதியின் வீட்டு வாசல் மணி அடிப்பதைகேட்டு அம்மா 'ரதி யாரோ வந்திருக்கிறினம் போல. போய் கதவ திறம்மா' என்று சமையல் அறையிலிருந்து கூக்குரலிட்டார். ரதியும் வேண்டாவெறுப்பாகவே கதவை திறந்தவள் அப்படியே அதிர்ச்சியில் உறைந்தாள். மதன் வெயர்க்க விறுவிறுக்க நின்றுகொண்டிருந்தான். ரதியை கண்டவுடன் சிறு புன்முறுவல் பூத்தான். 'என்ன ரதி உள்ளே அழைக்க மாட்டீர்களா? என்று கேட்கவும் அம்மாவும் 'யாரது ரதி?' என்று வரவும் சரியாக இருந்தது. மதன் ஆண்டி என் பெயர் மதன். ரதிக்கு மிகவும் தெரிந்த நண்பர். சும்மா உங்களைப் பார்த்து போகலாம் என்று வந்தேன்' என்றான்.

அன்றிலிருந்து மதன் ரதியின் வீட்டிற்கு அடிக்கடி வரும் விருந்தாளி ஆனான். மதன் மெல்ல மெல்லமாக ரதியை மட்டுமின்றி ரதியின் பெற்றோரின் மனதையும் தன் நற்குணங்களால் வென்றெடுத்தான். காலம் கனிந்த பின் இருவரது திருமணமும் கோலாகலமாக நடைபெற்றது.

சுபம்


**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)

# நடிகர் கமல்ஹாசனுக்கு செவாலியே விருது!

பிரான்ஸ்: நடிகர் கமல்ஹாசனுக்கு பிரான்ஸ் நாட்டின் செவாலியே விருது அறிவிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் நாட்டின் கலாச்சாரத்துறை அமைச்சகம் இந்த சங்கமும் வாழ்த்துத் தெரிவித்துள்ளது. செவாலிய விருது அறிவிக்கப்பட்டுள்ளதை யடுத்து கமலஹாசனுக்கு வாழ்த்துகள் வந்து குவிந்த வண்ணம் உள்ளன.



விருது அறிவிப்பை வெளியிட்டுள்ளது. சிறந்த நடிப்பாற்றலுக்காக கமல்ஹாசனுக்கு செவாலியே விருது வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கமல்ஹாசன், இனி நான் செய்ய உள்ள கலை இலக்கியப் பணிக்காக இந்த விருதை அர்ப்பணிக்கிறேன். மேலும் சிறு வயது முதலே என்னை ஆதரித்து வந்த ரசிகர்களுக்கு இந்த விருதை அர்ப்பணிக் கிறேன் என்றும் கமல் தெரிவித்துள்ளார்.

செவாலிய விருது பெற்றதன் மூலம் இந்தியத் திரையுலகிற்கு கமல் பெருமை சேர்த்துள்ளார் என தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் பாராட்டி உள்ளார். செவாலியே விருது தமிழ் திரையுலகிற்கு கிடைத்த அங்கீகாரம் என்று நடிகர் இயக்குநர் கே. எஸ். ரவிக்குமார் மற்றும் திரையுலகினர் கமலுக்கு வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

கமலஹாசன் இந்திய அரசிடம் பத்மஸ்ரீ, பத்மபூஷன் விருதுகளையும், மாநில அரசிடம் கலை மாமணி விருதையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. சிறந்த நடிகருக்கான தேசிய விருதை 3 முறையும், பிலிம்பேர் விருதை 19 முறையும் கமல் பெற்றுள்ளார். முன்னதாக நடிகர் திலகம் என்று போற்றப்படும் சிவாஜி கணேசனுக்கு 1997ம் ஆண்டு செவாலியே விருது வழங்கப்பட்டுள்ளது. தமிழ், கன்னடம், தெலுங்கு, இந்தி மற்றும் மலையாளப் படங்களில் கமலஹாசன் நடிப்பாற்றலை வெளிப்படுத்தி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# ஈரேழு தலைமுறை

நாம் முதல் தலைமுறை

| | |
|---|---|
| தந்தை + தாய் | இரண்டாம் தலைமுறை |
| பாட்டன் + பாட்டி | மூன்றாம் தலைமுறை |
| பூட்டன் + பூட்டி | நான்காம் தலைமுறை |
| ஓட்டன் + ஓட்டி | ஐந்தாம் தலைமுறை |
| சேயோன் + சேயோள் | ஆறாம் தலைமுறை |
| பரன் + பரை | ஏழாம் தலைமுறை |
| பரன் + பரை = | பரம்பரை |



ஒரு தலைமுறை சராசரியாக 60 வருடங்கள் என்று கொண்டால், ஏழு தலைமுறை 480 வருடங்கள். ஈரேழு தலைமுறை 960 வருடங்கள். (கிட்டத்தட்ட ஆயிரம் வருடங்கள்) ஆக, பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதன் பொருள் ஈரேழு பதினான்கு தலைமுறையாக என்று பொருள் வரும். வேறெந்த மொழிகளிலும் இப்படி உறவு முறைகள் இல்லை.

**இதுவும் தமிழுக்கு ஒரு தனிச்சிறப்பு**

# இயமன் துரோகி

மரணம் தேவையென்று
தற்கொலை மருத்துவ உதவியைக்
கேட்டபடி
மாறாத
மாற்ற முடியாத நோயாளர்
முதியோர் பலர்



கட்டிலில் படுத்திருக்க...
உயிர்காப்பு முகமூடி அணிந்தபடி
இன்றைக்கோ நாளைக்கோ எனக்
கை விடப்பட்ட
முற்றிய நோயாளர் பலர்
மேல் உலகம் போகப் பார்த்திருக்க...

வயது தொண்ணூறு கடந்தும்
"போய்ச்சேர வழி வராதாம்"
எனப்
பிள்ளைகளால்
புறக்கணிக்கப் பட்டோர் பலர்
வாய் புலம்பிக் கண் கலங்க...

நான்கு வயதில்
இனிய அன்னையை இழந்த
தவப்புதல்வனை
தனது அருமைத்தாயென
மகளொன்றைப் பெற்றெடுத்துத்
தாலாட்டிக்கொண்டிருந்த
தேசிய விருது பெற்ற மஹா கவிஞனை
நாற்பத்தோராம் இளவயதில்
நீ...
அழைத்துச் சென்றுவிட்டாய்.

இயமனே! துரோகி
இனிமேலாவது
எமது கண்ணீர்க் கடல் கண்டு
முதியோரின் ஏட்டுக்கட்டை
எடுத்துப் புரட்டு...


சுறுசுறுப்பாக நீதி நியாயமாக
உன் பணியைச் செய்

போ...
போ...



க.முத்துராஜா


உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
Niru BRAND®
Niru BRAND
SHERBET
Drink
with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
Niru BRAND
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ML
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வ்ர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.


IP
IP GOLDHOUSE LTD
Design your dreams with us
NEW TOWN PLAZA...
...STREET FEST
Aug 20 & 21, 2016
PLATINUM, ROSE GOLD WHITE GOLD YELOW GOLD DIAMOND BANDS SPECIALITY BANDS
பிரசித்திபெற்ற 22கரட் தங்கநகை விற்பனையாளர்கள்
40 New Delhi Drive Unit 56 Markham, Ontario L3S 0B5
Tel: (905) 554-5890




















**Free Real Estate Class - Call: 416.321.6969**










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

***www.vlambaram.com***

***www.tamilvanakkam.com***

